431

கதை மஞ்சரி.

தொ-32. எண்-13

30.6.61

DIGITIZED

JL
ஈ211, N30
N61·32.13
158427


சுதேசமித்திரன்
ஏப்ரல் 30-
காசு 25




இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை
சித்ரா,
மஹாராணி
சயானி
மற்றும்
தென்னாடெங்கும்





'இவளோட சட்டையை
மாத்தி நிமிஷ நாழிகூட ஆகலே
—பாத்தீங்களா அதுக்குள்ளார!'

'நல்லவேளை, எப்படியாப்பட்ட அழுக்கையும் தொலைச்சுக்கட்ட வழி இருக்கு என் கையிலே... ஸன்லைட்டைத்தான் சொல்றேன்...பளிச்சுன்னு வெளுப்பான சலவை -- சுத்தம்னு அதான்! நுரை தானே? வேண்டியமட்டும் கொழிச்சுக்கும்; கேக்கணுமா, சுளுவா முடிஞ்சிடும் வேலே. கண்டிப்பாச் சொல்றேன்: ஸன்லைட்டுக்கு மிஞ்சி இன்னொரு சோப்பை இனிமேலேதான் பாக்கணும்.'

பம்பாய் வாசியான ஸ்ரீமதி ஆத்மராம் செய்யும் சலவை: தூய, மென்மை வாய்ந்த ஸன்லைட் சலவை. ஸன்லைட் உங்கள் துணிகளையும் ஆதரிப்பதாக!

# ஸன்லைட்

*ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!*

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு S.29-X29 TM



# பொருளடக்கம்

Vol XXXII.] [No 13
பிலவ சித்திரை 18. ஏப்ரல் 30 '61

| | | |
|---|---|---|
| ஸ்ரீ சம்பத்தின் புதிய கட்சி | | 3 |
| வந்ததும் வராததும் | | 6 |
| காற்றுவழுக்கிலே | —ஊர்சுற்றி | 7 |
| வாழ்ந்திடும் கலையின் மேன்மையைக் கண்டேன்! | —எஸ். ஸ்ரீ சஹஸ்ரநாமம் | 10 |
| மன்னிப்பாய் | —மா. வளர்மதி | 15 |
| அனுபவத்தில் நிகழ்ந்த ஏழு நாடகங்கள் | —நூலம் | 17 |
| காதல் கண்களிலே இல்லை! | —தமிழ்வாணன் | 25 |
| பழமையின் மெருகு | —ஆ. ரா. இந்திரா | 33 |
| அந்திமாலை | —கிருஷ்ணா | 38 |
| குழந்தைக்கு உணவு | —ஜனககுமாரி | 48 |
| இருளில் ஒரு தாரகை | —ஆர்வி | 50 |
| அன்புள்ள அண்ணி | —கோ. கந்தசாமி | 57 |
| மணப்பெண் | —என். எஸ். சத்தியமூர்த்தி | 65 |
| நானும் நடிக்கிறேன்! | —டி. எம். சௌந்தரராஜன் | 72 |
| வாழும் வகை | —'பாரி' | 74 |
| எங்கள் கோரிக்கைகள்! | —ஏ. சுவாமிநாதன் | 80 |
| முள்ளை முள்ளாலே | —மயிலன் | 81 |
| வாத்தியாரம்மா | —ஸ்ரீவத்ஸன் | 89 |
| உண்டியல் கலய நாயனார் | —கோமதி ஸ்வாமிநாதன் | 96 |

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளி வரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

## புறக்கணிப்பு ஏனோ?

**தா**ய் மொழியைப் பாதுகாக்க —உரிய நிலையிலிருந்து அது புறக்கணிக்கப்படாமலிருக்க இலங்கையில் தமிழரசுக் கட்சியினர் கடந்த பல நாட்களாகப் போராட்டம் செய்து வருகின்றார்கள். அவர்களுடைய தியாகச் செயல்கள் அமைதிக்குக் களங்கம் தருகின்றன என்று கூறிக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர், இலங்கை ஆட்சியாளர். அங்கு, அவசர நிலைமை பிரகடனம் செய்து பெடரல் கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டுவிட்டது; பல தலைவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்துள்ளது. இவையெல்லாம் மனித உரிமைகளுக்கு முரண்பட்ட அடக்குமுறைச் செயல்களாகும். இதே நிலைமை நீடித்தால் தமிழ் மக்கள் நல்வாழ்விழந்து துன்புறுவார்கள்; கட்டாயமாகப் புகுத்தப்படக்கூடும் சிங்கள மொழிக்கு அவர்கள் கட்டுப்பட்டு சிங்களவராக மாறும் நிலை நேரும். இந்த நிலையில் இந்தியப் பிரதமர் நேருஜி இலங்கை அரசாங்கத்தின் செயல் முறைகளைக் கண்டிக்காமல் இருப்பது வியப்பும் கவலையும் தருகிறது. காங்கோ, லாவோஸ், க்யூபா முதலிய நாடுகளின் நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் நாள் தவறாமல் தம்முடைய கருத்துரைகளைக் கூறிவரும் அவர், அடுத்துள்ள இலங்கைத் தீவில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் எண்ணற்ற அடக்குமுறைகட்கு ஆளாகித் துன்பப்படுவதைப் பற்றி அறவே மௌனம் சாதிக்கிறார். இது தென்னாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் அதிருப்தியைத் தூண்டிவிட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற புகாருக்குப் பலம் கூட்டுகிறது இது. இந்த அதிருப்தி மறைய வேண்டுமானால், இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பற்றித் தம்முடைய கருத்துக்களை நேருஜி விரைவில் தெரிவிப்பதுடன் அங்கு அமைதியை நிலவச் செய்யவும் ஆவன செய்ய முற்பட வேண்டும்.

## ஸ்ரீ சம்பத்தின் புதிய கட்சி


**தி**ராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகிய ஸ்ரீ சம்பத் கோஷ்டியினர் அக்கழக நிர்வாகிகள்மீது பல குற்றச்சாட்டுகள் தொடுத்துள்ளனர். அவற்றில் எந்த அளவு உண்மையுண்டென இங்கு நாம் ஆராயப்போவதில்லை. ஆனால் 'தமிழ் தேசீயக் கட்சி' என்ற பெயரில் ஒரு புதுக் கட்சி ஆரம்பித்துள்ள ஸ்ரீ சம்பத் அதற்கு வகுத்திருக்கும் குறிக்கோள் இன்னும் பிரத்தியட்ச உணர்வுடன் கூடியதென்பதில் சந்தேகமில்லை. தி. மு. க. வலியுறுத்தும் 'சுதந்திர திராவிட நாடு' கோரிக்கை நடைமுறைக்கு ஒவ்வாதது; புத்தாம்

பசலியைச் சேர்ந்தது; இக்கோரிக்கைக்குத் தமிழ் நாட்டிலேயே ஆதரவு சொற்பம்; மைசூர், ஆந்திரம் போன்ற பகுதிகளில் இன்னும் குறைவு என்று ஸ்ரீ சம்பத் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே அவரது புதிய கட்சி அக்கோரிக்கையைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக இந்திய யூனியனிலிருந்து பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தமிழ் தேசிய தன்னுட்சியைத் தனது குறிக்கோளாகக் கொள்ளுமென அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பகுதியும் பிரியும் உரிமை பெறும் நிலையில், மத்திய சர்க்காருக்கும், பகுதிகளுக்கும் ஏற்படக் கூடிய தகராறுகள் காரணமாக இந்திய ஐக்கியம் வெகு சீக்கிரத்தில் ஒரு பழங்கதையாகிவிடும். இவ்வாறு நாடு சின்னுபின்னமாக விடுவது பொருளாதாரம், பந்தோபஸ்து முதலிய எல்லா வகைகளிலும் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்குமே போரபத்தாக முடியும். ஒற்றுமை சிதறுவதற்கு அடுத்த படி நாம் அடிமைக் குழியில் வீழ்வதுதான் என்பதைச் சரித்திரம் நமக்கு இடித்திடித்து உணர்த்துகிறது. மத்திய சர்க்கார் தங்கள் அதிகாரங்களில் இன்னும் பலவற்றை ராஜ்யங்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமெனக் கோரினல், அதற்குப் பொதுஜன ஆதரவைத் திரட்டி, அதை நிறைவேற்றிக்கொள்வது சாத்தியமே. அதற்குத் தேவையானபடி அரசியல் சட்டத்தைத் திருத்தியமைப்பது நமது ஜனப்பிரதிநிதிகளின் கையிலேயே இருக்கிறது. எந்த நிலையிலும் நாட்டின் ஒற்றுமைக்கு வெடி வைக்கக்கூடிய ஒரு குறிக்கோள் அல்லது செயல் முறைக்கு பொறுப்பு உணர்ச்சியுடன்கூடிய யாரும் ஆதரவு காட்டுவதற்கில்லை.



இந்தியாவில் புதிய அமெரிக்கத் தூதரான டாக்டர் கால்ப்ரெய்த் 18-ம் தேதி டில்லியில் ஜனுதிபதி ராஜேன்பாபுவிடம் தம் அத்தாட்சிப்பத்திரத்தைச்சமர்ப்பித்தார்.



## வந்ததும்

பண்டங்களின் உபயோகத்தைக் குறைக்கும் இந்த வரிகள் இல்லாவிட்டால் விலைகள் மேலும் அதிகரித்திருக்கும்.

—மொரார்ஜி தேசாய்.

மக்களிடமுள்ள பணத்தையெல்லாம் வரியாக வசூலித்துவிட்டால் மக்களிடம் பணமே இராது! விலைகளும் குப்புற விழும்!

ஃ ஃ ஃ

ஸ்திரீ எம். எல். ஏ. உபவாசமிருப்பாராம்.

—ஒரு பெங்களூர் (செய்தித்) தலைப்பு

எம். எல். ஏக்கள், அதிலும் ஸ்திரீகள் சத்தியாக்கிரகம் செய்ய விரும்பினால் உபவாசமிருப்பது பெரிதல்லை. மௌன விரதம் எடுத்துக்கொள்வதுதான் சரி!

ஃ ஃ ஃ

உபரி சர்க்கரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்கார் தீர்மானம் செய்துள்ளது.

—எஸ். கே பாட்டீல்

அப்படி ஏற்றுமதியாகும் சர்க்கரையுடன் வெண்மணலைக் கலக்கலாமா அல்லது படிக்காரத்தைப் பொடி செய்து கலக்கலாமா என்ற ஆராய்ச்சியில் பல மகானு'பாவர்'கள் ஈடுபடத் தொடங்கலாம்.

ஃ ஃ ஃ

செயற்கை வைரம் செதுக்கும் தொழிலுக்குச் சென்னை அரசாங்கம் பண உதவி செய்யும்.

—செய்தி

நாடகங்களிலும், சினிமாக்களிலும் இயற்கையாக இல்லாமல், செயற்கையாகத் 'தற்கொலை' செய்து கொள்பவர்கள் இந்தப் போலி வைரப் பொடியைத் தாராளமாகப் பயன்படுத்தலாம்!

ஃ ஃ ஃ

மழைக் காலத்தில் போக்குவரவுக்குச் சிரமமாக இருப்பதால், செய்யாறு—காஞ்சி பாதையில், பாலாற்றின்மீது மேம்பாலம் தேவை என்று சர்க்காரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

—ஒரு செய்தி

பாலாற்றைப்பற்றியவரை மேற்சொன்ன காரணத்தை எந்த சர்க்காரும் ஒப்புக்கொள்ளாது. கோடையில், கொதிக்கும் மணலிடமிருந்து விடுதலை பெற மேம்பாலம் வேண்டுமென்று கேட்டால் அரசினர் கருணை காட்டலாம்!

ஃ ஃ ஃ

வானவெளியிலிருந்து இறங்கியதும் தன்னை வரவேற்று உபசரித்த பெண்மணியின் வயது சுமார் 35 இருக்கும் என்று காகரின் தெரிவித்ததை மறுத்து அந்தப் பெண்மணி தன்னுடைய வயது 47 என்று பெருமையுடன் தெரிவித்தார்.

—மாஸ்கோ செய்தி

ஆகா! இதுவல்லவா உண்மையான புரட்சி? இத்தகைய புரட்சி நீடூழி வாழ்க!

ஃ ஃ ஃ

நாட்டில் ஒழுக்கத்தை வளர்க்கும் சினிமாப் படங்களையே எடுங்கள் என்று படாதிபதிகளுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் உபதேசம் செய்தார்.

—புது டில்லி செய்தி

சூட்டோடு சூடாக – நல்ல கதை கிடைக்காமல் திண்டாடும் படாதிபதிகள் – அவரையே ஒரு கதை எழுதித் தரும்படி கேட்டிருக்கலாமே!

ஃ ஃ ஃ

நாய்களுக்குக் கருத்தடை செய்யப்படுமா என்று நகராட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டபோது அப்படித் திட்டம் ஒன்றும் இல்லை என்று மேயர் பதில் சொன்னார்.

—சென்னை செய்தி

உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்காத நன்றியுள்ள நாய்களின் எண்ணிக்கை பெருகுவதைப் போய்த் தடை செய்யலாமா?

## வராததும்



# காற்று வாக்கிலே...

## என்ன அழகு, என்ன ஒழுங்கு!

அனைவரையும் ஆட்டி வைப்பது அரசியல் – ஆவதும் அதனாலே; அழிவதும் அதனாலே. அநேக சந்தர்ப்பங்களில் அது பலே தமாஷ். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அல்ல; வேடிக்கை பார்க்கிறவர்களுக்கு. சொல்லுக்கும், செயலுக்கும் முரண்பாடும், முன்னுக்குப்பின் முரண்பாடும் முற்றிலும் விநோதமாக, விசித்திரமாக, வெகு சுவாரஸ்யமாக இருக்கும்.

வகுப்புவாத, பிற்போக்குக் கட்சிகளுடன் காங்கிரஸ் தேர்தல் ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு எதுவும் செய்து கொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் அக்கிராசனர் சமீபத்தில் அபிப்பிராயம் தெரிவித்தார். காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியும் அதனை ஆமோதித்துள்ளது. பார் புகழும் பண்டிதர் அக்கருத்தை ஆதரித்துள்ளார். இதில் அதிசயம் எதுவுமில்லை. நெடுநாட்களாகவே அவர் இவ்வாறுதான் கூறி வருகிறார். வகுப்புவாதக் கட்சிகளை வெட்டிவைக்க வேண்டும் என்று அவர் அநேகத் தடவைகள் ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார். அதுவும் முஸ்லிம் லீகைக் குறிப்பிடும்போதெல்லாம் அவருக்கு ஆவேசம் பிறந்துவிடும்.



பரஸ்பரம் குழிபறிக்க......

வகுப்புவாத நடவடிக்கைகளை நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ ஆதரிக்கும் காங்கிரஸ்காரர்களுக்குத் தேசீய ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கச் சற்றும் தகுதியில்லை என்று பார்லிமெண்டரி கட்சியின் தீர்மானம் கூறுகிறது. காங்கிரஸ் கூட்டாட்சி நடத்தும் கேரளத்தில் காங்கிரஸ் தலைவர்கள் முஸ்லிம் லீகுடன் சல்லாபமாக, உல்லாசமாக உறவாடுகின்றனர். கேரள ராஜ்யத்தைப் பொறுத்தமட்டிலும் முஸ்லிம் லீக் வகுப்புவாதக் கட்சியல்ல!

சமீபத்தில் திருச்சூரில் மாவட்ட முஸ்லிம் லீக் மகாநாடு நடைபெற்றது. காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகளின் மந்திரிகளும் அதில் ஆனந்தமாகக் கலந்து கொண்டனர். கேரள மாநிலத்தில் இம் மூன்று கட்சிகளும் பரஸ்பரம் ஒத்துழைப்பதன் அவசியத்தை அனைவரும் அறிவுறுத்தினர். திரை மறைவில் பரஸ்பரம் குழிபறிக்கமுயன்றாலும் பகிரங்கமாக ஒற்றுமைப் பேச்சுக்குக் குறைவில்லை. இதுதான் அரசியல்! கேரளத்தில் முஸ்லிம் லீக் வகுப்புவாத ஸ்தாபனமல்ல என்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சி மந்திரி கூறினார். அடுத்துப் பேசிய காங்கிரஸ் உதவிப் பிரதமர் அவரையும் மிஞ்சினார்; தேர்தலில் வகுப்புவாதக் கட்சிகளைத் தடை செய்யத் தீர்மானிக்கப்பட்டால், முதலில் வகுப்புவாதக் கட்சிகள் பற்றித் திட்டவட்டமாக விளக்கம் கூற வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். முஸ்லிம் லீக் சார்பில் அதைவிட அழகாக, நாசூக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசியிருக்க முடியாது.

காங்கிரஸ் அக்கிராசனர் விரும்புவது இதுதானா?

தேர்தல் ஜுரம் அன்றாடம் அதிகரித்து வருகிறது. ஏழைப் பாமரர், பாட்டாளி மக்களின் நலனில் அரசியல் தலைவர்களின் அக்கறை அபரிமிதமாகி வருகிறது. அதுவும் மாஜி மந்திரிகள்தான் அதிகமாக அங்கலாய்க்கிறார்கள். மத்திய சர்க்கார் முன்னாள் மந்திரியொருவர் சமீபத்தில் சென்னையில் தொழிலாளர் கூட்டத்தில் பேசினார். அவர் பேச்சைக் கேட்டவர்களுக்கு ஒரே ஆச்சரியம்; தங்கள் செவிகளையே நம்ப முடியவில்லை. தொழிலாளர் நலனில் அபாரமான பரிவு காட்டிய அந்த மாஜி மந்திரி சொன்னார்: உங்களுக்கு அவ்வப்போது ஊதிய உயர்வு கிடைத்தாலும் அது போதுமானதாக இருக்கிறதா? நீங்கள் பெறும் ஊதியம் எங்கே போகிறது? வியாபாரிகள் பறித்துக் கொள்கிறார்கள். 1952-ல் கண்ட்ரோல் இருந்த காலத்தில் அரிசி பத்தரை அணாவுக்கு விற்றது. இன்று ஒரு ரூபாய் ஏழு அணாவுக்கு விற்கிறது. எல்லா விலைகளுமே பொதுவாக ஏறிவிட்டன. 'நான் மத்திய மந்திரியாக இருந்தபோது விலைகள் அதிகம் ஏறவில்லை'. திட்டம் தீட்டும்போது, திட்ட காலத்தில் விலைவாசி ஏற்றங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும், நிர்ப்பந்தங்களையும் தடுக்கும் வழி முறைகளை ஆராயவேண்டும். அத்தகைய ஆபத்துக்களைத் தவிர்க்க வழி கண்ட பிறகே திட்டத்தை அமுலாக்க வேண்டும். 'ஆனால் இப்போதெல்லாம் மந்திரிகள் இவ்வாறு அக்கறை காட்டுவதில்லை' என்றார்.





ஆலைகளிடம் ஏராளமான ஸ்டாக்...

தவறிப் போய்க் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்திற்கு வந்துவிட்டோமா என்று மக்கள் கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தார்கள். இல்லை, பேசியவர் முன்னாள் மத்திய மந்திரியே. எல்லாம் தேர்தல் திருவிளையாடல்!

உணவுக் கட்டுப்பாடுகள் நீடித்து இருந்திருந்தால் விலைகள் குறைவாகவே இருந்திருக்கும் என்று தமிழ் நாட்டின் முதலமைச்சர் கருதுகிறார். மற்றபடி கஷ்டங்களெல்லாம் பழகிப் போயிருக்குமாம். அத்தியாவசியப் பண்டங்களின் அனாவசிய விலை ஏற்றத்தைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுதான் என்று அவர் எண்ணுகிறார். ஆகவே 'அவசியமான' விலையேற்றம் என்றும் ஒன்று இருப்பது தெரிகிறது. அந்த அவசியமான விலை ஏற்றத்திற்காகத்தான் இன்று சர்க்கரைக் கட்டுப்பாடுகள் நீடிக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டால் சர்க்கரை உற்பத்தித் தொழிலே சீர்குலைந்துவிடுமாம். நாட்டின் தேவையைவிட மிக மிக அதிகமாக இன்று சர்க்கரை உற்பத்தியாகிறது. ஆலைகளிடம் ஏராளமான ஸ்டாக் முடங்கிக் கிடக்கிறது. இன்றுள்ள சர்க்கரைக் கட்டுப்பாடுகளை ரத்து செய்துவிட்டால் சர்க்கரை விலை உடனே சரிந்துவிடும். ஆனால் மிகவும் வலிமை வாய்ந்த உத்தரப் பிரதேச சர்க்காரும், அந்தச் சர்க்காரையே ஆட்டி வைக்கும் ஆலை முதலாளிகளும், கரும்பு உற்பத்தியாளரும் சர்க்கரை விலைக் குறைப்பை விரும்பவில்லை. கட்டுப்பாடுகள் நீங்கக்கூடாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். சர்க்கரைக் கட்டுப்பாடுகளை நீடிப்பது என்று மத்திய சர்க்காரும் முடிவு செய்துவிட்டது. எதற்காக? விலை உயர்வு நீடிப்பதற்காக! ஆகா, என்ன அழகு! என்ன ஒழுங்கு! பேஷ், பேஷ்!

—ஊர்சுற்றி.





# வாழ்ந்திடும் கலையின் மேன்மையைக் கண்டேன்!



## 8. லிப்ஸிக் நாடகச்சாலைகள்.

எஸ்.வி.ஸஹஸ்ரநாமம்

கிழக்கு பெர்லினிலிருந்து லிப்ஸிக் என்ற நகரத்துக்கு ரயில் மார்க்கமாகப் புறப்பட்டோம். இரண்டடுக்கு மாடிகள் கொண்டது, அந்த ரயில் வண்டித் தொடர். மாடி பஸ் என்று சாதாரணமாகச் சொல்வார்களே அதைப்போல அந்தத் தொடரின் அமைப்பு இருக்கிறது. ரயில் நிலையங்களிலும், வீதிகளிலும் கூலிகளோ, யாசகம் எடுப்பவர்களோ இல்லாதது போற்றத்தக்கது. எவ்வளவு பணம் படைத்தவர்களானாலும் அவரவர்களுக்குரிய சாமான்களைத் தாங்களே எடுத்துக்கொண்டு ரயிலில் ஏறுவதும், இறங்குவதுமாகப் போய்க்கொண்டிருந்தனர். வயதானவர்கள்கூட கனமான சாமான்களைத் தூக்கி வண்டியின் மேல் தட்டில் வைத்தார்கள். அவர்கள் சிறிது கஷ்டப்படும் சமயத்தில் பிரயாணிகளில் வாலிபர்களாயிருப்பவர்கள் உதவி செய்கின்றனர்—எனக்கு இது மிகவும் பிடித்திருந்தது. தன் வேலையைச் செய்ய மற்றவர்களை ஏவிவிட்டுக்கொண்டே காலத்தைப் போக்கும் வாழ்க்கை வெறுப்பதற்குரியதுதானே?


மூன்று மணி நேரம் அந்த ரயில் வண்டியில் பிரயாணம் செய்தபின் லிப்ஸிக் ரயில் நிலையம் வந்தது. 27 பிளாட்பாரங்களைக் கொண்டது அந்த நிலையம். அதிலிருந்தவாறே சுற்றிலும் பார்த்தோம். பிரம்மாண்டமான கட்டிடங்களும், பெரிய சாலைகளும் சூழ்ந்துள்ள நகரத்தியில் அந்த நிலையம் உள்ளது. அதற்கு எதிர்ப்புறத்தில் அரை பர்லாங் தூரத்திற்குள் நாங்கள் தங்கவேண்டிய ஓட்டல் இருந்தது. எங்களுடைய சாமான்களை நாங்களே எடுத்துக்கொண்டு நடந்தே ஓட்டலுக்கு வந்து சேர்ந்தோம். சிறிது நேரம் ஓய்வெடுத்தபின் உணவருந்தி விட்டுக் காரில் புறப்பட்டோம். பல மணி நேரம் முக்கியமான வீதிகளின் வழியாகச் சென்று சில முக்கிய இடங்களைப் பார்த்தோம்.


அன்று மாலை 6–30 மணிக்கு நாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்குப் பக்கத்தில் இருந்த லிப்ஸிக் தியேட்டருக்குச் சென்று அங்கு இசை நாடகமொன்றைப் பார்த்தோம். அந்த நாடகச்சாலை புதிதாகக் கட்டப்பட்டதாகும். சென்ற வருடம் அக்டோபர் மாதம்தான் அதற்குத் திறப்பு விழா நடந்தது. அதற்குமுன் அதே இடத்தில் ஒரு நாடகச்சாலை இருந்ததாகவும் அது யுத்தத்தில் அழிக்கப்பட்டுவிடவே புதிய நாடகச்சாலை உருவாக்கப்பட்டது என்றும் தெரிந்துகொண்டோம்.

மறுநாள் காலையில் அந்தக் கட்டிடத்தின் அமைப்பாளரும், நாடகச்சாலைகளை நாதக்கட்டுடன் அமைப்பதில் நிபுணருமான ஹேமர்லிங் அவர்களைச் சந்தித்துப்பொதுவாக நாடகச்சாலைகள் அமைப்பு பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தோம். கிழக்கு ஐரோப்பா முழுவதும் மட்டுமல்ல, மேற்கு நாடுகளிலும் இவரைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நாடகச்சாலைகள் புதியதாய் அமைக்கும் இடங்களிலெல்லாம் அவை நாதக்கட்டுடன் நன்றாக அமையவேண்டுமென்பதற்காக இவரையழைத்து ஆலோசனை கேட்பது வழக்கம். சமீபத்தில் இந்தியாவில் கூட்டப்பட்டிருந்த நாடக மேடை விவாத அரங்கில்கூட இவர் வந்து கலந்துகொண்டிருந்தார். அப்போது கல்கத்தாவில் நாடக மேடை அமைப்பு பற்றிப் பயனுள்ள சொற்பொழிவாற்றியிருக்கிறார். எங்களுடன்கூட வந்திருந்த நண்பர் தபஸ் ஸென் அவர்கள் இவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த பொழுதுதான் இதைப்பற்றியெல்லாம் எனக்குத் தெரிந்தது.

லிப்ஸிக் நாடகச்சாலையின் உட்பகுதிகள் முழுவதையும் நன்றாகச் சுற்றிப் பார்த்தோம். ஒளி அமைப்புகள் வெகு நூதனமான முறையில் இருக்கக் கண்டோம். அந்த நாடகச்சாலையில் 1750 பேர் உட்காரும் கூடம் உள்ளது. ஒரு பால்கனி மட்டும் மக்கள் உட்காரும் கூடத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. சுற்றுப்புறமும் நான்கு பால்கனிகள் அமைத்து வைத்துள்ளனர். இவை தவிர ஆபீஸ் அலுவலகம், இசை ஒத்திகை பார்க்கும் கூடம், நாட்டியப்பயிற்சிக்கூடம், உடைக்கூடம், ஒப்பனைக் கலைஞர்கள் தங்குவதற்கு வசதியாக அறைகள் முதலியனவெல்லாம் நிறைந்த அளவில் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கின்றன. மாடியின் பின்பகுதியில் திறந்த வெளியாகப் பெரிய கூடம் ஒன்றுள்ளது. அதில் செயற்கைப் பூங்காவனமொன்றைச் சிருஷ்டித்திருக்கின்றனர். மின்சாரப் பகுதியின் தலைமைப் பதவியிலுள்ளவரான ஷுமென் என்பவரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அந்தப் பகுதியிலுள்ள சாதனங்களையும், அவற்றை உபயோகிக்கும் முறைகளையும் எங்களுக்கு விளக்கிச் சொல்ல ஏற்பாடு செய்தனர்.

அந்த மேடையின் முகட்டில் பதினொரு ஒளிச் சாளரங்கள் அமைத்துள்






'பெர்னுர்ட் ஆல்பஎஹவுஸ்.' என்ற நாடகத்தில் ஒரு காட்சி




'ஒயிட் பிளட்'டில் தாயும் குழந்தையும்

ளார்கள். சாதாரணமாக நாம் பகலில் முகட்டைப் பார்த்தால் அந்தச் சாளரங்கள் அமைந்திருப்பது தெரியாது. மேடையில் ஒளி பாய்ந்து வரும் போதுதான் அந்தச் சாளரங்கள் இருப்பது நமக்குத் தெரிகிறது. இதைப் போலவே இருபுறமும் பக்கவாட்டில் ஒளிச் சாளரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த மேடையின் வரைபடம் ஒன்றை அவர்களிடம் வாங்கிக் கொண்டு அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டோம்.

பிற்பகல் லிப்ஸிக் நகரத்திலுள்ள ஐந்து நாடகச்சாலைகளுக்கும் பொதுவான தொழில் பட்டறைக்கும் போய்ச் செயல் முறைகளையெல்லாம் பார்வையிட்டோம். அதில் மொத்தம் 110 பணியாட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இசை நாடகத்திற்கும், நாட்டிய நாடகத்திற்கும்மட்டும்தான் ஏராளமான பொருட் செலவாகிறது. மேடைக் காட்சிகளைத் தயாரிப்பதற்கும், பொதுவாக அங்கே தயாரிக்கப் படும் எல்லாக் காட்சிகளுக்கும் அவற்றின் மாதிரிப் படிவம் தயாரித்த பின்னர் தான் பெரிய உருவில் தயாரிக்கிறார்கள். அந்தப் பட்டறைக்குச் சம்பந்தப் பட்ட மேடைகளுக்கு வேண்டிய விளம்



'ஆர்ப்யூஸ்' நடன நாடகத்தில் ஒரு காட்சி.



ஹின்ஸ் பீபன்பெர்கர் என்பவரின் காட்சி ஜோடனைகளில் ஒன்று இது.

முடிந்த காரியம் !




பரப் போஸ்டர்கள் தயாரிக்கும் பகுதியும் உள்ளது. மேடையில் பின்னால் நீலநிற ஆகாயத்தைக் காட்டப் பயன்படுத்தும் படுதாவை, நடுவில் எந்தவிதமான ஒட்டுமில்லாமல் எவ்வளவு உயரம் எவ்வளவு நீளம் வேண்டுமானாலும் தயாரித்துக்கொள்கிறார்கள். அந்தத் துணி சுற்றி வைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய தூண் போன்ற சுருளைப் பார்த்துப் பிரமித்துப் போனோம். இப்படிப் பல பகுதிகள் உள்ளன. இவற்றை நிர்வாகம் செய்யும் டைரக்டருக்குச் சுமார் நாற்பது வயதுதானாகிறது. மேடையில் பல பகுதிகளில் பல வருஷ அனுபவம் வாய்ந்தவர் அவர். உதவித் தயாரிப்பாளராகவும், உதவி மேடை நிர்வாகியாகவும் பணியாற்றியவர்.

அன்று மாலை, லிப்ஸிக் நகரச் சிறிய மேடையில் 'வெள்ளை ரத்தம்' (ஒயிட் பிளட்) என்ற நாடகம் பார்த்தோம். ஒரே அங்கத்தில் எட்டு காட்சிகள் வந்தன. மேடை மிகவும் சிறியது. ரஸிகர்கள் அமரும் இடமும் மிகச் சிறியதுதான். சுமார் 350 பேர்தான் இக் கூடத்தில் அமரமுடியும். அமெரிக்கா தேசத்தைச்சார்ந்த ஒரு வாலிபரை, ஜெர்மனிய தேசத்துப் பெண்ணொருத்தி கணவனாகக் கொண்டுள்ளதால் ஏற்டும் போராட்டம்தான் இந்நாடகக் கதையின் கரு. பெண்ணின் தாய் தந்தையருக்கும் பெண்ணுக்கும் போராட்டம். யுத்தம் நடந்த சந்தர்ப்பத்தை யொட்டியே இந்தக் கதையின் சம்பவமும் வருகிறது. யுத்த சமயம் என்பதை ஒலியின் மூலமாக அறிவித்துவிடுகிறார்கள். நடிகர்களும் எட்டு பேர்தான் வருகிறார்கள். அந்த மேடையில் அந்த எட்டு பேரும் சேர்ந்து வரும்போது மிக நெருக்கடியாகத் தெரிகிறது. இருந்தும் அந்தச் சிறிய மேடையில் ஒரு வீட்டின் வரவேற்பு அறையை வெளியே செல்லும் வாயிலுடனும், உட்பகுதிக்குப் போகும் வாயில்களுடனும் இணைத்து வெகு அழகாக அமைத்து வைத்திருந்தார்கள். நாடகம் இரண்டரை மணி நேரத்தில் இனிய முடிவுடன்தான் முடிகிறது.

(தொடரும்)






# மன்னிப்பாய்!

பொழுதாகப் பொழுதாக வெயில் சாயும்
புது மலரின் மணம் பரப்பித் தென்றல்
[தோயும்

முழுதாக்கி முடிக்காத கவிதை ஒன்றை
முடிக்கின்ற எண்ணத்தில் அமர்ந்த போது
அழகுமிக்க ஆம்பலைப்போல் சிட்டு ஒன்றின்
அருங்காதல் கண்டதனில் ஈடுபட்டு
எழுதுகின்ற எண்ணம்தான் மறந்தே நானும்
எழிற்காட்சி தனிலொன்றி மயங்கி
[நின்றேன்

மிளிர்கின்ற ஆடிதன்னில் உருவைக் கண்டு
மீண்டுமொரு சிட்டென்றே அதனை எண்ணி
தளிர் போன்ற உடலசைத்து மெல்லச் சென்று
தணியாத காதலினால் அணைக்க எண்ணி
ஒளிர்கின்ற உடல்சோர உள்ளம் சோர
உயர்காதல் முடியாமல் வெட்கம் கொண்டு
தளர்வுற்றே தன்பெண்டின் அருகில் செல்லும்
தனித்திருந்து அத்தனையும் கண்டபெட்டை

வேற்றவரின் கரம்பட்ட மங்கை போல
வெகுண்டெழுந்து துடிதுடித்து ஓ! ஓ!
[வென்று
" மாற்றானின் தோட்டத்து மலரை மாந்தும்
மனிதரோ குல்வுதலால் அவர்கள் செயயும்
ஏற்றமிலாச் செயல்தன்னைச் செய்தாய் நீயும்"
என்றமொழி கேட்டவுடன் அஞ்சிமேலும்
மாற்றமேதும் கூறாமல் மனமும் நொந்து
'மதி கெட்டேன் மன்னிப்பாய்' என்றே
[கெஞ்சும்.

— பா. வளர்மதி



(1&2) தாம்பரத்தில், ஊனமடைந்த பெண்களின் பராமரிப்புக்காகக் கைத்தொழில் நிலையமொன்றை மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் தொடங்கிவைத்தார். (3) சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் ஸ்ரீ சம்பத் புதிய கட்சியின் லட்சியத்தை விளக்குகிறார். (4) சென்னை சமூக நலப்பணி பள்ளிப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றோரையும் தலைமைவகித்த ஸ்ரீ வி.வி. கிரியையும் படத்தில் காணலாம்.

# வான வீதியில் ஏழு நாடகங்கள்

நீலம்

ஆயிரம் பொய்களுக்கிடையே கல்யாணத்தை மெய்யாக்கி நடத்துபவருக்கு ஆகியிருக்கும் செலவைப்பற்றித் தண்டச் சோறு தின்றுவிட்டுப் போகும் அன்பர்களுக்குக் கவலை என்ன? 'டின்னர் சுகமில்லை' என்று கூசாமல் ஏசி விட்டுப் போவார்கள்.

சிமிண்டுக்கும், இரும்புக்கும் எவ்வளவு ஓட்டம்? கால்கடுக்க அல்லாடி ஒரு வீட்டைக் கட்டினால், நொடிப் பொழுதில் அதற்குப் பழுது சொல்ல எத்தனை பேர்? அப்படித் தொட்டதற்கெல்லாம் 'தொசுக்கு' சொல்லுபவர்களைப் பார்த்து 'நோ நோ' என்று மறுக்கவோ, 'ஷட் அப்' என்று வாயை அடைக்கவோ நம்மால் முடியாது. நிர்த்தாட்சண்யமாக அம்மாதிரி சொல்ல வேண்டுமானால் 'நோ, நோ' சோமசுந்தரமும் 'ஷட் அப்' சாந்தநாயகியும் படித்த பள்ளிக்கூடத்தில்போய்த்தான் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்!

யாரது அந்த 'நோ நோ' சோமசுந்தரம்? 'ஷட் அப்'என்ற பட்டம் பெற்ற சாந்தநாயகி யார்?' திருவாளர் அதிருஷ்டம்' அவர்களால் திருத்தப்பட்ட நான்கு விதகுணப் போக்குள்ள கோஷ்டியைச் சேர்ந்த இருவரே அவர்கள்!

சென்ற 14–ந் தேதி இரவு சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து நாடக வார விழாவின் முதல் நாடகமாகத் 'திருவாளர் அதிருஷ்டம்' ஒலிபரப்பாகியது. ஸ்ரீ கே. ஏ. தங்கவேலு குழுவினர் வான வீதியை வலம் வந்த இந்த நிகழ்ச்சியில் 'நோ நோ', 'ஷட் அப்' எனும் ஆங்கிலச் சொற்கள் சிதறிக் கொண்டிருந்தன. மிரட்டலான இந்த வார்த்தைகளுக்குப் பணிந்துவிடாமல் என்னைப் போல் எத்தனையோ பேர் நிகழ்ச்சியைக் 'கேட்டு திருவாளர் அதிருஷ்டத்துக்கு நேர்ந்த அலாதியான அனுபவத்துக்கு அனுதாபப்பட்டிருப்பார்கள்.

குரல் மாற்றம், சொல் ஒடிப்பு, ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ் அர்த்தம் தொனிக்கும் வண்ணம் பதப் பிரிவு, தும்மல், முக்கல், முனகல் முதலிய சகல உதவுபடிகளின் மூலமும் ஹாஸ்ய ரஸத்தைப் பிழிந்து தரவேண்டுமென்ற எண்ணம் நாடக அமைப்பில் இழையோடியிருந்தது. ஒலி ஓங்கி நின்ற கட்டங்களும் உண்டு. இவ்வளவுக்குப் பின்பாவது தன் உள்ளத்தைக் கவர்ந்த நங்கையை மணக்கலாம் என்று மனக்கோட்டை கட்டியிருந்த திருவாளர் அதிருஷ்டத்துக்கு, அதிருஷ்டம் அதனிஷ்டப்படி போய் விட்டது! அவரது காதலி சந்திரா, 'சந்திரன்' என்று பெயர் பெற்று ஆணாக மாறவே அவர் ஏமாந்தார். அந்த ஏமாற்றம்

அவருக்கு மட்டும் ஏகபோகமல்ல. நாடகம் கேட்ட நமக்கும் அதில் பங்கு உண்டென்பதில் திருவாளர் அதிருஷ்டம் திருப்திப் படலாம்!

குப்பை மேடாக இருந்தால் என்ன? அதில் மலர்கள் கொஞ்சும் குருக்கத்திக் கொடி படருவதில்லையா? அதைப் போலத் தெருக் கூத்துக்களில் தோன்றும் கறுப்பாயி என்பவளிடம் மனதைப் பறிகொடுத்து, தன்னையே நினைந்து நினைந்து உருகும் உன்னதப் பேரணங்கை உதறிவிட்டு, அற்புத கவிதைகளைப் புனைந்த நாடகப் பாத்திரம் இளம் கவிஞன் பத்மராஜன்.

கவிஞனின் கற்பனை, அவன் கண்ணும் கருத்தும் 'லயிக்கும் இடம், அவனது உள்ளப்போக்கு இவற்றையெல்லாம் சித்தரிக்கும் நாடகம் 'ரோஜாவின் அத்தர்'. சோக, ஏக்கப் பெருமூச்சுகளுக்கு இடமுள்ள இந்த நாடகத்தை வரைந்த ஸ்ரீ அரு. ராமநாதன் சுவையான வசனங்களைத் தொகுத்து அமைத்திருந்தார்.

பழைய கால நாவல், நாடகங்களுக்குத் தலைப்பிடும் பாணியில் 'ரோஜாவின் அத்தர்' அல்லது 'கறுப்பாயியிடம் கவிஞன் காதல்' என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்!

பிரதம நாடக பாத்திரமான பத்மராஜன், கறுப்பாயி, சாந்தா, அவளது சகோதரன் முதலிய பாகங்களை ஏற்றவர்கள் ஊக்கம் காட்டி நடித்தார்கள். இதைப் போன்ற கருத்துக்களை மையமாக்கி நாடக உருக் கொடுப்பது சிரமம். அந்தச் சிரமத்தை உணர்ந்து ரசிப்பது எல்லாருக்கும் எளிதல்ல. அதற்குப் பிரத்யேகமான உள்ளப்பாங்கு தேவை. 'ரோஜாவின் அத்த'ரையும் இதற்கு ஒரு சமீப உதாரணமாக சுட்டலாம்.

'பெற்றதெல்லாம் பிள்ளைகள்' என்ற மகுடமுள்ள 75 நிமிஷ நேர நாடகம் சென்னை ரேடியோ நாடக விழாவின் மூன்றாவது நிகழ்ச்சி. இதில் உண்மை விவசாயியின் உள்ளக்கிடக்கையைக் கண்டோம்; கள்ளமார்க்கெட்டுக்காரரின் கொள்ளை லாபமடிக்கும் சமூகத் துரோகச் செயல்களை எண்ணிக் குமுறினோம்; பணத்தாசை, நெறியற்ற வாழ்க்கை இவற்றின் பிடியிலேயிருந்து விடுபட்டு, பகைமை பாராட்டாது தீமைக்குப் பதில் நன்மை புரியும் சிறந்த பண்பின் தன்மையையும் கண்டோம்.

சத்தியம் தவறாத உத்தம வாழ்க்கையின் உண்மை ரூபத்தைச் சித்திரிக்கும் இந்த நாடகத்தில், கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் தமது பிரத்யேக முத்திரைகளைப் பதிவுறச் செய்திருந்த கட்டங்கள் பல. சம்பவங்கள், திருப்பங்கள், மாற்றங்கள் முதலியன மிகுந்ததால் நடித்தவர்களின் ஜாபிதாவும் வாக்காளர் ஜாபிதாமாதிரி நீண்டுவிட்டது!

ஸ்ரீ எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் அநாயசமாகப் பேசி, நடிக்கும் திறன் பெற்றவர். அந்தச்சரள பாவங்கள் இந்த நிகழ்ச்சியிலும் பொலிவுற்றன. 'குஹன்' தயாரித்த இந்த நாடகத்துக்கு ஈமனி சங்கர சாஸ்திரி இசை அமைத்திருந்தார்.

'ஓதாது உணர்ந்தவன்' என்ற இசை நாடகத்தைக் கேளாது அயர்ந்து போகாமல் கேட்ட பிறகே கண் அயர்ந்திருப்பார்கள். ரேடியோ நாடக விழாவில் நான்காவதாக விண்ணில் எழுந்த இந்த நாடகம் பக்த பிரஹ்லாதனின் சரிதையை விளக்குவதாகும்.






மேலே உட்கார்ந்திருப்பவர்:—எனக்கு வயது 55 ஆகிறது ஸார் இது வரையில் நான் யாருக்கும் தொந்தரவு தந்தது கிடையாது இப்போதுகூட நான் யாருக்கும் தொந்தரவு தரவில்லை பாருங்க...!

பாட்டும், எதிர்ப்பாட்டுமாகவே பாடித்தள்ளி விடிய விடிய அரிச்சந்திரா, நள தமயந்தி, மார்க்கண்டேயா போன்ற தெருக் கூத்துக்கள் ஒரு காலத்தில் தமிழகத்தில் பிரபலமுற்றிருந்தன. அவற்றைப் பார்த்து மகிழ்ந்தவர்களைத் தற்காலம் தேடினாலும் கிடைப்பது அபூர்வம். திறந்த வெளி அரங்குகளில் இசை நாடகங்கள், நடன நாடகங்கள் முதலியன நடப்பதற்கும் பழைய காலத்தில் நிகழ்ந்த தெருக் கூத்துகளுக்கும் வித்தியாசம் எவ்வளவோ உண்டு.

அந்தரத்தில் ஒலியின் மூலம் உந்தப்பட்ட 'ஓதாது உணர்ந்தவன்' எனும் இவ்விசை நாடகம் முழுக்க முழுக்க பாடல்களைக் கொண்டே புனையப்பட்ட நிகழ்ச்சி. இரணியன், லீலாவதி முதலிய பாத்திரமேற்றவர்கள் பாடல்களின் மூலமே தங்கள் பாகத்தைச் சித்திரித்தார்கள். பக்தலைப் பற்றியதால் சிரத்தையுடன் கேட்டிருப்பார்கள்.

பழைய காலத் தெருக் கூத்துப் பாடல்களையும் அவற்றின் மெட்டுகளையும் தேடிப்பிடித்து கோத்த இந்த நாடகத்தில் விறுவிறுப்புக்குப் பதிலாக ஓரளவு சுணக்கமே ஓங்கி நின்றது.

யதுகுல காம்போஜி, அடாணா, ஆரபி, செஞ்சுருட்டி, ஸஹானா, வராளி, ஆனந்த பைரவி, மோஹனம், கரகரப்பிரியா, முகாரி, வசந்தா, பிலஹரி முதலிய அநேகம் கர்நாடக ராகங்களில் பாடல்கள், தொகையறுக்கள் மெட்டமைந்திருந்தன. பிரஹ்லாதனுக்கு நேரும் இடுக்கண்ணைப் பற்றி அவள் தாய் ஆனந்த பைரவியில் இரங்கிப் பாடுவதும், இன்னொரு ராகத்தில் இரணியன் தன் மகனுக்குத் தண்டனை பிறப்பிப்பதும் நாடக சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமா என்பது வேறு விஷயம். பழமை இருந்த நிலைக்கு ஒரு 'ஸாம்பிள்' காட்ட வேண்டுமல்லவா? 'ஓதாது உணர்ந்தவன்' அதற்கு ஒரு ஸாம்பிள்!

மண்ணாசை பிடித்த இரு பண்ணைக்காரர்களின் உள்ளங்களிலே கள்ளம் புகுந்தது. அது கப்பும் கிளையும் கொண்டு விஷ விருட்சமாகி விளைத்த சீரழிவுகளைச் சித்திரிப்பது 'மண்ணின் குரல்'. 'ஜெகசிற்பியன்' சிருஷ்டித்த இந்த நாடகத்தில் 'உலகம் மாறவில்லை; அது எப்போதும் போல உருண்டை வடிவமாகவே

சுழலுகிறது; ஆனால் கண்டபடியெல்லாம் சுழலுவது மனிதர்களின் மனமே என்பது விவரிக்கப்படுகிறது. இந்தச் சுழற்சியில் பத்மாவதி தட்டாமாலை சுற்றுகிறாள். அவளைத் துணைக் கருவியாக்கிக்கொண்டு பண்ணைக்காரர்கள் பல திருவிளையாடல்களை நடத்தி, தங்கள் தங்கள் நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முயற்சி செய்கின்றனர். பத்மாவதி இரட்டை பண்ணையாருக்கும் பட்டை நாமம் சாத்தி விட்டுப் போய்விடுகிறாள். கடிகாரத்திலுள்ள இரு முட்கள் மாதிரி இரு யுவதிகள் இந்தச் சுழலில் சிக்கிக் கொள்கிறார்கள். உரமற்ற உழவர்கள் விழி பிதுங்கி நிற்கும் சந்தர்ப்பங்களும் நேருகின்றன. பலருடைய வாழ்வு குலைந்து, மனங்கள் அதிருகின்றன.

சீர்திருத்த நாடகமாக நடந்த இந்த நிகழ்ச்சியில் பல சம்பவங்கள் சுமந்து சங்கிலி போல பின்னிக்கொண்டிருந்தன.

இடைவெளி கொடாமல், வெட்டும், எதிர் வெட்டுமாக விழக்கூடிய சம்பவங்களின் பளுவை மனதில் தாங்கியபடிதான் நாடகத்தை செவியுற இயன்றது.

பாத்திரம் அறிந்து நடிக்கும் பண்புள்ள டி.கே.எஸ். சகோதரர்கள், சிவதாணு முதலியவர்களும் ஏனைய நடிக, நடிகையரும் தங்கள் தங்கள் பாகத்தைச் சிறப்பாக்கி 'ஜெகசிற்பிய'னின் ஒன்றே கால் மணி நாடகத்தைத் தளர்ந்து விடாமல் கவனித்துக் கொண்டார்கள்.

ஆர்வி அவர்களைப்பற்றியும் அவர் வரைந்த 'அணையா விளக்கு' தொடர்கதை குறித்தும் நமது வாரப் பதிப்பு அன்பர்களுக்கு அறிமுகம் தேவை இல்லை.

உணர்ச்சிகள் கொப்புளித்து, குமிழியிட்டவாறு, பாடி நகர்ந்து செல்லும் நதியைப்போல, அந்தக் கதையை நாவலாக ஆசிரியர் உருவாக்கியிருந்தார். ஜாதிக் கட்டுப்பாடு எனும் வேலியைக் கடந்த மாசற்ற உள்ளங்களிரண்டு உறவாடி சுடர் விளக்காகப் பிரகாசிக்கவிடாமல் வீசும் பேய்க் காற்று, சூறாவளி எல்லாம் அதில் உண்டு. ஊரார் ஏச்சு, தலைமுறை தர்ம சம்பிரதாயத்தில் ஊறிய தாயாரின் ஏக்கப் பெருமூச்சு இவற்றினால் அணைந்து போகாமல் மங்காத சுடருடன் பிரகாசிப்பது 'ஆர்வி' அமைத்த அணையா விளக்கு.

நாவலுக்கு நாடக உருவம் கொடுத்து ஆசிரியர் அதைச் செப்பனிட்டிருந்தார். நாடக விழாவில் ஆறாவதாக இடம் பெற்றிருந்த 'அணையா விளக்கு' தரத்திலும் நன்றாக விருந்தது.

பாத்திர, சம்பவங்களின் தொகையைக் குறைத்துத் தொகுத்து, 'டெம்போ' கெடாது ஆர்வத்தோடு கேட்டு ரஸிக்கும்படி நாடகம் அமைக்கப் பெற்றிருந்தது.

வசனத்தின் கருத்தை அனுபவித்து நடிகர்கள் சிறப்பாக உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கச் செய்தார்கள். பாப்பாவின் பாத்திரத்தை ஏற்றிருந்த சகுந்தலா முக்கியமான ஒவ்வொரு கட்டத்திலும் தமது திறமையைச் சிறக்கச் செய்தார். சந்தானத்தின் தாய் காவேரியாகப் பாகமேற்றவரின் குரல் அவரது வயோதிகத்திற்கேற்றவாறு அமைந்திருந்தால் பொருத்தமாகவிருந்திருக்கும். பேரன் கோபுவுடன் காவேரி சீறாடும் கட்டம் குறிப்பிடத் தக்கதாயிருந்தது.







## லைப்பாய் இருக்குமிடம்
## அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்

எல்லாம் இன்ப மயம் -- லைப்பாய் தேய்த்துக் குளிக்கும் நயம்! ஆஹாஹா ... கிளுகிளுக்கும் ஆரோக்கிய சுகம்! அன்றாட அழுக்கிலிருந்து நாம் தப்பமுடியாது; அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய் -- குடும்ப முழுமைக்கும் குன்றாத ஆரோக்கிய சுகம்!

L 83-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

சந்தானமாக வந்த மூர்த்தி, சிவசுவாமியாகத் தோன்றியவர், வேணுவாக வேடம் பூண்டவர் முதலியவர்களெல்லாம் தங்கள் தங்கள் பாகங்களை நன்கு நிர்வகித்தார்கள்.

இரண்டாம்தாரமாக வாழ்க்கைப்பட்டவளின் மனப்போக்கு, அவளது பேச்சைக் கேட்டு ஆடும் கணவன், மாற்றுந்தாயின் நிழலில் வளரும் மங்கைக்கு ஏற்படும் சோதனைகள், வேதனைகள், மஞ்சள் சரட்டின் மாண்பை அவள் உணர்ந்து போற்றுவது ஆகிய நிலைமைகளுக்கு இடம் வைத்து பூவாளூர் சுந்தரராமன் அவர்கள் எழுதிய 'திருட்டுத் தாலி' என்ற கதை கே. பாலசந்தரால் நாடக வடிவாக்கப்பட்டு ரேடியோ நாடக விழாவின் கடைசி நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்பட்டது. 'சுகி' அவர்கள் நன்கு தயாரித்திருந்த இந்த நாடகத்தில் இந்தியன் நேஷனல் ஆர்டிஸ்ட்ஸ் நடிக நடிகைகள் கலந்துகொண்டனர்.

பெண்மணிகள் மங்கள நாளாக எண்ணும் ஒரு வெள்ளிக்கிழமை இரவாகப் பார்த்து இந்த நிகழ்ச்சி இடம் பெறும்படி நேரிட்டு விட்டது. அன்றிரவில், 'கட்டிய தாலியை கழற்று' என்ற அதட்டல்களும் அதைத் தொடர்ந்து விக்கி விக்கி அழுகுரல் கிளம்புவதும், கொலை, கொலை என்ற ஆவேசப் பேச்சுகளும் காதில் விழுவது சஞ்சலமூட்டக் கூடிய விவகாரங்கள். ஆயினும் கட்டிய தாலிக்கு கேடு நேராமல், மங்களகரமாகவாவது முடிவேற்பட்டதே என்று குறிப்பாக மாங்கல்யத்தை உயர்வாக மதிக்கும் மாதர்கள் மனநிம்மதி அடைந்திருப்பார்கள். அம்மன நிம்மதிக்கேற்றவாறு நாடகத்தின் போக்கும் தரமும் அமைந்திருந்தன.

முக்கிய கதாபாத்திரமான கௌரி, அவளை மணந்த மு. து. பட்டாமணியக்காரர், அவரது அசட்டுப் பிள்ளை அனுஷம் கௌரியின் சிற்றன்னை கமலமாக நடித்தவர் முதலியவர்கள் ஈடுபாடு அதியாகவின்றி மிதமாகவிருந்தது.

கலக்கங்களில்லாமல், மகிழ்ச்சியால் மனம் நெகிழச் செய்யக் கூடிய நாடகங்கள் ரேடியோவில் அதிகமாக இடம்பெற வேண்டும். முக்கியமாக வானொலி நிகழ்ச்சிகளுள் இரவில் கடைசி நேரத்தில் நடக்கும் நாடகங்கள், நிகழ்ச்சிகள் இவையெல்லாம் மனநிம்மதியை உண்டாக்கக்கூடியனவாக அமைந்தால் அவை வரவேற்கப்படும்.



மந்திரி ஸ்ரீ கோபால ரெட்டியின் தலைமையில் தில்லி நாட்டியக் கலாலய மாணவியான குமாரி மீரா (எம். வேங்கடாசலத்தின் புதல்வி) அரங்கேற்ற நடனமாடியபோது எடுத்த படம்.



# குத்தியது ஊசி; கிடைத்தது...

- பத்தாயிரம் பவுன்கள்—ஊதியமாக!
- இரண்டாயிரம் கினிகள்—வழிச் செலவுக்காக!
- வைரச் சட்டம் போட்ட படம்—வெகுமதியாக!
- ஆண்டுக்கு ஐந்நூறு பவுன்—உபகாரச் சம்பளமாக!

ரஷ்யப் பேரரசி காதரினுவின் கரங்களைத் தன் கைகளால் பற்றிய படியே உற்று நோக்கிய தாமஸ் டிம்ஸ்டேல் என்னும் டாக்டர், 'உலகத்திலுள்ள அழகிகளுள் சிறந்தவராக நீங்கள் விளங்குகிறீர்கள்' என்று கூறினார். அதைக் கேட்டுப் பேரரசி உள்ளம் பூரித்துப் போனார்.

அம்மை நோய் எங்கும் பரவிக் கொடுமைகளை இழைத்தவண்ணமிருந்தது. அந்நோயால் பலர் பார்வையிழந்தனர். காதரினுவின் செவிகளில் அம்மையின் பயங்கர விளைவுகள் விழுந்தன. அவ்வளவுதான். பேரரசியாரின் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டது. அழகை அழித்து நலனைக் கெடுக்கும் கொடிய நோயிலிருந்து தப்புவதற்குரிய வழி யாது என்பதை ஆராய்வதில் அவர் ஈடுபட்டார். அவருடைய பார்வையில் டாக்டர் தாமஸ் டிம்ஸ்டேல் என்பவர் ஊசி குத்துவதுபற்றி எழுதிய நூல் பட்டது. உடனே அவரை அழைத்துத் தடுப்பு ஊசி குத்திக் கொள்ள விரும்பினார்.


டாக்டர் வரவழைக்கப்பட்டார். காதரின் அவரிடம் 'நான் உங்களை நம்புகிறேன். நோய் என்னை அணுகாதிருக்க உங்கள் சிகிச்சைமுறை பயன்படும் என்று எண்ணுகிறேன். எந்தக் காரணம் கொண்டாவது உங்கள் முயற்சியில் தோல்வியேற்பட்டுவிடுமானால், உடனே இந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிடுங்கள்' என்று கூறினார். டாக்டர் சிரித்துக்கொண்டே மருந்தை ஊசிமூலம் செலுத்தினார். நன்மைதான் விளைந்தது.

அரசியாருக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சி அவருக்கு இளமையை மிகுதியாகத் தந்துவிட்டது போன்றதொரு தோற்றத்தை அளித்தது. வைரங்கள் பதிக்கப்பெற்ற சட்டம் போடப்பட்ட தன்னுடைய படம் ஒன்றை டாக்டருக்கு அரசியார் அன்பளிப்பாகக் கொடுத்தார். ரஷ்ய நாட்டு அரசாங்க அடையாளத்தை அவருடைய கோட்டில் பொறிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். அரசியார் முன்னிலையில் ஒருவர் பெறக் கூடிய மிக உயர்ந்த பரிசு அதுதான்.

சில நாட்களுக்குப் பிறகு அவர் தம் ஊருக்குப் புறப்படத் தொடங்கினார். அப்போது அரசாங்க அதிகாரி ஒருவர் அவரிடம் வந்து, 'இரண்டாயிரம் கினிகள் உங்கள் போக்குவரவுச் செலவுக்குப் போதுமா டாக்டர்?' என்று கேட்டுக் கொண்டே இரண்டாயிரம் கினிகளை அவரிடம் அளித்தார். 'இதனை உங்களுக்குரிய ஊதியமாகக் கொடுக்கும்படி அரசியார் கூறினார்' என்று பத்தாயிரம் பவுன்களுக்கு உரிய 'செக்' ஒன்றை அவர் கையில் மற்றொரு அதிகாரி திணித்தார். 'நீங்கள் அறியமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். உங்களுக்கு உங்களுடைய ஆயுட்காலம் வரையிலும் ஆண்டொன்றுக்கு ஐந்நூறு பவுன்கள் உதவித் தொகையாக அளிக்கும்படி அரசியார் ஆணையிட்டுள்ளார்கள்' என்று பிறிதொரு அதிகாரி சொன்னார்.

1784-ஆம் ஆண்டில் டாக்டர் டிம்ஸ்டேல் இரண்டாம் முறையாக ரஷ்யாவுக்குச் சென்று அரசியாருக்கு ஊசி போட்டார். ஆனால் அதற்காக அவருக்கு புதிதாக ஏதும் கிடைத்துவிடவில்லை.

## 'எக்ஸ் பரிமெண்ட்!'




# காதல் கண்களிலே இல்லை


புரட்சி எழுத்தாளர்
தமிழ்வாணன்


'வேல் நம்பி, நீ எதுவுமே தெரியாததைப் போல் என்னிடம் நடிப்பதால், உனக்குப் புரிந்ததாக ஏன் காட்டிக்கொள்ளப் போகிறாய்? செம்மேனியனும் நிலாவழகியும் சேர்ந்து நிற்கும் புகைப்படத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன்' என்றார் பூவேந்தன்.

வேல்நம்பி நிமிர்ந்து பார்த்தான்.

பூவேந்தன் அவனையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டுப் பிறகு சொன்னார் : 'உங்கள் குழுவைச் சேர்ந்தவர்களில் ஒருவன் தான் செம்மேனியனும் நிலாவழகியும் சேர்ந்து நிற்கும்போது கடற்கரை ஓட்டலின் எதிரே புகைப்படம் எடுத்திருக்கிறான் நாகமாணிக்கத்திடம் காட்ட. நிலாவழகி உண்மையிலேயே செம்மேனியன் மீது காதல் கொண்டுவிட்டதால், காதல் மயக்கத்தில் செம்மேனியனிடம் எல்லா உண்மைகளையும் சிறிது சிறிதாக எடுத்துச் சொல்லிவிடுவாளோ என்ற அச்சம் வந்துவிட்டது நாகமாணிக்கத்துக்கு. அவர் நிலாவழகியைச்செம்மேனியனிடமிருந்து பிரிக்க முயன்றார், முடியவில்லை. நிலாவழகி பழைய தொடர்புகளை-அறுத்துக் கொண்டு செம்மேனியனுடன் புது வாழ்க்கை நடத்தத் திட்டமிட்டது அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இதனால் கொதிப்படைந்த அவர் உன்னை அனுப்பி நிலாவழகியைச் சுட்டுவிடும்படி சொன்னார். நிலாவழகியை நீ சுட்டுக் கொன்றுவிட்டாய்.'

அவன் பேசவில்லை.

'நாகமாணிக்கத்திடம் செம்மேனியனும் நிலாவழகியும் நிற்கும் புகைப் படத்தைக் காட்டப் புகைப்படம் எடுத்தவன், அந்தப் புகைப்படத்தை நாகமாணிக்கத்திடம் காட்டவில்லை. அதற்குக் காரணம், செம்மேனியனை மிரட்டிப் பணம் வாங்கப் புகைப்படம் எடுத்தவன் எண்ணிவிட்டதுதான். நிலாவழகியைப் பற்றி உண்மைகள் தெரிந்தால் செம்மேனியன் நிலாவழகியை உதறித்தள்ளிவிடுவான், அப்போது இந்தப் புகைப்படத்தைச் செம்மேனியனிடம் ஏகப்பட்ட விலைக்கு விற்கலாம் என்று எண்ணியதுதான். நாகமாணிக்கம் நிலாவழகியைக் கொலை செய்யும்படி உன்னிடம் கட்டளையிட்டதும், புகைப்படம் எடுத்தவர், இந்தப் புகைப்படத்தை வைத்துச் செம்மேனியனைக் கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தப்போவதாகப் பயமுறுத்திப் பணம் பறிக்கலாம் என்று எண்ணினர். நாகமாணிக்கத்தின் திட்டப்படி நிலா

வழகி சுடப்பட்டதும், ஆபத்தான சூழ்நிலையில் சிக்கிவிட்ட செம்மேனியன் தனது கிராமத்துக்கு ஓடிவிட்டார். புகைப்படம் எடுத்தவன் செம்மேனியனைக் கண்டுபிடித்து அவனை மிரட்டிப் பணம் வாங்க உங்கள் குழுவைச் சேர்ந்த மற்றொரு மனிதனிடம் புகைப்படத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த மற்றொரு மனிதன், தற்செயலாகப் பெங்களூருக்குப் போகும்போது வழியில் செம்மேனியனைக் கண்டுபிடித்து, பணத்துடன் வரும்படி மிரட்டியிருக்கிறான். புகைப்படத்தை வாங்கிவிட்டால்தான் தன் தலை தப்பும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்ட செம்மேனியன் அந்தப் புதுமனிதனைக் காத்திருக்கும்படிச் சொல்லிவிட்டுப் பணத்திற்காக வீட்டுக்கு ஓடியபோது, புதரின் மறைவில் அந்த மனிதன் காத்திருந்தான். அப்போது, நீ அந்த வழியாகப் பெங்களூருக்குப் போக வந்திருக்கிறாய். நாகமாணிக்கத்தின் ஆட்களில் ஒருவன் வழியில் நிற்பதைக் கண்டு அவனிடம் பேச்சுக் கொடுத்திருக்கிறாய். அவன், உன்னைக் கண்டதும் அஞ்சி, செம்மேனியனிடமிருந்து பறிக்கும் பணத்தில் பாதிக் கொடுப்பதாகவும், நாகமாணிக்கத்திடம் உண்மையைச் சொல்லவேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறான். நீ அவனுடன் புதரின் மறைவில் செம்மேனியனுக்காகக் காத்திருந்தபோது, உனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. நாகமாணிக்கத்தின் எதிரி எவராயிருந்தாலும் தன் எதிரி என்று எண்ணிவிட்ட நீ, சற்றும் எதிர்பாராத விதமாக அவனைக் குத்திக் கொன்றுவிட்டு, அவனிடம், நீ நிலாவழகியைக் கொன்றுவிட்டுக் கொண்டு வந்திருந்த தாமரை மொக்கு மோதிரத்தைப் போட்டுவிட்டு வந்துவிட்டாய். நிலாவழகியின் மோதிரம் அந்த மனிதனிடம் இருந்ததால், தன் காதலியைக் கொன்றவனைச் செம்மேனியன் கொலை செய்து விட்டதாக வழக்கு முடியட்டும் என்பது உன் எண்ணம். ஆனால், நான் இந்த வழக்கில் இறங்கி இவ்வளவு தீவிரமாக வேலை செய்வேன் என்பது உனக்குத் தெரியாது.'

வேல் நம்பி பேசாமல் பூவேந்தனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பூவேந்தன் சிறிது நேரம் சிந்தனை செய்துவிட்டு மேலும் தொடர்ந்தார்: 'நிலாவழகியின் கொலைக்குப்பின் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் கோமதியை அச்சுறுத்திவிட்டன. நிலாவழகிக்கு ஏற்பட்ட முடிவுதான் நமக்கும் என்று எண்ணிவிட்ட கோமதி எப்படி நாகமாணிக்கத்திடமிருந்து தப்புவது என்று எண்ணினாள். அவள் முன்பொரு தடவை தாய்மையை அடைந்தவள். மணமாகாமல் தாய்மையை அடைந்துவிட்ட அவள் அப்போதே நல்வழியில் திரும்ப முயன்றாள். பிள்ளை பிறந்ததும் தனது பிள்ளையுடன் வேறு எங்கேயாவது சென்று வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினாள். ஆனால் பிள்ளை பிறந்தபோதே, இறந்து பிறந்தது. பெரிதும் ஏமாற்றமடைந்த கோமதி இதனால் துன்பம் கொண்டு இறந்து பிறந்த தன் குழந்தையின் நினைவாகக் கிடந்தாள். தன் குழந்தை உயிருடன் இருந்தால் எப்படியிருப்பான் என்று கற்பனை செய்து கொண்டு, அவனுக்கு



வேண்டிய சட்டைகளைத் தைத்து மகிழ்ந்தாள்; மனோ வியாதி அவளை ஆட்கொண்டது. நாகமாணிக்கம் அவளை மாற்ற முயன்று தோல்வியடைந்து போனார். எப்போதும் கைப்பையில் குழந்தைக்கு உரிய சட்டைகளை வைத்துக்கொண்டிருப்பதும், மனோநிலையை அவளால் கட்டுப்படுத்த முடியாமல் மற்றப் பெண்களைப் போல அவள் வாழ விரும்புவதும் நாகமாணிக்கத்துக்குப் பிடிக்கவில்லை! ஆகையால், தன்னிடம் வந்து அடிக்கடி அவளை நல்வாழ்வு வாழ விடும்படிக் கேட்டுக்கொண்டிருந்த கோமதியை அவர் கொலை செய்துவிட முடிவு கட்டினார். கோமதியுடன் சம்பந்தப்பட்ட காதலர்களின் படங்களை அவள் அவரிடமிருந்து திரும்பப்பெற்று அவைகளை அழித்துவிட அவள் எண்ணினாள். நாகமாணிக்கம் புகைப்படங்களை அவளிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, உன்னை ஏவிவிட்டார். ஆனால் அவள் கைப்பையைச் செல்வரங்கம் கடத்தி வந்து என்னிடம் கொடுத்தது உங்களுக்குத் தெரியாது. கோமதியை அவள் வீட்டிலேயே தண்ணீரில் மூழ்கடித்துக் கடலில் கொண்டு வந்து போட்ட நீ, அவள் வீட்டிலிருந்து ஒரு கைப்பையையும் காலணிகளையும் கொண்டு வந்து கடற்கரையில் போட்டுவிட்டாய், இல்லையா?'

அவன் அப்போதும் பேசவில்லை!

'தூய வழியிலேயே பணம் தேடிக்கொண்டிருக்கும் நாகமாணிக்கம், தாமரை மொக்கு மோதிரத்தைப் பற்றி அறிந்ததும், என்மீது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார். அதற்குக் காரணம் வஞ்சிக்கொடிதான். வஞ்சிக்கொடி என்மீது காதல் கொண்டிருப்பதாகவும் அதனால்தான் கல்கத்தா பாங்கிலிருந்து காணாமல் போன நகைகளைக் கண்டுபிடிக்க எனக்குப் பணம் கொடுத்து உதவ முன்வந்ததாகவும் அவள் நாகமாணிக்கத்திடம் சொன்னதும், நாகமாணிக்கம் என் பக்கம் திரும்பினார். அந்த மோதிரத்தைப் பற்றியும் அவருக்கு அப்போதுதான் தான் உண்மை தெரிந்தது. அந்த மோதிரத்தை என்னிடமிருந்து பறிக்க எவரையோ ஓட்டலுக்கு அனுப்பியிருக்கிறார். வந்தவன் மோதிரத்துக்காக என் அறையை அலசிப் பார்த்திருக்கிறான். மோதிரம் கிடைக்கவில்லை. அதுதான் என் கையில் கிடந்ததே!'

**உள்ளதும் போச்சு!**



சென்னைப்பசு:—சிதம்பரத்திலேயிருந்து இங்கேபால் வருதாம். இனிமே நாம் ஏன் பால் கொடுக்கணும்!

அப்போது அவர் தன் கையைப் பார்த்துக்கொண்டார். கையில்—

மோதிரம் இல்லை!

வேல் நம்பி வியப்புடன் பார்த்தான்.

'அவசரப்படாதே! இன்னும் நான் கதையை முடிக்கவில்லை! ஓட்டல் அறையில் மோதிரத்தைத் தேடியவன், கோமதியின் கைப்பை என் அறையில் கிடப்பதைக் கண்டு, புகைப்படங்களை மட்டும் எடுத்துச் சென்றுவிட்டான். புகைப்படங்களை நான் கோமதியிடமிருந்து கிளப்பி விட்டேன் என்பதை உணர்ந்துகொண்ட நாகமாணிக்கம், தீவிரமாகச் செயலில் இறங்கினார். நான் நாகமாணிக்கத்தின் தாம்பரம் பங்களாவுக்குச் சென்றபோது, என்னை அவருடைய ஆட்கள் அடித்துப் போட்டுவிட்டு மோதிரத்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அந்த மோதிரம் இருந்தால்தான், அதன் வகையைச் சேர்ந்த மற்ற நகைகளைக் கண்டுபிடிக்க முடியும் என்பது நாகமாணிக்கத்தின் கருத்து. ஆனால், அவர் சரித்திரம் முழுவதும் இப்போது என்னிடம் இருக்கிறது! அந்தப் பங்களாவில் கண்டெடுத்த புகைப்படங்களுடன், மற்றும் சில முக்கியமான செய்திகளும் கிடைத்தன. அவைகளில், நாகமாணிக்கத்திடம் தொடர்பு கொண்டவர்கள் யார், அவர்கள் இதுவரையில் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்ற குறிப்புக்கள் உள்ளன. நாகமாணிக்கம் அகப்பட்டுக் கொண்டால், தன்னைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் சிக்க வைக்க வேண்டும் என்பது அவர் கருத்து போலிருக்கிறது. அவர் குழுவைச் சேர்ந்தவர்களின் பட்டியலில், உன் பெயர்தான் முதலில் இருக்கிறது! போதுமா?'



வேல்நம்பி நிமிர்ந்து உட்கார்ந்தான். 'நீங்கள் சொல்லுவது பொய்! சான்றுகள் இருந்தால் என்னை ஏன் விடுதலை செய்யப்போகிறார்கள் போலீஸார்? என்னை நீங்கள் மடக்கப் பார்க்கிறீர்கள்!' என்றான்.

சான்றுகளை இப்போதுதான் நான் உறுதிப்படுத்திக்கொண்



டேன். இப்படியே உன்னை மீண்டும் போலீஸ் ஸ்டேஷனில் தள்ளலாம்!' என்று சொல்லி விட்டுக் காரின் ஹாரனை விடாமல் அமுக்கினார். அடுத்த சில விநாடிகளில்—

வேல்நம்பி அஞ்சி இறங்கி ஓட ஆரம்பித்தான்.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து கான்ஸ்டபிள்களுடன் ஓடி வந்த இன்ஸ்பெக்டர் எம்பெருமான் வேல்நம்பியை மடக்கினார்.

பூவேந்தன் எம்பெருமானை அழைத்து 'அவனை ஸ்டேஷனிலேயே அடைத்து வையுங்கள். இப்போது நீங்கள் என்னுடன் வாருங்கள்' என்றார்.

'எங்கே?' என்றார் இன்ஸ்பெக்டர் எம்பெருமான்.

'வஞ்சிக்கொடியிடம் பேச வேண்டும். பிறகு நாகமாணிக்கத்திடம் பேசவேண்டும்.'

இன்ஸ்பெக்டர் எம்பெருமான் காரில் ஏறி உட்கார்ந்தார். கார் பறந்தது.

## 57

வஞ்சிக்கொடியின் பங்களாவை அடைந்தபோது—

சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

அவர்கள் கார் பங்களாவின் முன் நின்றபோது, பங்களாவுக்குள்ளிருந்து நாகமாணிக்கம் ஒரு கைப்பையுடன் ஓடிவந்தார். மண்ணும் புழுதியும் படிந்திருந்த அந்தத் தோல் பையை ஒரு கையில் பிடித்திருந்த அவர் மற்றொரு கையில் துப்பாக்கியைப் பிடித்திருந்தார். அவர் வெளியே வந்ததும்—

பூவேந்தன் கட்டென்று காரைக் கிளப்பி அவர் மீது மோதினார். அவர் கீழே விழுந்ததும்—

கால்களில் ஒன்று சக்கரத்தில் மாட்டிக்கொண்டது.



அவர் கத்தினார். கையிலிருந்த துப்பாக்கியும் கைப்பையும் கீழே விழுந்தன.

எம்பெருமான் ஓடிப்போய்த் துப்பாக்கியை எடுத்தார்.

பூவேந்தன் தோல்பையை எடுத்துப் பார்த்தார். உள்ளே—

அவ்வளவும் வைர நகைகள்!

கல்கத்தா பாங்கிலிருந்து காணாமல்போன நகைகள். அவைகளில்—

தாமரை மொக்கு மோதிரமும் இப்போது இருந்தது!




பூவேந்தன் நாகமாணிக்கத்தை இழுத்துப் போட்ட போது அவர் மூர்ச்சையாகி விட்டார்.

எம்பெருமானை வெளியே நிற்கும்படிச் சொல்லி விட்டு பூவேந்தன் உள்ளே விரைந்தார்.

பங்களாவில் எவருமில்லையா? வஞ்சிக்கொடி எங்கே?

ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டு சென்றார் அவர்.

பின் கட்டில் ஓர் அறையில்—

வஞ்சிக்கொடி கீழே விழுந்து கிடந்தாள். அவள்—

நெற்றியிலே துப்பாக்கிக் குண்டு துளைத்துச் சென்றிருந்தது. அழகே உருவான அவள் உருவம் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது.

அவள் அணிந்திருந்த ஆடைகளையும் உடைகளையும் பார்த்த போது அவள் எங்கேயோ வெளியில் புறப்பட ஆயத்தமாக இருந்தாள் என்பது புரிந்து விட்டது!

பக்கத்துச் சுவரில்—

ஒரு பெரிய பொத்தல் தெரிந்தது! இடிக்கப்பட்ட அந்தச் சுவரில்தான் அந்த நகைகள் இருந்தன என்பதைப் புரிந்து கொண்டார் பூவேந்தன். அவர் பங்களா முழுவதையும் தேடிப் பார்த்த போது வேறு எவரையும் காணோம்!

'நகைகளுடன் வஞ்சிக்கொடி தப்பி ஓட முயன்றிருக்கிறாள். அவள் நகைகளை வெளியில் எடுத்ததும், தற்செயலாக வந்த நாகமாணிக்கம் அவளைக்கொன்று விட்டு நகைகளுடன் ஓட முயன்றிருக்கிறார். நல்ல வேடிக்கைதான்! வஞ்சிக்கொடி நம்மையும் ஏமாற்றி விட்டாளே' என்று துள்ளியது பூவேந்தனின் மனம்.

அவர் வெளியே சென்று எம்பெருமானிடம் நடந்ததைச் சொன்னார். பிறகு—

ஆம்புலன்சுக்குத் தொலைபேசியில் செய்தி அனுப்பினார்.

நாகமாணிக்கம் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார். அவர் பூவேந்தனைக் கண்டதும், மெல்லச் சிரித்தார். 'பூவேந்தன்! ...பூவேந்தன்!' என்றார்.

'சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள். நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் நம்ப ஆயத்தமாக இருக்கிறோம்' என்றார் பூவேந்தன்.

'நான் தப்பிவிடலாம் என்று எண்ணினேன். அதற்குள் பிடித்துவிட்டீர்கள்! நகைகள் இந்தப் பங்களாவில் இருப்பது எனக்கே தெரியாது! வஞ்சிக்கொடி எல்லாரையும் ஏமாற்றி விட்டாள்! நகைகளைப் பற்றி அவள் சிறிதும் துன்பம் கொள்ளாதவளைப் போலப் பேசினாள். அவள் உங்களை ஏமாற்றவே உங்களுக்குப் பணம் கொடுத்து நகைகளைக் கண்டுபிடிக்கும்படி சொல்லிவிட்டு, என்னிடம் உங்களிடம் காதல் கொண்டிருப்பதாகச் சொன்னாள்! அவள் பணத்தைத் தவிர வேறு எவர்மீதும் காதல் கொள்ளவில்லை!' என்றார் நாகமாணிக்கம்.

'நகைகள் வஞ்சிக்கொடியிடம் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டார் பூவேந்தன்.

'எனக்குத் தெரியாது!'

'உங்களுக்குத் தெரியாவிட்டால் வேல் நம்பியை உளவறிய இங்கே காரோட்டியாக ஏன் அனுப்பினீர்கள்?'

'வஞ்சிக்கொடியிடம் எவ்வளவு பணமிருக்கிறது, இந்தப் பணமெல்லாம் எப்படி வந்தது, இப்போது எல்லாம் எங்கேயிருக்கிறது என்று அறியவே அவனை அனுப்பினேன். ஆனால் அவனால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை! வஞ்சிக்கொடியின் கணவர் என் நண்பர். அவர் நிறையப் பணத்தைச் செலவு செய்து வந்தார். அப்போது, ஒரு நாள் தற்



செயலாக அவர் நிலாவழகியை சந்தித்தபோது அவர் அன்பளிப்பாக அளித்த மோதிரம் அவர் கல்கத்தாவிலிருந்து கொண்டு வந்த நகைகளில் ஒன்று என்பது எவருக்குமே தெரியாது! நீங்கள் இந்த வழக்கில் ஈடுபட்டதும் தான் உண்மை தெரிந்தது. வஞ்சிக்கொடியின் கணவர் மோதிரத்தை நிலாவழகியிடம் கொடுத்தது வஞ்சிக்கொடிக்குத் தெரியாது! அந்த மோதிரத்தை அவள் உங்களிடம் பார்த்த போது, எப்படி அந்த மோதிரம் உங்களிடம் வந்தது என்று முழுதும் ஊகிக்க முடியாத அவள் உங்களை ஏமாற்ற நாடகம் நடத்தினாள்!' என்றார்.

'ஆமாம், உண்மையில் அவள் நாடகம்தான் நடத்தினாள். நேற்றிரவு நான் வந்திருந்தபோது கூட என்மீது காதல் கொண்டிருப்பதாக நாடகம் நடத்தினாள்!' என்றார் பின்னால் எவருக்கும் தெரியாமல் வந்து நின்ற செல்வரங்கம்.

'செல்வரங்கம், நீயா?' என்றார் பூவேந்தன்.

'ஆமாம்!' என்று சொல்லி விட்டு உள்ளே ஓடிய செல்வரங்கம் இறந்து கிடந்த வஞ்சிக்கொடியைக் கண்டதும்—

வாயடைத்து நின்றான்!

## 58

**கால்** முறிவுடன் கட்டிலில் மருத்துவ விடுதியில் படுத்திருந்த நாகமாணிக்கம் சொன்ன கதை ஏறக்குறைய பூவேந்தன் சொன்னவைகளைப் போலவே இருந்தது.

இன்ஸ்பெக்டர் எம்பெருமான் நாகமாணிக்கத்தின் குழுவைச் சேர்ந்தவர்களைப் பிடிக்கப் புறப்பட்டார்.

பூவேந்தனும் செல்வரங்கமும் வெளியே வந்தார்கள்.

செல்வரங்கம் சொன்னான்: 'வஞ்சிக்கொடியிடம் நேற்றிரவு நான் பேசிக்கொண்டிருந்தபோது, நீங்கள் எப்படியும் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் எல்லாவ றையும் கண்டுபிடிக்கப் போவ தாகவும், சான்றுகள் பல எல்லா வற்றிற்கும் கிடைத்திருப்பதா வும் சொன்னேன். அவள் அச்ச கொண்டு, உடனே இங்கிருந்து நழுவிவிட வேண்டும் என்று முடிவு கொண்டாள். விடிந்ததும் அவள் புறப்பட ஆயத்தமான போதுதான் நாகமாணிக்கம் குறுக்கிட்டிருக்கிறார். முடி இப்படி ஆகுமென்று நான் எண்ணவேயில்லை!'

பூவேந்தன் சிரித்தார்.

செல்வரங்கம் கேட்டான்: 'செம்மேனியனை நான் பம்ப யில் சந்திக்க வேண்டாமா?'

'வேண்டாம்! இன்று மாலை ப திரிகைகளில் முழுக்கதையு வெளிவரப்போகிறது. பம்பா பத்திரிகைகளிலும் செய்தி வ ததும், செம்மேனியன் தன கண்ணில்லாக் காதலியுட சென்னைக்கு வந்துவிடுவார்' என்றார் பூவேந்தன்.

'ஆமாம்! காதல் கண்களி இல்லை என்பதைக் கண்டுகொ டான் செம்மேனியன். உங்களு கும் செம்மேனியனின் தங்கை ஒளிக்கொடிக்கும் திருமண நடக்கும்போதே, அவர்களுடைய திருமணத்தையும் வைத்து கொள்ளும்படி நீங்கள்தா அரிய பிள்ளையிடம் சொல்ல வேண்டும்!' என்றான் செல்வரங்கம்.

பூவேந்தன் சிரித்தார்!

**(முற்றும்)**






**பு**த்தாண்டு பிறந்து விட்டது. 'செந்தாமரை விரிய, தேமாங்கொழுந்து தொழுகப்' புத்தாண்டிற்குக் கட்டியம் கூறிவந்த இளவேனில் இதற்குமுன் எத்தனையோ முறை கண்டிருந்தும் இன்று புத்தம் புதியதாய்த் தோன்றுகின்றது. இதுபோலத்தான் ஒரு தனி மனிதனின், ஓர் இனத்தின், ஒரு நாட்டின் சிறப்பும் கூட. இயல்பாக என்றும் வாழ்வு பெற்றுள்ள சிறப்புக்கள், நம் நினைவின் எழுச்சியால் திடீரென்று ளிச்சிடும்போது—அப்போது தான் தன் முறையாக அச்சிறப்புக்களை ணர்வது போன்ற துடிப்பு நம் மனத் ள் எழுகின்றது. இளவேனிலின் தளிர

கணம் இருந்த இடத்தில் மற் கணம் இராமல் அசைகின்றன. இ இந்தப் பந்தைத் தொடுகிறாள் ஒரு பந்து அவள் கையில் இருக்கிறது எ சொல்வதற்குள் எங்கேயோ அது சென்று, தரையில் விழுகிறது. 'இ தரையில் இருக்கிறது' என்று செ தற்குள் தரையைவிட்டு எழும்பி யத்தில் 'சிவ்'வென்றுபாய்கிறது.கை இல்லை, தரையில் இல்லை, ஆகாய இல்லை என்று சொல்லும்படி 'அவ் வேகமாக அந்தப் பந்து சுழ கொண்டிருக்கிறது.

'துன்னிவந்து கைத்தலத்து
இருந்ததில்லை; நீள்நிலம்
தன்னினின்றும் அந்தரத்து
எழுந்ததில்லை தானென'

து ஒளி வீச, பழந்தமிழ்ப் பெண் ரின் கல்விச் சிறப்பைக் காணலாமா? ழமைக்குப் பழமையாய்—புதுமைக் ப் புதுமையாய் இளவேனிலைப்போல் து விளங்குவதை உணரலாமா?

பண்டைத் தமிழ் இலக்கியம் என்னும் தேரில் ஏறிக் கண்ணிமைக்கும் நேரத்தில், காலப்பெரு வெள்ளத்தைப் பின்னோக்கிக் கடந்து பழந்தமிழ் நாட்டில் நிற்கிறோம். தேரிலிருந்து இறங்கியவுடனே, கலகலவென்று பெண்களின் சிரிப்பொலி காதில் விழுகிறது. திரும்பிப் பார்க்கிறோம். குன்றுகள் சூழ்ந்த புல்வெளி ஒன்றில், இளம் பெண்கள் கூட்டமாகக் கூடி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். வண்ணப்பந்துகள்,மேலும் கீழுமாகத் துள்ளித் துள்ளி, ஒரு

அந்தப் பந்து மாய நடனம் பு றது. பந்தை அடித்து விளை பெண், பந்தோடு சுழல்கிறாள். பூண்டிருக்கும் ஆபரணங்கள் சென்று சுடர்விடுகின்றன. அவள் ஓடுகிறாளா, பறக்கிறாளா இல்லை, னற் கொடி ஒன்று வானத்திலிரு இறங்கி வந்து ஆடுகிறதா?

'பின்னும் முன்னும் எங்கணும்
பெயர்ந்து வந்து எழுந்துலாய்
மின்னு மின் இளங்கொடி
வியன் நிலத்து இழிந்தென'

அவள் பந்தாடுகிறாள். பிறகு, இன்னொருத்தி, அதன்பின் மற்றொருத்தி, பின்னர் பலர் ஒன்று சேர்ந்து; இப்படியாகப் பந்துகளை வீசி, 'கலகல' வென்று சிரித்து விளையாடி, தம்மை மறந்து பாடிக்கொண்டு ஆடுகிறார்கள் பெண்கள்.

அருகிலிருந்து வேறொரு பாடல் காற்றில் மிதந்து வருகின்றது. அது ஊசற் பாடல். பெரிய ஆலமரம். அதன் விழுதுகளைப் பிணைத்துச் சிறு பலகை ஒன்றை உயரத்தில் தொங்கவிட்டிருக்கிறார்கள். ஒருத்தி பலகையை ஆட்டிவிட்டு, அதன் மேல் தாவி ஏறி அமர்கிறாள். தன் உடலை வளைத்து ஆட்டி, ஊஞ்சலை அசைத்து, வெகு வேகமாக மேலும், கீழும் போகும்படிச் செய்கிறாள். இன்னொருத்தி அருகிலே இருந்து பாடுகிறாள். பாட்டிற்கிசைய ஊஞ்சல் ஆட, ஊஞ்சலுக்கிசைய ஆடுகின்றவள் உடல், வளைந்து நிமிர்ந்து குழைய, காட்டு வெளியிலே ஊசல் வரிப் பாடலின் இனிமையும், அதனோடு ஆடும் பெண்ணின் எழிலும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன.



இதற்குள் விளையாட்டு நின்று விடுகிறது. 'நேரமாய் விட்டது. போக வேண்டும். போய் சமையல் பழக வேண்டும்' என்கிறாள் ஒருத்தி.

'அடி, இசையாசிரியர் வந்திருப்பார். நான் போகிறேன்' என்று புறப்படுகிறாள் வேறொருத்தி.

'வீட்டிலே வாசனைப் பொடி தீர்ந்து விட்டது; போய் இடிக்கவேண்டும்' என்கிறாள் இன்னொருத்தி.

பெண்கள் விளையாட்டை நிறுத்திவிட்டு, காட்டு வெளியிலிருந்து ஊரை நோக்கிப் புறப்படுகிறார்கள். போகும் வழியில் காமன்கோவில். அங்குச் சில பெண்கள் அம்மானை ஆடிக் கொண்டிருக்கிறார்கள். மூன்று, ஐந்து, ஏழு



காய்களை ஒரே காலத்தில் உயர எறிந்து தட்டி விட்டுச் சுழல வைத்து, ஆகாயத்தில் அம்மானை காய்களால் வண்ணக் கோலங்கள் வரைகிறார்கள். கோவிலுக்கு முன்னால், தரையிலே, இரு பெண்கள் பல வண்ணப் பொடி கொண்டு சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு அழகான கோலம்! அதைப் பார்த்துக்கொண்டே நின்றுவிடவேண்டும்போல் இருக்கிறது. பஞ்ச வர்ணக் கிளி! வளைந்த பவழ மூக்கு; மஞ்சளும், பச்சையும், நீலமும் கலந்து உறவாடும் சிறகுகள், மடித்த கால்கள், எங்கே தரையிலிருந்து தாவிப் பறந்து விடுமோ என்று தோன்றுகிறது. சித்திரக் கிளி. ஆனால் உயிர் கொஞ்சுகிறது!



பெண்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஊருக்கு வருகிறோம். அவர்கள் பேச்சிலிருந்து, மனை அரசியாக இருந்து குடும்பத்தைக் காப்பதற்கான அறிவுத்துறைகளில் இப்பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்பது தெரிகிறது. முதலிலே உடல் உறுதி. அதற்குத்தான் பந்தாட்டமும், ஊஞ்சலும், அம்மானையும். சில சமயங்களில் உரலிலே தானியங்களை இட்டுக் குத்தும் பயிற்சி. ஆனால் அனைத்தும் விளையாட்டு முறையிலே, பலர் ஒன்று கூடி ஆடுகின்ற முறையிலே அமைந்தவை. அனைத்திலும் இசை—அந்த அந்த விளையாட்டிற்குப் பொருத்தமான இசை, இடம் பெற்று, பயிற்சியைக் கவர்ச்சி நிறைந்ததாக மாற்றுகின்றது.

பிறகு அறிவுப் பயிற்சி. இது பெண்களுக்குரிய வாழ்க்கையோடு தொடர்பில்லாமல், ஏட்டைத் துருவும் வறட்டு நூல் அறிவாக அமையவில்லை. உணவு சமைத்தல், பருவ காலத்திற்குரிய உணவு எது என்று அறிதல், அந்த அளவுக்கு விஞ்ஞானமும், மருத்துவமும் பயிலுதல், குடும்பத் தலைவியாக இருந்து வீட்டில் அழகுக் கலையைப் பரப்புதற்குதவும் சித்திரக் கலை, மாலை தொடுத்தல், வாசனைப் பொருள் செய்தல் முதலியவற்றைப் பயிலல், நாட்டியம், இசை முதலியவற்றில் தேர்ச்சி பெறல், எல்லாவற்றிற்கும் மேலாக, கலைகளுக்கெல்லாம் கலையாகிய சொற்கலையைப் பயின்று, வினயமாக, செறிவாக, உள்ளக் கருத்தை வெளியிடப் பழகுதல் – இவையே பெண்களின் அறிவுத்துறை பயிற்சியாகப் பழங்காலத்தில் இருந்தன. வாழ்க்கையோடு ஒட்டி, அறிவை வளப்படுத்தும் அத்தகைய கல்வி, அழகுக் கலைகளோடு உள்ளத்தைப் பொருத்தி, கனிவைப் பயிராக்கியது. வாழும் வகையை மகளிர்க்குப் புகட்டியது.

இதோ, புறநானூறு என்னும் பாடல் தொகுதியில் வரும் ஒரு வீடு. வீட்டுத் தலைவன் அரசனுக்காகப் போரில் ஈடுபட்டு, வெற்றி பெற்று வீடு திரும்பி

யிருக்கிறாள். அவன் உடலெல்லாம் போரிலே ஏற்ற விழுப்புண். வீட்டுத் தலைவி தோழியைப் பார்த்துச் சொல்கிறாள். ‘அவருடைய வீரத்தால் -நெடுந் தகைமையால்- கிட்டிய புண் இது. காலில் உள்ள வீரக்கழல் மாத்திரமா, இந்தப் புண்ணும் அவருடைய வீரத்திற்கு அடையாளம். இந்தப் புண்ணை ஆற்றி அவருக்கு இதமளிக்க வேண்டும். என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? இலவந்தழையையும், வேப்பந் தழையையும் வீடெங்கும் செருகி வைப்பேன். இவை நோயைத் தணிக்கும் தன்மை வாய்ந்தவை. எங்கும் அகில் முதலிய வாசனைப் பொருள்களை எரித்து, நறுமணப்புகையை நிரப்புவேன். யாழையும், வேறு பல இசைக்கருவிகளையும் மீட்டி, அந்த இசையால் உடல் வேதனையை, அவர் மறக்கும்படிச் செய்து அந்த நிலையில் புண்ணை ஆற்றும் வெண்சிறு கடுகு முதலியவற்றால் ஆன மருந்துகளை அவருக்குத் தடவுவேன். அவருடைய உள்ளத்திற்கு எழுச்சியைத் தந்து, உடலுக்கு இதந் தரும் பண்களைக் குழலிலே வாசிப்பேன்' என்று சொல்கிறாள். இவள் மனைவிளக்காக இருப்பதற்குரிய கல்வியைப் பெற்றிருக்கிறாள் என்று சொல்லவும் வேண்டுமா?


பழங்காலத்தில் ஒரு சில மகளிர் ஒளவையாரைப்போல்- காக்கை பாடினியாரைப்போல் - சிறந்த புலமையைப் பெற்றிருந்தார்கள்; அரசர்களுக்கும், அறிஞர்களுக்கும்கூட உறுதிப் பொருள்களைப் பற்றிய அறிவு கொளுத்தும் பேராற்றலைப் பெற்றிருந்தார்கள். ஆனால், ஒவ்வொரு பெண்ணினுடைய இலட்சியமும் இது என்று சொல்வதற்கில்லை. அவ்வாறே, ஒரு சில மகளிர் ஆடல் பாடல்களில் - அழகுக் கலைகளில் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்று, ஒப்பற்ற கலைஞர்களாக விளங்கினார்கள். உண்மைதான். ஆனால் எல்லா மகளிரும் இவ்வாறு இருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை.

புலமையினாலும், கலையினாலும் கிட்டும் அறிவும், அழகுணர்ச்சியும், பண்பும் எல்லோருடைய வாழ்க்கையிலும், அவரவர் நிலைக்கு ஏற்ப அமையும்படி வாழ்க்கையோடு ஒட்டிய கல்வியைப் பழங்கால மகளிர் பெற்றார்கள். விளையாட்டாக உடலையும், உள்ளத்தையும், தொழிற் கலையாக அறிவையும் பண்பையும் வளர்ப்பதற்கு அவர்கள் பயின்றார்கள். இதனால் பெண்ணரசி வீட்டின் விளக்காகி ஒலிபரப்பினாள். எங்கும் தொழிலில் இன்பம் பிறந்தது. வாழ்வின் சுவை வளர்ந்தது. நாட்டில் நிறைவு நின்றது!




# ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி மணிவிழா

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப்பணி புரிந்துவரும் சிறந்த எழுத்தாளரான ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி அவர்களுக்கு அறுபதாண்டு நிரம்பிவிட்டது. இதனை விழாவாகக் கொண்டாட ‘கலைமகள்’ அதிபர் ஸ்ரீ நா. ராமரத்னம் அவர்களைத் தலைவராகக் கொண்டு பல பிரமுகர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப் பெற்றிருப்பது அனைவரும் அறிந்ததே.



ஸ்ரீ பிச்சமூர்த்தி பற்றி நம் வாசகர்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. பி. ஏ. பட்டம் பெற்றுச் சிறிது காலம் வக்கீல் தொழில் புரிந்து வந்தபோதே ஆங்கிலத்திலும் தமிழிலும், கவிதைகள், சிந்தனைக் கட்டுரைகள் எழுதத் தொடங்கி விட்டவர் அவர். 1933ல் ‘கலைமகள்’ சிறுகதைப் போட்டியில் ‘ரோஜாவும் முள்ளும்’ என்ற கதையை எழுதி முதல் பரிசு பெற்றார். பிறகு சிறிது காலம் பத்திரிகைத் தொழிலில் பணியாற்றினார். பின்னர் 1956 வரையில் சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவில் சேவை செய்தார். இப்போது தமிழ்த் தினசரியான ‘நவ இந்தியா’வில் தொண்டாற்றி வரும் ஸ்ரீ பிச்சமூர்த்தி சிறந்த சிந்தனையாளர்; தத்துவஞானி; அவருடைய கதைகளில் ஆழ்ந்த மனிதப் பண்பும், கற்பனை நிறைந்த கவிதைச் சுவையும் நிறைந்து இருக்கும்.

சிறுகதைகளைத் தவிர பல கவிதைகளையும், சிறப்பான சிந்தனைக் கட்டுரைகளையும் எழுதியிருக்கும் இந்த இலக்கிய கர்த்தாவின் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று குழுவினர் தீர்மானித்திருக்கிறார்கள். விழாவின் போது அவருக்கு நிதி சேர்த்து அளிப்பதென்றும் முடிவாகியிருக்கிறது. ஏற்கெனவேயே வசூல் தொடங்கிச் சில ஆயிரம் ரூபாய்கள் சேர்ந்திருக்கின்றன. அந் நிதியைக் கணிசமான தொகையாகப் பெருக்க வேண்டும் என்பது விழாக் குழுவினரின் ஆர்வம். தங்களில் தலையானவர்களில் ஒருவரான ஸ்ரீ பிச்சமூர்த்திக்கு மரியாதை தெரிவிக்கும் முகமாக எழுத்தாளர்கள் மட்டுமின்றி வாசகப் பெருமக்களும் நன்கொடை வழங்கினால் தான் இந்நோக்கம் ஈடேற இயலும். எனவே, இன்று எழுத்தாளர்களின் பெருமையை நன்குணர்ந்துள்ள தமிழ் வாசகர்களைத் தங்களால் இயன்ற உதவியனைத்தும் செய்யுமாறு விழாக் குழுவினர் வேண்டிக் கொள்கின்றனர். தத்தம் ஊர்களில் மற்றவர்களிடமும் நிதி வசூலித்து, ஸ்ரீ நா. ராமரத்தினம், ‘பிச்சமூர்த்தி மணிவிழாக் குழு’ தலைவர், ‘கலைமகள்’ காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

# அந்தி மாலை

"கிருஷ்ணு"



5

சென்னையில், கோடம்பாக்கத்துக்கும் தியாகராயநகருக்கும் நடுவில் ஓர் அழகான இடத்தில், அமைந்திருந்தது அந்த பங்களா. 'தேனிலவு' எனும் அழகான பெயரைத் தாங்கி நிற்கும் அந்த பங்களாவின் வாயிலைத் தாண்டி உள்ளே நுழைந்துவிட்டால், இயற்கையின் இன்பப் படைப்புக்களையும் செயற்கையின் செய்திறன்களையும் காணலாம்.


அது மாலை நேரம்.

சம்பத்தும் லில்லியும் கடற்கரைக்குப் போயிருந்தார்கள். ஆகவே குமுதாவுக்குத் தனித்திருந்து தானே தன்னுள்ளயித்து இருக்கும் வாய்ப்பு கிட்டியது. சாதாரணமாக அவள் சென்றதையெல்லாம் சிந்தித்தொழுகும் இயல்புடையவளல்ல. ஆனல் அன்று சிந்தித்தாள்...

எவளை ஆசை ஆசையாக வளர்த்தாளோ, எவளைப் பத்து மாதம் தன் வயிற்றினுள் வைத்திருந்தாளோ அவளே ஒரு வார்த்தை கேட்டுவிட்டாள்.

பாட்டுச் சொல்லிக் கொடுத்து, நாட்டியம் சொல்லிக்கொடுத்து, அவளைத்திரையுலகிற்கு அறிமுகப்படுத்தி, அவள் பொருட்டு ஆனபாடெல்லாம் பட்டவள் குமுதா தான். தாயென்றும் பாராமல் பேச்சைத் தகர்த்தெறிந்து பேசிவிட்டாள் லில்லி.

புதிய படம் ஒன்றில் லில்லியை நடிக்க வைக்கப் பிரபல தயாரிப்பாளர் ஒருவர் முன் வந்தார். அந்த வாய்ப்பை தழுவவிடலாமோ?...குமுதா அப்படித்தான் கருதினாள். புகழ் என்பது சூடாக



இருக்கும்பொழுதே அனுபவித்துவிட வேண்டிய ஒன்று. அதுவும் இதுமாதிரி விஷயங்களில், காலம் ஏறிப்போய்விட்டால் அப்புறம் எந்த முயற்சியும் பயன் தராது. இதையெல்லாம் புரிந்துகொள்ளாத லில்லியோ, தன் அன்னையின் கருத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லை. மறுத்துவிட்டாள்.

'பாடச் சொன்னாய் பாடினேன். ஆடச் சொன்னாய் ஆடினேன். இப்பொழுது நடிக்கவும் சொல்கிறாய்?'

'ஆம். அதில் என்ன தவறு?'

'தவறோ சரியோ. எனக்குப் பிடிக்கவில்லை அவ்வளவு தான்.'

'லில்லி. நீ ரொம்பவும் எதிர்த்து வாயாடுகிறாய். நான் சொன்னபடி கேட்டுத்தானே வேண்டும். இதற்குத்தானா உன்னைச் சீராட்டி, அருமையும் பெருமையுமாய் வளர்த்தேன்?'

'வளர்த்தாய். உன் கடமை அது. அதற்காக...வெட்கத்தைவிட்டு...'

'லில்லி...கலையைப் புரிந்து கொள்ளாதவள் நீ...'

'புரிந்துகொண்டு தானிருக்கிறேன்... அதனால்தான் எந்த அளவில் நிற்க வேண்டுமோ அந்த அளவில் நிற்கிறேன்...நீ சொல்வதும் அந்த எல்லைக்கப்பால் இருப்பது...அது எனக்கு வேண்டாம்...'

'லில்லி...நான் வாக்குக் கொடுத்து விட்டேன்...'

லில்லி வெகுண்டாள் இதைக் கேட்டதும். 'அம்மா...உன்னை யார் வாக்குக் கொடுக்கச் சொன்னது? உன்னைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் கடமையும் கட்டுப்பாடும் தான் எனக்குப் பெரியவை...'

லில்லி ஏதோ மேலே சொல்ல வாயெடுப்பதற்குள் குமுதாவின் கரம் ஒரு முறை ஓங்கித் தாழ்ந்தது. 'பளார்' எனும் சத்தமெழ லில்லி தன் கன்னத்தைக் கையால் அமுக்கிக்கொண்டு உள்ளே ஓடினாள். சத்தம் கேட்டு மாடியிலிருந்து இறங்கி வந்த சம்பத் இக்காட்சியைக்கண்டதும் திகைத்து நின்றான். அடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் சம்பத்தும் லில்லியும் காரில் ஏறிக்கொண்டு கடற்கரைக்குச் சென்று விட்டார்கள்.

குமுதா தன்னுடைய பழங்கால வாழ்வை நினைத்துப் பார்த்தாள். இல்லை. நீர் நிரம்பிய மண் குடத்தில் ஒரு சிறு விரிசல் ஏற்பட்டு விட்டாலும், எப்படி நீர் விரைவுடன் வெளியேறுமோ, அதேபோல அந்த நினைவுகள் தானாகவே வெளிப்பட ஆரம்பித்துவிட்டன.

குமுதாவுக்கே தனித்ததொரு தோற்றமுண்டு. அவளுக்கு வயது இப்பொழுது ஏறக்குறைய நாற்பது இருக்கலாம். இருந்தும் அவளுடைய தோற்றம் இன்னும் இளமைக் கவர்ச்சியுடன்தான் இருந்தது. அவளுடைய அழகு அமைதியானதல்ல. அடக்கமானதுமல்ல. சித்திரத்தில் எழுதினால் இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

குடும்பமோ அந்தக் கொள்ளை அழகைப் பயன்பெறச் செய்யமுடியாத நிலையில் இருந்தது. வறுமையோ அன்றி விதியோ, அதுவுமின்றி நாராயணனின் தகப்பனார் குப்பண்ணாவிடம் பட்டிருந்த கடனோ? என்னவோ? எதுவானால் தான் என்ன? நாற்பத்தைந்தைத் தாண்டும் நிலையிலிருந்த குப்பண்ணாவுக்குக் குமுதா மாலையிட நேர்ந்தது. அதைக் கல்யாணம் என்று சொல்லுவதைவிட 'பலி' என்று சொல்லுவது தான் பொருந்தும். அப்படித்தான் ஊரிலும் சொல்லிக்கொண்டார்கள்.

சின்ன வயதானாலும் குமுதா விவரம் தெரியாதவளல்ல. தன் எதிர்ப்புக்களோ ஆட்சேபணைகளோ ஒன்றும் பயன்படாது என்பது தெரிந்துதான் அவள் பொறுத்திருந்தாள். அதாவது திணிக்கப்பட்ட நிர்ப்பந்தமான பொறுமை அது. இயற்கையில் குமுதா பொறுமையுடையவள் அல்ல. அவளுடைய தோற்றத்திற்கேற்ற திண்மையும் துணிவும் உள்ள அதிகார குணம் படைத்தவள். நெஞ்சை ஒளித்து, முக பாவத்தையும் மறைத்துக்கொள்ளும் சிறந்த நடிகை. உணர்ச்சியோடு ஒன்றியிருத்தல், சங்கீதம், நடனம் இவற்றிலெல்லாம் அளவுக்கு மீறியதொரு ஈடுபாடுடையவள். நாட்டியமோ, சங்கீதமோ அவளைப் பரவசப்படுத்தியதில்லை. சித்தம் குலைய வைத்ததுண்டு. அதன் வழியே கற்பனையில் மூழ்கி, நனவில் காணா இன்பங்களை மனத்தால் அனுபவித்து லயிப்பாள்.

குப்பண்ணாவுடன் அவள் இல்லறம் ஆரம்பமாயிற்று. குமுதா பொறுமையாக இருந்தாள் என்றால், அதுதான் வஞ்சிக்கப்பட்டதற்கு பழிவாங்கப் பதுங்கும் நாடகமேயாகும் என்பது குப்பண்ணாவுக்குப் புரியவில்லை.

அழகிய இளம் பெண்ணை மனைவியாகக் கைப்பிடித்த அன்றே அவருள்ளத்தில் சந்தேகமும் விழுந்து விட்டது. அடிக்கடி தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு, கன்னத்துச் சுருக்கங்களைத் தடவி விட்டுக்கொள்வார்.



அதே சமயம் குமுதாவின் கவர்ச்சியான இளமை எழில் அவரைத் தடுமாற வைக்கும். பெருமூச்செறிவார்.

ஆரம்பத்தில் சிறிதே இருந்த இந்தத் தாழ்வு எண்ணம் நாளாக ஆக அதிகரித்துக்கொண்டே வந்தது. குமுதாவைக் காணும் பொழுதெல்லாம் அவருக்குத் தன்னுடைய பலவீனமும் குறைவும் அதிகப்படியாகத் தோன்றி ஆத்திரத்தை விளைவித்தது.

குப்பண்ணா படிப்படியாக மாறினார். குமுதா மலர் சூட்டிக்கொண்டால் ஐயம்; திலகமிட்டுக்கொண்டால் சந்தேகம்! பட்டுப் புடவை கட்டினாளானால் அச்சம்!

'இவள் எப்படி வாழ்கிறாள்?'

இந்தக் கேள்வியும் அவருக்குக் குழப்பம். விடையும் குழப்பம். சாத்திரங்கள் படித்தவர் அவர். சித்தினிப் பெண்ணின் சிருங்கார அழகுணர்வுகளை வெளிப்படுத்தும் சுந்தரியாகிய தன் மனைவி எப்படித் தன்னுடன் மனநிறைவோடு வாழ்கிறாள்?

நாளாக ஆக பயங்கரப் புழுவாகக் குடைந்தது அந்தச் சந்தேகம் அவருடைய மனத்தில்.

குமுதா அதன் வேகத்தில் நசுக்கப்பட்டாள். அவர் கூறும் ஒவ்வொரு சொல்லும் அவளைப் பண்பாட்டின் எல்லைக்கப்பால் கொண்டு தள்ளியது. ஒவ்வொரு அடியும், எதிர்ப்புக்கு ஒரு படியாகியது. புழுவைக்கூட மிதித்து மிதித்து வருத்தினால் புலியாகச் சீறியெழுமாம். தன்னம்பிக்கையில்லாத அந்தக் கிழவர், பாதுகாப்பைத் தேடுவதாக எண்ணிக்கொண்டு பெண்மையின் உன்னத நிலையை உடைத்தெறிந்து விட்டார். அளவுக்கு மீறிய அடக்குமுறையே எதிர்ப்புத் திறனை தூண்டுமல்லவா?

முள்வேலி போடுவதாக எண்ணி, எதிரியின் தாண்டிக் குதிக்கும் தைரியத்தை அதிகப்படுத்திவிட்டார். அதன் பயன்?

அவள் அந்த வேலியை ஒரு நாள் தாண்டியே விட்டாள்.


ஆம்...புழுவாக இருக்க நினைத்தவள் புலியாக மாறிப் பாய்ந்துவிட்டாள், வேலிக்கப்பால்.

கை வளையலை எப்படியோ விற்றுப் பணமாக்கிக்கொண்டு சென்னைக்கு ரயிலேறிவிட்டாள். அச்சம் என்பது இம்மியளவும் அவளிடம் இல்லை. காலையில் சென்னையில் காணும் உதய ஆதவனோடு தனக்குப் புது வாழ்வும் உதயமாகப் போகிறது என்னும் நம்பிக்கையோடு புறப்பட்டுவிட்டாள், அந்த பரிதாபத்துக்குரியவள்.

குப்பண்ணா மனைவியைத் தேடினார். அவள் எழுதி வைத்திருந்த கடிதம் அவரைச் சுட்டது. பூதக்கண்ணாடியாய் அவருடைய தவற்றை எடுத்துக் காட்டியது. இன்னாருக்கு என்று விலாசமிடப்படாமல் மொட்டையாகவே ஆரம்பித்திருந்தது அக்கடிதம்.

'நான் செய்வது தவறு என்பது எனக்குத் தெரியும். ஆயினும் துணிந்து விட்டேன். அறம் என்னைப் பழிக்கும். அறத்தின் முன் நான் ஒரு துரோகி தான்.

உலகில் ஒரு சாவித்திரியும், ஒரு நளாயினியும் தான் உண்டு. உள்ளூர

அமர்கோஸ்
(சுத்தமான குளுகோஸ் பவுடர்)
சக்திக்கும் புஷ்டிக்கும்


அமர்சந்த் சோபாசந்த்
த. பெ. நெ. 518 சென்னை-3.
50, 110, 450 கிராம் பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

ஆசைகளைக் கருக்கிக்கொண்டு வெளியே நடிக்க நான் விரும்பவில்லை. நடித்திருந்தால் உலகம் என்னைப் போற்றும். நடித்துமிருப்பேன். ஆனால் தாங்களும் என்னை நடிக்க விடவில்லை. சின்னஞ் சிறு புண்ணைக் குத்திக்குத்திக் கிளறி பெரிய பிளவையாக பெருக்கிவிட்டீர்கள். இனி அதனை அறுவைச் சிகிச்சை தான் குணப்படுத்தமுடியும். துணிவை துளித்துளியாக என்னுள்ளத்தில் புகுத்தி எனக்கும் உங்களுக்கும் இடையே உள்ள பள்ளத்தை அகலமாக்கிவிட்டீர்கள். நான் இப்பொழுது அக்கரையில் நிற்கிறேன். என்னைப் பற்றி நீங்கள் வருந்துவதைவிட மனப்பூர்வமாக மறந்துவிடுங்கள். அதுவே நல்லது.

இப்படிக்கு,

குமுதா.

கடிதமா அது? உண்மையின் கசப்பை வெளிப்படுத்திய சுவை மொக்குகளல்லவா அது?

குப்பண்ணா தம் மூக்குக் கண்ணாடியை எடுத்துவிட்டுத் தம் கண்களில் கசிந்திருந்த நீர்த்துளியைச் சுண்டியெறிந்தார். குமுதா மீது அவர் கொண்டிருந்த உரிமையோடு மற்ற எல்லாமே போய்விட்டன.

அப்புறம் அவரும் அதிக காலம் இருக்கவில்லை.

தண்ணீரில் இறங்குவது வரையிலும் கஷ்டம். தண்ணீருக்குள் அமிழ்கையில் உடம்பில் ஆயிரமாயிரம் குளிர் ஈட்டிகள் குத்தும். அமிழ்ந்துவிட்டாலோ? அப்புறம் குளிரேது? ஈரம்தானேது?

குமுதாவும் அந்த நிலையில் தானிருந்தாள். மதுரையில் அவள் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அவளோடு சக்கரவர்த்தி என்பவன் படித்து வந்தான். அவன் இப்பொழுது சென்னையில் தான் இருந்தான்.

சுருட்டை சுருட்டையான கிராப்பும், கவர்ச்சியான விழிகளும், எடுப்பாய் முன்னேக்கி சற்றே வளைந்த நாசியும், தடித்து உறுதிபெற்ற உதடுகளுமாய் இருப்பான் அவன். நல்ல உயரமும் அதற்கேற்ற பருமனும் உள்ள அவன் முகத்தில் மட்டும், அம்மை வடுக்கள் இல்லாமலிருந்திருந்தால் அவனை நல்ல அழகன் என்றே கொள்ளலாம். அம்மை வடுக்களை மஸ்றக்க, லேசாக முகத்தில் மேக்-அப்போடு, சதா தன்னைச் சுற்றிச் சில பர்லாங் தூரத்திற்கு அத்தரின் மணத்தை பரப்பிக்கொண்டு செல்லும் அவனுக்குச் சொந்தமாக ஒரு போட்டோ ஸ்டுடியோவும் இருந்தது.

குமுதா அவனை வந்தடைந்ததே ஓர் எதிர்பாராத நிகழ்ச்சிதான்.

சென்னையில் குறிப்பாக எந்த இடத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணமில்லாமலேயே குமுதா எழும்பூரை விட்டிறங்கியதும் டாக்ஸி ஒன்றில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

'எங்கேம்மா போகணும்?...'

'மயிலாப்பூர்...' என்றாள். அந்தச் சமயத்தில் வாயில் அப்படித்தான் வந்தது. அவளுடைய சிநேகிதி நளினியும் மயிலையில்தான் இருப்பதாக நினைவு.

வண்டி மவுண்ட் ரோடைத் தாண்டுகையில் ஏதோ மக்கர் செய்தது. அப்படியே நின்றும் விட்டது.

'பானெட்'டைத் திறந்து தலையை உள்ளே விட்ட டிரைவர் 'பெட்ரோல் ப்ளாக்' ஆவுது வண்டி ஓடாதுங்க...' என்று தலையைச் சொறிந்தான்.

வண்டிக்குள் உட்கார்ந்திருந்த குமுதாவின் பார்வை ஒருமுறை மவுண்ட் ரோடை வலம் வந்தது. கண்ணாடி சட்டங்களிடையே வைக்கப்பட்டிருந்த பல போட்டோக்களின் நடுவே சக்கரவர்த்தியின் சிரித்த முகமும் காட்சியளித்தது. மேலே நிமிர்ந்து பார்த்தாள். 'சி. ஆர். ஸ்டுடியோஸ்' என்ற போர்டு காணப்பட்டது.

'சரி டிரைவர். நான் இங்கேயே இறங்கிக்கொண்டு விடுகிறேன்...' என்று கூறி அவனுக்குக் கட்டணத்தைச் செலுத்திவிட்டு மாடிப்படிகளில் ஏறலானாள்.

ஒழுங்கான அறை அது. ஓரமாகப் போடப்பட்டிருந்த மேஜைமீது மிகக் கவனமாக, கண்ணாடி பிரேமில் 'பிலிமை'ப் பொருத்தி ஒருருவம் 'டச்சிங்' செய்துகொண்டிருந்தது. முகம் தெரியவில்லை.

'சார்...'

அந்த ஆள் நிமிரவேயில்லை. ஆனால் பேசினான்.



'என்ன சைஸ்? க்வாட்டரா, காபினெட்டா? எதுவேண்டும்? கலரிங்கா? புரொமைடா?' என்றான் அவன்.

'நான்...நான்...போட்டோ எடுப்பதற்கு வரவில்லை...நான்...'

'சடக்'கென்று குச்சியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்து பார்த்தான் சக்கரவர்த்தி. மறுகணமே 'நீயா குமுதா? நீயே தானா? எப்படி இங்கு வந்தாய்? உட்கார் உட்கார்...டேய்



பையா, உடனே ஓடிப்போய் இரண்டு 'கப்' காபி வாங்கி வா' என்று சொல்லிக்கொண்டே எழுந்து வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

அவன் எதிரில் குமுதாவும் உட்கார்ந்துகொண்டாள். சக்கரவர்த்தியை ஒருமுறை ஏறிட்டு நோக்கினாள். இருவருடைய கண்களும் சந்தித்துக்கொண்டன. சக்கரவர்த்தி அவளைக் கனிவோடு பார்த்தான். குமுதாவுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ? இதுகாறும் 'கல்'லாய் இருந்த இதயம் உடைத்துக் கொண்டு விட்டது. குமுதா அழ ஆரம்பித்துவிட்டாள்.

## 6

கீழேயிருந்து மாடிப்படி ஏறி வரும் பொழுதே அறையில் பெட்டி படுக்கைகள் இருப்பதைப் பார்த்துவிட்டான் வாசு. யாரோ வந்திருக்கிறார்கள் என்று எண்ணினனே யொழியத் தன் மாமனார் தன் மனைவியை அழைத்துக் கொண்டு வந்திருப்பார் என்பது அவனுக்குத் தோன்றவே இல்லை...தந்தியையும் கடிதத்தையும் படித்தவன்தான் அவன். ஸ்டேஷனுக்குப் போய் அழைத்து வரவேண்டுமென்று நினைத்தவனும் கூட. ஆயினும் சமயத்தில் அவன் அதை மறந்தே விட்டான்.

நேற்று 'ஷூட்டிங்'கில் ஒரு காட்சியை எத்தனையோ தரம் எடுத்தும்கூட அக்காட்சி அவனுக்கு மனநிறைவைத் தரவில்லை. அதே காட்சியை மனத்திற்குள் வேறுவிதமாக

உருவகப்படுத்திப் பார்க்க அவனுக்குச் சில மணி நேரச் சிந்தனையும் ஓய்வும் தேவைப்பட்டது. திருப்பித் திருப்பி எண்ணமிட்டான். ஒருவிதத்தில் மனத்திற்குத் திருப்தியாக அமையவே, காட்சிகளைக் கொஞ்சம் மாற்றியமைக்கும்படியும், காமிராவை வேறு கோணத்தில் திருப்பிவைக்கும்படியும், நடிக நடிகையரை முற்றிலும் உணர்ச்சியின் பாவங்களைச்சித்தரிக்கும்படியும் உத்தரவிட்டுவிட்டு, வீட்டுக்கு விரைந்திருந்தான் அவன்.

அவசரமாக கொஞ்சம் பணம் தேவையாக இருந்தது. அதை எடுத்துப் போகத்தான் வந்திருந்தான். மாடியில் லட்சுமியைக் கண்டதும் தான் அவனுக்கு அவளைக் கொண்டுவிடுவதாக நாராயணன் அடித்திருந்த தந்தியின் நினைவே வந்தது.

லட்சுமியிடம் சில வார்த்தைகள் பேச அவனுக்கு ஆவல். ஆனால் அவள் நடந்துகொண்ட விதமும் பணிவும் அவனுடைய உல்லாச மனத்திற்கு நிறைவளிக்கவில்லை. லட்சுமி மாடியிலிருந்து இறங்கியபின், பீரோவைத் திறந்து இரும்புப் பெட்டிச் சாவியை எடுத்து, இரண்டாயிரம் ரூபாய் பணத்தை இரும்புப் பெட்டியிலிருந்து எடுத்துத் தன் தோல் பையினுள் திணித்துக்கொண்டு, மீண்டும் சாவியை இருந்த இடத்தில் வைத்துப் பூட்டிவிட்டு அவசர அவசரமாகக் கீழே இறங்கி வந்தான்.

பாதி மாடிப்படி இறங்கும்பொழுதே, கீழே உட்கார்ந்திருந்த ரங்கநாயகி அவனைக் கூப்பிட்டாள்.

'ராஜா, வந்ததும் வராததுமாய் புறப்படுகிறாயே! யார் வந்திருக்கிறார்கள் பார்த்தாயா?' என்று புன்னகை பொங்க அன்பொடு கூறியவாறே மகனை நோக்கி எழுந்து வந்தாள் ரங்கநாயகி. அவள் பின்னால் குளித்துவிட்டு ஈரத்துண்டுடன் வந்துகொண்டிருந்த நாராயணனும் தமது மருமகனைப் பார்த்து மரியாதையாகவும் அன்போடும் புன்னகை புரிந்தார்.

'சௌக்கியமாய் இருக்கிறீர்களா?' என்று விசாரிக்கவும் செய்தார்.

'உம்...உம்...' என்று ஒரு மாதிரியாக பதிலளித்துவிட்டுத் தாயை நோக்கி 'அம்மா...நான் வருகிறேன்...எனக்குத் தலைக்கு மேலே வேலை கிடக்கிறது. ராத்திரிக்குக்கூடச் சாப்பாட்டுக்கு வருவேனோஎன்னவோ?...'மாடிப்படியில் ஒரு காலும் தரையில் ஒரு காலுமாக வாசு சொன்னான்.

'என்னடா இது? எந்த வேலை எப்படியிருந்தால்தான் என்ன? லட்சுமியைக் கொண்டு விட வந்திருக்கிறார் உன் மாமனார்...'

வாசு அவசர அவசரமாகக் குறுக்கிட்டான். 'என்னம்மா நீ, அனாவசியமாய் நிறுத்தி வைத்துக்கொண்டு பேசுகிறாய்...என் 'டைம்' வீணாகிறதே... வந்தவர் வேண்டுமானால் இன்னும் ஒரு வாரம் இருந்துவிட்டுப் போகட்டுமே... சாவகாசமாய் பேசிக்கொண்டால் போகிறது...' என்றவன், ராமண்ணா கொண்டு வந்த காபியைக்கூட வாங்கிக் கொள்ளாமல் அப்படியே விடுவிடுவென இறங்கிக் காரில் ஏறிக்கொண்டான்.

'இவன் எப்பவுமே இப்படித்தான்... சில சமயம் ரொம்பவும் நல்ல பிள்ளை போல நடந்துகொள்வான். ஆனால், வேலை என்று ஆரம்பித்துவிட்டாலோ அவனுக்கு என் பேச்சுக்கூட லட்சியமிருக்காது...' என்று நாராயணனைப் பார்த்து சொல்லிக்கொண்டே மீண்டும் சோபாவில் உட்கார்ந்துகொண்டாள் ரங்கநாயகி.

சற்றுமுன்பு குளிர்ந்த நீரில் நீராடிவிட்டு ஈர உடையுடன் வந்தவர்தான் நாராயணன். அந்த ஈர உடை அப்படியே காய்ந்துவிட்டாற்போலிருந்தது அவருக்கு. குளித்துவிட்டு வந்த தண்மை உணர்வு போயே போய்விட்டது. ரங்கநாயகி தன் பிள்ளையைப் பற்றிப் பெருமையாய் கூறிக்கொண்டாளா அல்லது தனக்குத்தானே சப்பைக் கட்டு கட்டிக்கொண்டாளா என்பது அவருக்குப் புரியவில்லை. அந்த நிமிஷமே ரயிலேறிவிடலாம்போலப் பறந்தது அவர் உள்ளம்.

'எல்லாம் சின்ன வயசுதானே. தொழிலும் அப்படிப்பட்ட தொழில்... பொறுப்பு வந்தால் தானாகவே சரியாகிவிடும்...' என்றார். சொன்னாரேயொழிய பார்த்தால் பொறுப்பு வரும் பிள்ளையாகத் தோன்றவில்லையே! ஆய்ந்தோய்ந்து பார்த்தும் கடைசியில் ஆழம் தெரியாமல் காலைவிட்டுக்கொண்டுவிட்டோமா? என்றுதான் உள்ளூர நினைத்துக்கொண்டார்.

'அப்பா...' என்று கூப்பிட்டவாறே சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள் லட்சுமி. அவர் நின்றுகொண்டிருந்த கோலத்தைப் பார்த்ததும் பதறியவாறே 'என்னப்பா இது?...' என்று வினவினாள்.

'ஒன்றுமில்லை குழந்தை...பெட்டியைத் திறந்து என் வேஷ்டியையும் துண்டையும் எடுத்துக்கொடு...' என்று சொல்லிவிட்டு மகள் அறியாதவாறு தம் கண்களை மறைத்துக்கொண்டார் நாராயணன்.

மௌனமாக வேஷ்டியை எடுத்துத் தந்தையிடம் கொடுத்தாள் அவள். பெருமூச்சு அவளையறியாமலேயே எழுந்தது. என்னவோ ஓர் உணர்ச்சி உள்ளம் முழுவதையும் நிறைத்துக் கொண்டது.

'அப்பா...என்னப்பா என்னவோ போல் இருக்கிறீர்களே...' என்று கேட்டாள்.


'ஒன்றுமில்லையம்மா! உன்னை விட்டுவிட்டு ஊருக்குப் போகப் போகிறேனல்லவா. அந்தப் பாசம்தான் என்று வைத்துக்கொள்ளேன். இன்றிரவே நான் புறப்படலாம் என்றிருக்கிறேன்...' சொல்லிக்கொண்டே பெருமாள் உள்ளுக்குள் நுழைந்துவிட்டார் நாராயணன்.

லட்சுமிக்கு 'திக்'கென்றது. இன்றிரவே ஊருக்குப் புறப்படுகிறாராமே! அவள் கண்கள் சுற்றுமுற்றும் தேடின. அவளுடைய 'அவரை'க் காணவில்லை. அப்பாவை அவர் சந்தித்திருப்பாரோ? ஏதாவது பேசியிருப்பார்களோ?... என்ன நடந்திருக்கும்?...

தந்தையின் முகமாறுதலை அவளால் புரிந்துகொள்ள முடிந்ததே தவிர அதற்குரிய காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

'லட்சுமி' என்று ரங்கநாயகி கூப்பிடும் குரல் கேட்டது. லட்சுமி பரபரவெனச் சமையல் அறையை அடைந்தாள்.

'வாம்மா...நீயும் உட்காரு. அப்பாவுடன் நீயும் சாப்பிடு...அடடா...ஏன் இப்படிக் கூச்சப்படுகிறாய்! இனிமேல் இது உன் வீடு தானே...' என்று தயங்கி நின்றுகொண்டிருந்த லட்சுமியின் தோள்பட்டையை தன் இரு கரங்களாலும் பிடித்து உட்கார வைத்தாள்.



நாராயணன் தான் ஒன்றும் சாப்பிடாமலிருப்பது மரியாதையாக இராது என்பதற்காக ஏதோ சாப்பிட்டதாக நடித்தார். பஞ்சுபோன்ற இட்டிலியும், அமிருதமான காப்பியும் அவர் வரையிலும் சுவையிழந்தவையாகவே காணப்பட்டன.

தந்தையின் வயது காலத்தில் பிறந்தவளாயினும், அவருடைய முழு அன்புக்கும் பாத்திரமானவள் அவள். அதுவும் சம்பத் செய்த செய்கையாலும், தாயின் மறைவினாலும், தந்தையின் பாசம் அவளுள்ளத்தில் அபரிமிதமாய் பெருகியிருந்தது. கூடவிருந்து வாய்க்கு வேண்டியதாக தளிகை பண்ணிப் போடாவிட்டால், வேளாவேளைக்கு எடுத்துக்கொடுக்காவிட்டால் அவர் எப்படி இருப்பார்? கண்டபடி ஹோட்டல்களில் சாப்பிடக்கூடிய ஆளுமல்லவே அவர்! அனாதையாக தன்னந்தனியாக இந்த வயது காலத்தில் எப்படியெல்லாம் கஷ்டப்படப் போகிறாரோ?...அடிக்கடி இந்த எண்ணங்கள் அவளை அச்சுறுத்தின. தகப்பனாருக்குத் தாகத்துக்குத் தீர்த்தத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, அப்புறம் திரும்பி அவரையறியாதவாறு தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

சாவகாசமாக சோபாவில் அமர்ந்துகொண்டு எதிரில் இருந்த வெற்றிலை தட்டிலிருந்த வாசனைப் பாக்கில் மட்டும் சிறிதளவு எடுத்து வாயில் போட்டுக்கொண்டாள் ரங்கநாயகி.

'இன்று ராத்திரி வண்டிக்கே புறப்படலாம் என்றிருக்கிறேன்...' என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார் நாராயணன்.

ரங்கநாயகி அவரை ஏறிட்டுப் பார்த்தாள். 'என்ன இது! வந்ததும் வராததுமாய் புறப்படுவதாவது? நாங்கள் என்ன அல்லா அசலா... எல்லாம் இருந்துவிட்டுப் போங்கள் ... நீங்கள் உடனே புறப்பட்டுவிட்டால் லட்சுமி தான் பாவம், மிகவும் ஏங்கிப் போய்விடுவாள்' என்றாள் ரங்கநாயகி, அடுத்த அறையிலிருக்கும் லட்சுமியைப் பார்த்துக்கொண்டே.



நாராயணன் சிந்தனைக்கே இடம் கொடுக்கவில்லை. ஏற்கனவே தீர்மானித்திருந்ததுபோல தன் முடிவை 'பட்'டென்று சொல்லிவிட்டார்.


'இல்லையம்மா. மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு இருக்க சௌகரியப்படாது. நில விஷயமாக ஒரு தகராறு. அதற்கு நாளன்றைக்கு நான் எப்படியும் திருமங்கலத்தில் இருந்தாக வேண்டும். அதனாலென்ன, நான் அடிக்கடி வராமலா இருக்கப் போகிறேன்' என்றவர் உமிழ்நீரை விழுங்கித் தன்னைச் சமாளித்துக்கொண்டு கலங்கிய கண்களுடன் 'லட்சுமி தாயில்லாக் குழந்தை.... எத்தனையோ விஷயங்கள் அவளுக்குத் தெரியாது.... நீங்கள் அடிக்கடி எல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டும்; புத்திமதிகள் கூற வேண்டும்...'

'ஏன் வருத்தப்படுகிறீர்கள். எனக்குப் பெண் குழந்தை கிடையாது. என் ஆசையும் அன்பும் எல்லாம் என் மருமகளுக்குத்தான். நீங்கள் கவலையேபட வேண்டாம். கண்ணுக்குக் கண்ணாய் நான் பார்த்துக்கொள்கிறேன்.' 'அது தான் எனக்கும்வேண்டியது. சீர்வரிசைகளிற்கூட எவ்வளவோ முன்னே பின்னே செய்திருப்பேன். உம்... சம்பகம் இருந்திருந்தால் குழந்தையை இப்படி தன்னந் தனியாகவா கொண்டுவிட்டிருப்பேன். எவ்வளவோ சிறப்பாக நடந்திருக்கும்...எல்லாவற்றிற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா...?' என்று சொல்லிக்கொண்டே வந்தவர், சம்பத்தின் நினைவினால் ஒரு கணம் தாமதித்து சிதறிய உணர்ச்சிகளை மீண்டும் சரிக்கட்டிக்கொண்டு 'லட்சுமி அந்தப் பையைக் கொஞ்சம் எடம்மா...' என்றார்.

லட்சுமி மீண்டும் பெட்டியை திறந்து தகப்பனாரின் பையை எடுத்து மௌனமாக அவரருகில் கொண்டு வந்து வைத்தாள். அவள் உள்ளத்தில் ஏற்கனவே புகுந்திருந்த கலக்கத்தை நாராயணனின் பேச்சுக்கள் வேறு மிகைப்படுத்தின.

பையை எடுத்துத் திறந்து அதனுள்ளே நூறு ரூபாய் நோட்டுக்களாக பதினைந்து நோட்டுக்கள் அடங்கிய ஒரு கவரை எடுத்து 'கல்யாணத்திற்கப்புறம் குழந்தைக்கு நான் ஒன்றுமே செய்யவில்லை. அதுதான் சொல்லிவிட்டேனே... என்ன இருந்தாலும் சம்பகம் இருந்து செய்வதுபோல் ஆகாது.. குறைகளைப் பொருட்படுத்தாமல் இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றவாறே அதை ரங்கநாயகி பக்கம் நீட்டினார். நீட்டிய கரம் உணர்ச்சியால் லேசாக நடுங்கிற்று.

ரங்கநாயகி அந்தப் பணத்தையும், பாசம்பொங்கும் அவருடைய முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். அவள் உள்ளம் கனிந்து கசிந்தது.



'நன்றாயிருக்கிறது. தாயார் இருந்து பார்த்துப் பார்த்துச் செய்வதைவிட நீங்கள்தான் வெகு அருமையாய் எல்லாம் செய்திருக்கிறீர்களே...போதும்... பணத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்... எவ்வளவோ செலவிருக்கும்' என்றாள் ரங்கநாயகி.

'செலவிருந்தால் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். அதற்காக குழந்தைக்குச் செய்ய வேண்டியதில் குறைப்பார்களா? பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மறுத்தால் நான் மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கும்...' என்றார் நாராயணன்.

அதற்கப்புறமும் ரங்கநாயகி மறுக்கவில்லை. பணத்தை வாங்கி இரும்புப் பெட்டியில் வைத்து பூட்டிவிட்டு வந்தாள். லட்சுமிக்கும் மனத்தில் நிம்மதி பிறந்தது. எத்தனை வாதட்சணை சட்டங்கள் வந்தாலும், பிறந்தகத்தைப் பற்றிப் பெருமை கொள்வதுதானே பெண்களின் இயல்பு. லட்சுமி மட்டும் அதற்கு விதி விலக்கானவளா?

சொன்னபடி நாராயணன் அன்று இரவே புறப்பட்டுவிட்டார். பகல் முழுவதும் வாசு வரவேயில்லையாதலால் அவனிடம் சொல்லிக் கொள்ளாமலேயே தான் அவர் கிளம்ப வேண்டியிருந்தது.

மாலை ஆறு மணிக்கே பலகாரம் உண்டுவிட்ட அவர் தமது சாமான்கள் அடங்கிய பையையும் எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டார்.

'போய் வரட்டுமா குழந்தாய். சமர்த்தாக இரு! உனக்கு நான் அதிகம் ஒன்றும் கூற வேண்டியதில்லை...'

லட்சுமிக்கு நிறைய பேச வேண்டும் போல் உணர்ச்சி மீறிட்டது. ஆனால் இயங்க மறுத்தது குரல். நா புரளவும் செயலற்ற நிலையில் கண்கள் மட்டும் நீர்த் திரையிட்டன.

'போய் வாருங்கள் அப்பா...' என்று சொல்வதற்கு அவள் தன் முழு சக்தியையும் உபயோகிக்க வேண்டியிருந்தது.

போர்டிகோவின் உட்புறமாகத் தூணைப் பிடித்துக்கொண்டு தன் தந்தை செருப்பொலிக்க நடந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி. இந்தப் பரந்த உலகில் இனி அவர் ஓர் ஒற்றை மனிதர் என்ற எண்ணம் அவளது விழிகளில் ஊறிய நீரை வெளிக் கொணர்ந்தே விட்டது.

'எத்தனை நாழிகை நின்று கொண்டிருப்பாய். உள்ளே வாம்மா...' என்று ரங்கநாயகி பரிவுடன் அவள் தோளைத் தொட்டுக் கூப்பிட்டாள். அப்போது வாசலில் கார் வந்து நிற்கும் ஒலி கேட்டது.

(தொடரும்)

# குழந்தைக்கு உணவு

ஜனககுமாரி

குழந்தை...! இந்த உலகத்தை முழுதும் அறியாத இள நிலா! பெண் நாணம் நீக்கிய பிறகு, சிப்பி உடைந்து சிரித்த முத்துதான் குழந்தை! குழந்தையின் சிரிப்பு முகம் கண்டாலே நம் மனம் குளிர்ச்சி அடையும்.

குழந்தைகளைப் பெற்றுவிடுவது சுலபம்! ஆனால் அவைகளை வளர்ப்பதுதான் சிரமம். இன்று அநேக தாய்மார்களுக்குக் குழந்தை வளர்ப்புப் பிரச்னை பெருஞ் சிக்கலாக இருக்கிறது. அதனைப் போக்கும் சில முறைகளை இங்கு அறிவோம்.

## தாய்ப்பால்

தாய்ப் பாலைவிடச் சிறந்த ஆகாரம் குழந்தைகளுக்கு இல்லை! தாய்ப் பாலில் தண்ணீர் 87 வீதமும், சர்க்கரைச் சத்து 6.5 வீதமும், தசை வளர்க்கும் சத்து 2.2 வீதமும், கொழுப்புச் சத்து 4 வீதமும், உப்புச் சத்து 3 வீதமும் இருக்கின்றன. தாய்ப் பால் குடிக்கும் குழந்தைகளைத் தொற்று நோய்கள் தாக்குவதில்லை. ஒருவேளை தாக்கினாலும் விரைவில் நீங்கிவிடும்.

தாய்ப் பால் இல்லாவிட்டால், நம் நாட்டிலேயே குழந்தைகளின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் உகந்த ஆகாரப் பொருள்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை உபயோகித்துக் குழந்தைகளை உண்மையான திடகாத்திரத்துடன் வளரும்படிச் செய்யலாம்.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திலிருந்து இரண்டு வருடங்கள் வரை ராகிக் கூழும், பசுவின் பாலும் மட்டும் கொடுத்து வளர்த்து வரலாம். எவ்விதமான அஜீரணக் கோளாறுகளும் ஏற்படாமல் குழந்தைகள் கொழு கொழுவென்று வளர்ந்து வரும்!

## ராகி மால்ட் தயார் செய்ய

காலையில் அரை ஆழாக்குக் கோதுமையும், இரண்டு ஆழாக்கு ராகி (கேழ்வரகு)யும் தனித் தனியே தண்ணீரில் ஊறப் போடவேண்டும். மாலையில் இரண்டையும் எடுத்து நன்றாக மசிய அறைத்து ஒரு துணியில் வடிகட்டி அந்த மாவை ஒரு பெரிய பாத்திரத்தில் கொட்டி நிறைய தண்ணீர்விட்டு மூடி வைக்க வேண்டும்.

மறுநாள் பாத்திரத்தை பத்திரமாக எடுத்துத் தண்ணீரை மட்டும் மெள்ள இறுத்துவிட வேண்டும். அதற்கு முன்னாலே பல தடவை மடிக்கப்பட்ட ஒரு தூய வெள்ளைத் துணியை ஒரு அகலத் தாம்பாளத்தில் விரித்துப் போட்டிருக்க வேண்டும். அதில் நீரில் ஊறிக் கொண்டிருந்த மாவைக் கொட்டவும். பின் காப்பி வடிகட்டுவது போலத் துணியின் நான்கு மூலைகளையும் ஒரே கையில் பிடித்துக் கொண்டு மாவு மொந்தை வெளியே செல்லாமலும் இடுக்கு வழியே வெளியே சிந்தாமலும், இறுக்கிப் பிழிந்தால், எஞ்சியிருக்கும் கொஞ்சம் நீரும் வடிந்துவிடும். மாவு முழுவதும் ஒரே மொந்தையாகிவிடும்!

அந்தமொந்தையைச் சிறுஉருண்டைகளாகச் செய்து நடுவில் விரலால் பள்ளம் செய்யவும், பிறகு உருண்டைகளைத் தூய வெள்ளைத் துணியில் போட்டு ஒரு தட்டியில் வைத்து சூரிய உஷ்ணத்தில் காயவைக்கவேண்டும். இந்தச் சமயத்தில் தூசு, தும்புகள் அவற்றில் படாதபடி பாதுகாக்க மெல்லிய துணி ஒன்றினால் மூடலாம். இதில் அசட்டையாக இருந்தால் குழந்தைகளுக்கு இந்த ராகி கூழ் ஆகாரம் கொடுப்பதால் தீங்கு செய்தவர்களாவோம். மறுநாளும் அதே போல் மாவுருண்டைகளை வெயிலில் மிகவும் பத்திரமாக உலர்த்தி எடுத்து அவைகளை நன்றாகக் காற்றுப் புகாத உலர்ந்த டின்களிலாவது, சீசாவிலாவது பத்திரமாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

## உணவு தயார் செய்யும் முறை

குழந்தைக்கு உணவு கொடுப்பதற்கு ஒரு மணி முன்னடியே கூழ் மாவுருண்டையையும் அத்துடன் சிறிது நல்ல வெல்லச் சர்க்கரையையும் போட்டுத் தண்ணீரில் ஊற வைக்கவும். பிறகு அதை அடுப்பில் வைத்துக் கொஞ்சம் பாலும் கலந்துகொண்டு லேசாகக் கிண்டிவர வேண்டும். இரண்டு மூன்று கொதி வந்தவுடன் இறக்கிக் கொஞ்சம் சூடு ஆறியதும் குழந்தைக்கு ஊட்ட வேண்டும். முதலில் சில மாதங்கள் கூழ் சற்றுத் தண்ணீராகவே இருக்கலாம். கரண்டியினால் குழந்தைக்கு ஊட்டிவிடலாம். மாதம் ஆக ஆக கூழ் கொஞ்சம் கெட்டியாகலாம்.

சுமார் ஒரு மாதம் நாளொன்றுக்கு ஒரு முறை மட்டும் கூழ் கொடுத்து வரலாம். பிறகு மெள்ள நாளுக்கு இரு முறையாகக் கொடுக்கலாம். மாலை உணவாகவும், கூழைச் செய்யலாம். ஆனால் குழந்தை இரவு தூங்கப் போகுமுன் கொடுக்கப்படும் உணவு கூழாக இருக்கக்கூடாது ராகிக் கூழ் உருண்டைகளை இரண்டு மாதங்களுக்குத் தேவையானவைகளை ஒரே தடவையில் தயாரித்து வைத்துக்கொள்ளலாம்.


## நேந்திரங்காய் மால்ட்

கேரளத்திலே குழந்தைகளுக்கு நேந்திரங்காயினால் தயார் செய்த மாவைக் கொண்டு, கூழ் தயாரித்துக் கொடுக்கிறார்கள். கேரளத்திலே வளரும் குழந்தைகளின் அழகுக்கும், மினுமினுப்பிற்கும் காரணம் ,சரியாகத் தயாரித்து கொடுக்கப்படும் உணவு தான்!

'நேந்திரங்காய் மால்ட்' தயார் செய்வது எளிது. நன்றாக முற்றின நேந்திர வாழைக்காய்களைத் தோல் சீவிவிட்டு மெல்லியதுண்டுகளாக நறுக்கித் தூய துணியில் போட்டு வெய்யலில் காயவைக்க வேண்டும். இரண்டு நாட்கள் காயவைத்து எடுத்து, கல் இயந்திரத்திலிட்டு மாவாக அறைத்துச் சீசாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

குழந்தைக்கு இரண்டு டீ ஸ்பூன் மாவை, காலையிலே பசுவின் பாலில் போட்டுக் கூழாகக் கிளறிச் சர்க்கரை தொட்டு ஊட்டவேண்டும்.

ராகிக் கூழ், நேந்திரங்காய்க் கூழ் கொடுத்து வளர்க்கப்பட்டு வரும் குழந்தைகளின் படங்களைப் பாருங்கள்! உடல் மினுமினுப்பையும் கவர்ச்சியான தோற்றத்தையும் பாருங்கள்! இந்தக் குழந்தைகள் அஜீர்ணத்தால் அல்லல்படுவதில்லை. குழந்தையின் வளர்ச்சியில்தானே குவலயத்தின் வளர்ச்சியே இருக்கின்றது!



நேந்திரங்காய் மால்ட் சாப்பிட்டு வளரும் குழந்தை !

ராகிமால்ட் சாப்பிட்டு வளரும் குழந்தை !

'அம்மா ! எங்கே என் நேந்திரம் கூழ்?' என்று கேட்கும் குழந்தை!



# இருளில் ஒரு தாரகை

'ஆர்வி'

## அத்தியாயம் 44.

நாகநந்தியடிகள் ஐந்தாறு வீரர்கள் சூழவந்து குறத்தியின் பின்னால் நின்ற பரமனைப் பிடித்துக்கொள்ளச் சொன்னார். அப்போதிருந்த நிலையில் பரமன் அவர்களை எதிர்க்கவுமில்லை; திமிறிச் செல்லவும் இல்லை. கிட்டத்தட்ட அவன் அதிர்ச்சியடைந்த நிலையில் கிறங்கிப் போய்ச் செயலிழந்து நின்றான்.

ஆனால் மின்னல் கொடி போன்ற சிற்றிடைக் குறத்தி நாகநந்தியடிகளை நெருங்கி வந்து, சன்னக் குரலில், 'இதெல்லாம் என்ன, சுவாமிகளே! எதற்காக இவரைச் சிறைப் பிடிக்கிறீர்கள்? இவர் யாரை என்ன செய்தார்?' என்று கண்ணிமைகள் குறும்பாகப் படபடக்க வினவினாள்.

'பெண்ணே! கொஞ்சம் விலகியே நின்று பேசு! இன்னும் கேட்டால் ஆபத்து எதுவும் வருவதற்கு முன்னே இந்த இடத்தை விட்டு ஓடிப் போய்விடு! ரணகளத்துக்கு அருகில் பெண்கள் வருவது தகாது!' என்று பொறுமையோடு நின்று விடையிறுத்தார் நாகநந்தி.

பின்னர் அந்தக் குறத்தியை உற்றுப் பார்த்துவிட்டு, 'ஓ—நீயா? நீ எங்கே, எப்போது இந்த இடத்துக்கு வந்தாய்? உன்னை இதற்கு முன்பு எங்கேயோ பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே' என்று முகத்திலும் குரலிலும் வியப்பு மேலிடக் கேட்டார் நாகநந்தி.

குறப்பெண்ணாகவே மாறிப் போயிருந்த சுமதியும் கூச்சம் மிகக் கொண்டவளைப் போல நெளிந்து, 'ஓகோ நீங்களா சுவாமிகளே! ஆமாம் ஆமாம்! நீங்கள் என்னைப் பார்த்திருக்கிறீர்களோ என்னவோ, உங்களை நிச்சயமாக நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் என்னை எப்பொழுது, எங்கே பார்த்தீர்களோ என்னவோ, நான் நேற்றிரவு உங்களை மதுரையில் பார்த்திருக்கிறேன்! அது மட்டுமல்ல சுவாமிகளே! நாளை மறுபடியும் உங்களை மதுரையில் அச்சுத விக்கந்த சக்கரவர்த்தியோடு பார்க்கப் போகிறேன்—நான் என்ன உங்களைப்போலவே தேச சஞ்சாரம் செய்பவர்கள்தானே! ஆமாம் அது சரி...' என்று இடை துவண்டு நெளிய, கால் சலங்கை 'ஜல் ஜல்' என்று ஒலிக்க அவரை அணுகி, 'சுவாமி உங்கள் வலக்கையைக் கொஞ்சம் இப்படி நீட்டுகிறீர்களா? எனக்குத் தெரிந்த வித்தையைக் கொஞ்சம் காட்டுகிறேனே!' என்றாள்.

நாகநந்தியடிகள் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுபவரைப் போல் பெரிதாகச் சிரித்துவிட்டு, 'பெண்ணே, உன் பேச்சு வேடிக்கையாகத்தான் இருக்கிறது. நேற்றிரவு என்னை மதுரையில் பார்த்தேன் என்று சொல்லி நிறுத்திவிட்டாயே! என்னுடன் பேசிக்கொண்டிருந்ததாகக் கூடச் சொல்வாய் என்றல்லவா பார்த்தேன்!' என்றார்.

'ஆமாம் சுவாமி! அது என்னவோ உண்மையிலும் உண்மைதான்! நேற்றிரவு நான் உங்களிடம் இதைப்பற்றியேதான் பேசிக்கொண்டிருந்தேன். நீங்கள் இதை அறிவீர்களோ மாட்டீர்களோ, நான் சொல்ல மறந்து விட்டேன். வைகைக் கரை ருத்திர பூமியிலே நடுநிசியில் நான் உங்களைப் பார்த்தது உண்மை; நீங்கள் என்னை எங்கேயோ பார்த்திருப்பதாகச் சொன்னதும் உண்மை! ஆமாம்; சுவாமி! அது வெறும் கனவாக இருந்தால் இன்று நடக்கப் போவதை நான் எப்படி அப்படியே கண்டிருக்கமுடியும்?' என்று கேட்டாள்.

நாகநந்தியடிகள் மீண்டும் சிரித்துவிட்டு, 'அப்படியானால் நாளைக்கு நான் பேசப்போவதையும் இன்றே நீ சொல்லிவிடுவாய் போலிருக்கிறதே!' என்றார்.

'அதில் என்ன ஐயம் இருக்கிறது? நாளை அரசர்க்கு அரசரிடம் இவருடைய அரசபதவியைப் பற்றிப் பேசப் போகிறீர்கள்! ஆமாம்; இன்று உங்களிடம் பிடிபட்டு நின்றிருக்கும் இவர் நாளை இந்த நாட்டின் அரசபதவியை வகிக்கப் போகிறவர் என்பது முக்காலும் உண்மை! நான் காண்பது வெறும் கனவல்ல. ஒலியின் அருள் வலிமை அது! அதைத்தான் இவரை இங்கே அழைத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்! சற்றுமுன்பு தூக்குமரத்தருகில் நின்றவர்களுக்கு என்ன நேரப் போகிறது என்று நான் சொன்னேனே அப்படித் தான் நடந்திருக்கிறது. வேண்டுமானால் இவரையே கேட்டுப் பாருங்களேன்!' என்று பரமனைச் சுட்டிக்காட்டிக் கூறினாள் குறத்தி.

நாகநந்தியடிகளின் முகத்தில் இப்போது சிறு மாறுதல் குறிப்பிடத்தக்கபடி தோன்றியதை அவள் கண்டாள். அவர் உண்மையில் தன்னை யார் என்று அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பதுடன், தான் சொல்வதைக்

158421



"மலையாள திரைப்படக் கதாசிரியர் பகவதியின் கதை, ஆந்திர நாட்டு ஆதிகேசவலுவின் வசனம், ஹிந்தி பட மெட்டு, ஆங்கிலப் பட 'சஸ்பென்ஸ்' வச்சு, தமிழ்ப் படமொன்று எடுத்தால் எப்படி இருக்கும்?"


"கலப்படமாக இருக்கும்!"

கேட்டுச் சிறிது திகைத்துப் போய் விட்டதாகவும் அவளுக்குத் தோன்றியது.

'என்னை இதற்கு முன்பு பார்த்திருப்பதாகச் சொன்னீர்களே, சுவாமி?' அப்படிப் பார்த்த நினைவே உங்களுக்கு வரவில்லையோ? மதுரையில் பார்த்த நினைவு இல்லாவிட்டாலும் பூம்புகாரில் பார்த்திருப்பதாக நினைக்கிறீர்களோ?' என்று கேட்டுவிட்டுகண்ணால் குறிப்பாக இமைத்துக் காட்டினாள்.







நாகநந்தியடிகளின் முகத்தில் பளிச்சென்று ஒளி தோன்றியது. அவர் சட்டெனத் தம்மை சமாளித்துக்கொண்டு, 'ஓ—அந்தக் குறத்தி சிங்கிக்கு நீ இளைய சகோதரிதானே!' என்று கேட்டார்.

'சரியாகச் சொல்லிவிட்டீர்களே, சுவாமி! எங்கள் வம்சமே பொய்யைச் சொல்லியறியாத வம்சம். வாய்தவறி வந்தாலும் பிட்டுக்கு மண்சுமந்த தெய்வம், சவுக்கடியைத் தன் முதுகில் போட்டுக்கொண்ட தெய்வம் முன்னால் வந்து சொன்ன வாக்கை நிறைவேற்றித் தந்துவிடும்... தெரிந்ததா? இந்தக் கோமானை இன்னும் ஒரு நொடியில் விடுவித்துவிடப் போகிறீர்கள்! அந்த நன்றியை அவர் நாளை மறக்காமல் நடந்துகொள்ளப் போகிறார்! வேண்டுமானால் பாருங்களேன்!' என்று கூறிவிட்டு, காலில் கட்டிய கஜ்ஜையை அவிழ்த்துக் கையில் எடுத்துக் கொண்டாள்.

நாகநந்தியடிகள் ஒருமுறை கூட்டம் நின்ற திசையைக் கவனித்தார். மறுமுறை பரமனைக் கவனித்தார். பிறகுச் சிறிதும் யோசியாமல், 'வீரர்களே! அவரைவிட்டு விலகி நில்லுங்கள்! யாராலும் அவருக்குத் தீங்கு எதுவும் நேராதவண்ணம் அவருக்குத் துணையாகச் செல்லுங்கள்! குறத்தி கூறியது பொய்யாகப் போவதில்லை. எனக்கு அவர்கள் வம்சத்தைப்பற்றி நன்றாகத் தெரியும்!' என்றார்.

குறத்தி முத்துப் பல் வரிசையைக் காட்டி மோகனப் புன்னகை செய்தாள்.

'வருகிறேன், சுவாமிகளே! வருகிறேன்! நாம் மீண்டும் மீண்டும் சந்தித்துக்கொண்டுதான் இருக்கப் போகிறோம்!' என்று கூறிவிட்டுப் பரமன் பக்கமாகக்கூடத் திரும்பாமல் மணல் பரப்பிலே ஓடத் தொடங்கினாள்.

'நில்! ஏ, குறப்பெண்ணே, நில் கொஞ்சம்!' என்று பரமன் கூவியழைத்தான்.

'என் வேலை முடிந்துவிட்டது. வருகிறேன்!' என்று கூவியவாறே திரும்பிக்கூடப் பாராமல் ஓடிக் கொண்டிருந்தாள் அவள்.

பொழுது நன்றாகச் சாய்ந்து விட்டது. நிலவு உறைக்கவில்லை. ஆயினும் குறத்திவேடம் புனைந்த சுமதி குள்ளன் புரையனைத் துணையாகக்கொண்டு பழைய கோட்டைப் பக்கமாகச் சென்றாள்.

'புரையா! அது எப்படி அத்தனை நிச்சயமாக நடக்கும்படிச் செய்தாய் நீ? அவர்கள் இருவரும் இங்கேதான் வந்திருப்பார்கள் என்பதை வச்சிரநந்தி ஊகித்திருக்கமாட்டாரா?' என்று கேட்டாள் சுமதி.



மருமகள்:—

ஆமா......ம். முள்ளுத் தேன் குழல் பண்றதுன்னு, அதுலே என்ன "முள்ளு" போடுப் பண்ணணும்?

'அவர் அப்படி ஊகித்ததுடன் நிற்கவில்லை, தேவி! அவரே கோட்டியில்தான் தங்கியிருக்கிறார். கோட்டையைச் சுற்றிலும் பலத்த காவல் போடப்பட்டிருக்கிறது!' என்றான் புரையன்.

'அப்படியானால் நாம் அங்கே எப்படிப் போக முடியும்? சோழவாணிகரும் பாண்டிய இளவரசனும் அங்கே எப்படிப் போய்த் தங்கியிருப்பார்கள்?' என்று கேட்டாள் சுமதி.

'அந்தப் பழைய கோட்டையில் பல நிலவறைகள், சுரங்கப் பாதைகள் இல்லாமலா இருக்கும்?' என்றான் புரையன்.

'இருந்தால்? அதையெல்லாம் நம்மால் கண்டுபிடித்துவிட முடியுமா என்ன, இத்தனை கட்டுக் காவலை மீறி?' என்றாள் சுமதி.

'பார்க்கலாம். இதோ இந்த ஒற்றையடிப் பாதை வழியே போகவேண்டும்...இருட்டில் செடி கொடிகளுக்கு நடுவே புகுந்து போவது கொஞ்சம் கஷ்டந்தான். ஆனால் பொன்னியை அடுத்த தோட்டத்தில் புகுந்து, போய் வரும் உங்களுக்கு இது அப்படி ஒன்றும் பெரிய கஷ்டமாக இராது!' என்று கூறிவிட்டு, முட்புதர்களும் கொடிகளும் சூழ்ந்த அந்தக் காட்டினுள் சென்ற பாதை வழியே அவன் முன்னால் நடக்கத் தொடங்கினான்.

இரவில் கத்தும் சிள்வண்டுகளின் ரீங்காரம் காதைத் துளைத்தது. 'சோ'வென்று காற்று செடி கொடிகளைச் சாடி வீசியது. அலைகளின் ஆரவாரம் எல்லாவற்றுக்கும் மேலாக அந்த இரவின் அமைதியைக் குலைத்து அலையோசையோடு அச்சத்தையும் எழுப்பிக்கொண்டிருந்தது. முன்னால் சென்ற புரையனை நிதான



மாகக்கொண்டு சுமதி பின்னே நடந்தாள்.

ஆனால் அவர்கள் சிறிது தூரம் கூடப் போயிருக்க மாட்டார்கள். அதற்குள் பின்னால் ஏதோ வெளிச்சம் தெரிவதுபோல் இருக்கவே சுமதி பின்னால் திரும்பினாள். ஒரு நொடிதான் இருக்கும்! அடுத்த கணம் அவளுடைய கண்களை இரண்டு முரட்டுக் கரங்கள் பொத்தின. வாயைத் திறக்கவொட்டாமல் மற்றும் இரு கரங்கள் முரட்டுத்தனமாகப் பொத்தின. அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். அப்புறம் என்ன நிகழ்ந்தது என்று அவளுக்குத் தெரியாது. அவள் நினைவிழந்து விட்டாள்.

பிறகு அவள் கண்விழித்துப் பார்த்தபோது மிகவும் தண்மை நிறைந்த ஓரிடத்தில் இருப்பதை உணர்ந்தாள்.

'எழுந்திரு குழந்தாய்! அரசர் உன்னை எதிர்பார்த்திருக்கிறார்!' என்று கருணை ததும்பும் குரலில் அழைத்தார் நாகநந்தியடிகள்.

சுமதிக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. ஒரு நாழிகை நேரத்தில் அவள் புறப்படுவதற்குச் சித்தமாகி விட்டாள். இப்பொழுது எங்கே இருக்கிறோம், எங்கே செல்கிறோம் என்பதை அறியாதவாறு அவள் கூடவந்த வீரனோடு படிக்கட்டில் ஏறிக்கொண்டிருந்தாள்.

அது கொற்கைப்பட்டணத்துக் கோட்டையாகத் தோன்றவில்லை. அவளுக்கு மிகவும் பழக்கமான மதுரை அரண்மனைதான் என்று அவளுக்குப் புலப்பட்டது.

மேலே அரசரும் நாகநந்தியடிகளும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். சுமதிகூட வந்த வீரனோடு அரசர் என்ன கேட்பாரோ, அவர் எப்பொழுது வந்தாரோ



"பெண்டாட்டிக்குப் பயந்தவன்னு என்னைப்பத்திப் பேசிக்கிறாங்க! ஒரு நாளைக்கு வந்துபாரு, வீட்டிலே என் அதிகாரத்தை!!!"

'அப்படியா? அப்போ கட்டாயம் வர்றேன்!"

"சரி! வர்றதை மட்டும் ஒரு நாளைக்கு முந்தியே சொல்லிவிடு!"

என்றெல்லாம் எண்ணியவாறு சென்றாள்.

'ஆமாம்; அந்தச் சோழவாணிகன் எங்கே? போய் உடனே அவனை அழைத்து வாருங்கள்!' என்று அரசரின் குரல் யாரிடமோ கட்டளையிடுவதைக் கேட்டதும் சுமதி சிறிது திடுக்கிட்டுப் போனாள்.


எது நடந்தபோதிலும் துணிவைக் கைவிடுவதில்லை என்று அவள் உறுதிபூண்டு மேலே நடந்து சென்றாள்.

அப்பொழுது எங்கிருந்தோ, 'விர்'றென்று ஒரு விஷக்கத்தி பாய்ந்து வந்தது. ஒரு நொடி தப்பியிருந்தால் அது அவளுடைய நெஞ்சிலே பாய்ந்திருக்கும். ஆனால் விதியின் வலிமையினால்தானோ என்னவோ, அவள் ஓரெட்டுப் பின்னே வைத்து தன்னைத் தாண்டிச் சென்ற கத்தியைக் கூர்ந்து பார்த்தாள்! பெரிய நாயகியின் கத்திதான் அது!

(தொடரும்)






அறம்

தேவமகளுக்குக்கூட இப்பொழுதெல்லாம் துவிச்சக்கர வண்டி ஓட்டத் தெரியும் போலிருக்கிறதே என்று எண்ணிக் கொண்டே தன் சைக்கிளின் பெடலை மிதித்தான் ஆனந்தன்.

மல்லிகையை நாம் சூடிக் கொண்டால் என்ன, மணத்தைப் பிறரும்தான் நுகரட்டுமே என்ற பெருந்தன்மை நோக்கோடு வாசத்தை அள்ளி வீசிக் கொண்டு ஹாண்டில்பாரை நெளித்து வளைத்துக்கொண்டிருந்தாள் அம்பிகா.

காலை வேளையில் கடற்கரைச் சாலையில் இந்த இன்பக் காட்சி தனக்குக் கிட்டும் என்று இரண்டு நிமிடத்திற்கு முன்கூட நினைத்திராத ஆனந்தனுக்கு சேப்பாக்கம் திருப்பத்திற்கு அப்பால் இந்த நறுமணச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

மூச்சைவிட்டால் வாசம் நாசமாகிவிடுமே என்று கொஞ்சங் கூட சுவாசத்தை வெளியே விடாமல் உள்ளே இழுத்துக்கொண்டே முன்ஏரின் பின்னே பின்னேர் போவது போல் முன் சைக்கிளின் அடிச்சுவட்டைச் சிறிதும் தப்பவிடாமல் பின்பற்றிச் சைக்கிளை ஓட்டிக்கொண்டிருந்தான் அவன்.

ஆண்கள் சைக்கிளாயிற்றே இது, அசந்தால் புடவை சிக்கிக் கொள்ளுமே என்ற அச்சத்தோடு அடிக்கடி குனிந்து பார்த்துத் தன் ஜார்ஜெட் துகிலை எடுத்து விட்டுக்கொண்டே மிதித்துக் கொண்டிருந்தாள் அவள்.

காலில் உள்ள செருப்பு வெள்ளை நிறம். கொடி போன்ற உடலில் ஒட்டிக்கொண்டிருக்கும் சேலையும் வெள்ளை. இடைக்கு மேலேயும் கழுத்திற்குக் கீழேயும் உள்ள பாகத்தை மறைக்கும் முக்கால் கை எக்ஸ்ரே சோளியும் தூய வெள்ளை. தலையை அலங்

கரிக்கும் பூவும் வெள்ளை. என்னே இந்த இன்ப நிலை! நல்ல வேளை அந்தக் கூந்தலும் வெள்ளையாக இருந்தால்...இந்நேரம் ஒரு பர்லாங்கு தூரம் முந்திக்கொண்டிருக்க மாட்டேனா என்று எண்ணிக்கொண்டான் ஆனந்தன்.

இவ்விருவருடைய பார்வையில் பொதுப்பணித் துறை அலுவலகம், மாகாணக் கல்லூரி, மெரீனா கடற்கரை, பல்கலைக் கழகத் தேர்வு மண்டபம் இவையெல்லாம் வந்துகொண்டேயிருந்தன. அன்னிபெசன்ட் சிலையருகே அவர்கள் சைக்கிள்கள் உருண்டுகொண்டிருந்தன.

'பாவம்! இந்த ஆனந்தன் அந்தப் பெண்ணின் பின்னால் ஏங்கிக்கொண்டே வருகிறானே அவனுக்கு ஒரு சந்தர்ப்பத்தைத்தான் கொடுக்கலாமே. அதன் பிறகு அவன் சாமர்த்தியம்' என்று எண்ணிவிட்டதோ என்னவோ, அந்த அன்பு வடிவமான அம்மையாரின் சிலை.

அப்போது அம்பிகாவின் வலது கை சற்று தன் வேலையை மறந்து ஓய்வெடுத்து ஹாண்டில் பாரிலேயே தங்கிவிட்டது. முன் சக்கரம் சுழலும் காற்றால் அவளுடைய ஆடை பின்சக்கரம் பக்கம் பறந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டது பின்சக்கரத்திலுள்ள 'பிரீவீல்'. கதாநாயகியைக் கண்ட வில்லன் மாதிரி அப்படியே பற்றிக்கொண்டது. உடனே அதைவிட்டு விடுபட புடவையால் முடியவில்லை.

ஒன்று, இரண்டு, மூன்று, அவ்வளவுதான் நான்காவது சுற்று நகரவேயில்லை, சைக்கிள். இடையைப் பிடித்திழுத்தது புடவை.

ஹா......



தன் மேலே சைக்கிளைப் போட்டுக்கொண்டு சாய்ந்தாள் அம்பிகா.

கிரீச்சிட்டது ஆனந்தனின் சைக்கிள். கீழே இறங்கினான். அவன் சைக்கிளை நிறுத்திவிட்டு அம்பிகாவின் அருகில் வந்தான்.

உங்களுடைய உதவி கிடைக்குமா என்பது போல் கெஞ்சின அம்பிகாவின் கண்கள்.

நிலையை உணர்ந்து அவளைத் தொட்டுத் தூக்க முன்வந்தான். அதற்குள் அவளே கையை ஊன்றிக்கொண்டு எழுந்தாள். அவளுடைய புடவையோடு கூடவே சைக்கிளும் ஒட்டிக்கொண்டே எழுந்தது. உடனே சைக்கிளைப் பிடித்தான் ஆனந்தன்.

கணுக்காலுக்குமேல் போகாத வண்ணம் தன் புடவையை ஒரு கையால் பிடித்தவாறே அவமானத்தால் குனிந்துகொண்டாள் அவள்.

இதற்குள் சைக்கிளை நிறுத்திவிட்டு இந்தப் பக்கம் வந்து சிக்கிக்கொண்டிருந்த புடவையை பிரீவீலிலிருந்து எடுக்க முயற்சி செய்தான். ஒரு கையால் சைக்கிளையும் இன்னொரு கையால் புடவையையும் பிடித்துக்கொண்டு கிழியாமல் எடுக்க எப்படி எப்படியோ முயன்றான். முடியவில்லை. மெல்லிய புடவையாதலால் நன்றாகச் சிக்கிக்கொண்டுவிட்டது.

என்னைக் கிழியாமல் எடுக்க உன்னால் முடியாதப்பா என்று புடவை சொல்வது போல் இருந்தது அவனுக்கு. உடனே புடவையை நன்றாக கையில் சுற்றிக்கொண்டு தன் பலத்தால் இழுத்தான். பிய்ந்துகொண்டு வந்தது புடவை.

ஆனால் அவன் கை மட்டும் அம்பிகாவின் காலில் படாமல் இருக்க முடியவில்லை அப்போது. பட்டுவிட்டதை அவன் உணர்ந்தான். சூள் கொட்டிக்கொண்டான். அவளும் உணர்ந்தாள். என்ன செய்வது?

அவளின் செம்மை படர்ந்த முகத்தை ஒருகணம் பார்த்தான் ஆனந்தன். அம்பிகாவின் விழிகளும் நன்றி உணர்ச்சியோடு அவனைப் பார்த்தன.

துன்பத்திலும் சிறிது இன்பம். 'விட்டது சனியன்' என்று வியர்வையைத் துடைத்துக்கொண்டு பிளாட்பாரத்தில் ஏறி



நின்றாள் அலுப்போடு அம்பிகா. அப்போது அவள் புடவையின் பிய்ந்துபோன பகுதி பாகிஸ்தான் இல்லாத இந்தியா மேப் மாதிரி காட்சியளித்தது.

'இந்த நிலையில் எப்படி கல்லூரிக்குப் போவது?' நினைக்கும் போதே கண்ணீர் வந்துவிடும் போலிருந்தது அவளுக்கு. குனிந்து தன் புடவையையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

'வேண்டுமானால் அந்த சவுக்குச் செடி மறைவில் போய் புடவையைத் தலைகீழாகத் திருப்பிக் கட்டிக்கொள்ளுங்களேன்.' வார்த்தை எப்படியோ துணிச்சலோடு வாயிலிருந்து வெளியே வந்துவிட்டது ஆனந்தனுக்கு.

விழியை அகல விரித்து ஒரு முறை ஆனந்தனைப் பார்த்துவிட்டு வெடுக்கென்று ஓடினாள் செடியை நோக்கி அம்பிகா. ஆனந்தனின் துடுக்கை அளந்தது அந்தப் பார்வை.

பிய்ந்து போன புடவைத் துண்டுகளை எடுத்துவிட்டு ஹாண்டில்பாரை ஒழுங்குபடுத்தி நின்றான் அவன்.

பெண்களுக்குரிய 'நான்கு பண்புகளில் நாணம் என்ற ஒன்றை மட்டும் தன் முகத்தில் அதிகமாகத் தேக்கிக்கொண்டு திரும்பி வந்தாள் நங்கை. தன் புடவையைச் சரி செய்துகொண்டே, பழைய எழிலோடு நின்ற அவளை மனநிறைவோடு அவன் கண்டான்.,

'மடையன்!'

'யாரது?'

'அந்தக் கழுதைதான்!'

'எந்தக் கழுதை?' சுற்றும் முற்றும் பார்த்தான்.

'இங்கே இல்லை. வீட்டிலிருக்கிறது அது.'

'இங்கு ஏன் நினைத்துக்கொண்டீர்கள் அதை.'

'அதனால்தானே இந்த விளைவு'

'என்ன?'

'ஐந்து நிமிஷத்திற்குள் திரும்பி வந்து விடுகிறேன் அக்கா என்று என் சைக்கிளை எடுத்துக்கொண்டு போனவன் அறுபது நிமிஷமாகியும் வரவில்லை அந்தத் தம்பி என்ற கழுதை. அதனால்தான் அவன் வண்டியை எடுத்துக்கொண்டு வர நேர்ந்தது எனக்கு.'

'உங்கள் தம்பியைத்தான் இப்படி அர்ச்சிக்கிறீர்களா? வாழ்த்த வேண்டுமே அவனை!'

'என்ன?'

'என் தம்பியை நான் வாழ்த்திக்கொண்டுதான் இருக்கிறேன் இப்பொழுது.'

'ஏன்?'

'என் ஸ்கூட்டரை அவன் எடுத்துக்கொண்டு போனதால்தானே என் தங்கை சைக்கிளை நான் எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.'

'அதற்காக?'

'அவனை வாழ்த்தாமல் இருக்க முடியுமா என்னால்?' கண்கள் சிமிட்டின. இதழ்கள் குவிந்து சிரித்தன.

தலைகுனிந்த அம்பிகா ஆசனத்தைத் தட்டி சைக்கிளை எடுத்தாள்.

'இந்த வண்டியை வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்களேன்.'

'வேண்டாம். வேண்டாம். நான் போகவேண்டியது அதோ இருக்கும் மேரி ராணி கல்லூரிக்குத்தான்.'

'நானும் அங்கேதான்.'

'என்ன? அங்கு ஆண்கள் படிப்பதில்லையே.'

'பரவாயில்லை. புடவை கட்டிக்கொண்டால் போகிறது.'




# நரை மயிரென இயற்கையைக் குறைகூறுதல் முறையோ?



"இயற்கையாகவே என் கேசம் நரைத்துவிட்டது ஐயா; என்ன செய்ய முடியும்?" இவ்வாறு பலர் குறைகூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனாலும் நரை மயிருக்காக இயற்கையைக் குறைகூறுபவர், ஒருவருடைய கேசம் ஏன் நரைக்கிறது என்று ஆராய்வதுண்டா? 90 சதவிகிதம் இளமையில் நரை, சரியான கேச பராமரிப்பு இல்லாமையாலும், சுகாதாரமற்ற இடங்களில் வசிப்பதாலும், மற்றும் மட்டரகமான கூந்தல் தைலங்களை உபயோகிப்பதாலும் ஏற்படுகின்றன என்று பரிசோதனைகள் மூலம் தெளிவாகியுள்ள விஞ்ஞான முறையில் அகமதாபாத்தில் உள்ள ஒரு மிக்க நவீனமான பாக்டரியில் தயாரிக்கப்படும் "லோமா" நரை மயிர் ஏற்படுவதைத் தடுக்க சிறந்த மூலதாம் பொருட்களுடன் சீரிய முறையில் செம்மையாகத் தயாரிக்கப்படுகிறது. "லோமா"வை வாங்குங்கள், இந்தியாவிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் ஏன் "லோமா"வில் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்களே உணர்வீர். ஞாபகமிருக்கட்டும். "லோமா" என்பதன் பொருள், சிறந்த தரம் என்பதே—நீங்கள் எதிர்பார்ப்பதும் அதுவே!



கேசத்தைக் கருமையாக்குவதில் லோமா பாரினில் புகழ்பெற்றது.

பூரண ஏஜெண்டுகளும் ஏற்றுமதியாளர்களும்:
எம். எம். கம்பாத்வாலா
அகமதாபாத்-1 (இந்தியா) ஏஜெண்டுகள்:
வி. நரோத்தம் & கம்பெனி பம்பாய்-2

NPS-TAM

சென்னை ஏஜண்டுகள்:—J. பலாபாய் & கோ., 280, எஸ்பிளனேட் சென்னை-1. (போன் : 4022)
சிலோன் ஏஜண்டுகள்:—ஸிர்நல் கதிர் & கோ., 41-43, செகண்ட் கிராஸ் தெரு, கொழும்பு-11.

அம்பிகாவின் அதரங்கள் வழியே ஜலதரங்கம் ஒலித்தது.

தன் சட்டைப் பையிலிருந்து 'பிரின்சுபால்' மேரி ராணி கல்லூரி என்று விலாசமிட்ட ஒரு உறையை எடுத்தான் ஆனந்தன்.

'அது என்ன?'

'உங்கள் பிரின்சுபாலிடம் இதைச் சற்றுக் கொடுத்துவிடுகிறீர்களா? உள்ளே வர வெட்கமாக இருக்கிறது.'

'என்னது?'

'லவ் லெட்டர்.'

'யாருடையது?'

'என்னுடையதுதான்...இல்லை ...என் தங்கையுடையது.'

'ஆஹா...அதற்கென்ன. நீங்கள் செய்த உதவிக்கு இதுகூடவா செய்யமாட்டேன்.'

'சிரமத்திற்கு மன்னிக்கவும்.'

விழிகள் 'பேத்தாஸ்' பாடின.

அம்பிகாவின் வண்டி கிளம்பியது. ஆனந்தனின் சைக்கிள் திரும்பியது.

ஆனந்தன் அதிர்ஷ்டசாலிதான். இல்லையென்றால் அன்று மாலையே அவன் அவளைக் கடற்கரையில் கண்டிருப்பானா? மிகக் கவர்ச்சியாகத் தன்னை அலங்கரித்துக்கொண்ட அவள், கூந்தலில் வளைவாக மல்லிகை மலரைச் செருகியிருந்தாள். அவன் வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறிக்கும்படியாக ஜிப்பா உடுத்தியிருந்தான். அப்போதுதான் நடைபாதையிலிருந்து கடலலைகள் நோக்கி நடக்கத் தொடங்கிய அம்பிகா, ஆனந்தனைக் கண்டதும் சற்றே தயங்கினாள். அவனும் அவளோடு பேசி மகிழவேண்டும் என்ற ஆர்வத்தில் சற்று விரைந்து நடந்தான். நாணம் அவள் விழிகளிலும் மொழிகளிலும் தவழ்ந்தது. இருவர்க்கும் அமைதியாகப் பேச இடம் தந்தது நடைபாதைக்குச் சற்றுத் தொலைவில் இருந்த மரமொன்று. பெருமணற் பரப்பில் தங்களைத் தவிர வேறு எவருமே இல்லையென்ற மனநிலையில் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். திடீரென மழைத் துளிகள் விழத் தொடங்கின. அன்பு துணை செய்ய இணையவிருக்கும் அவர்களை அம்மழைத் துளிகள் வாழ்த்துவது போல எண்ணி அவர்கள் பிரிந்தனர்.

## பொருள்

டிரிங்...டிரிங்...என்ற சைக்கிள் மணியோசையோடு, 'நந்தினி நந்தினி' என்ற வீணையும் இசைத்தது.

'யாரது?' என்று போர்வையைத் தூக்கிப் போட்டுவிட்டு அறையைவிட்டு ஹாலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள் நந்தினி.

போர்டிகோவில் நின்றிருந்தாள் அம்பிகா.

'என்ன இது. ஒரு நாளுமில்லாத திருநாளா! வா, அம்பிகா! உள்ளே வந்து உட்கார்' நாற்காலியைக் காண்பித்தாள் நந்தினி.

'ஆமாம், ஏன் இன்னைக்கு கல்லூரிக்கு வரவில்லை?'

'உடம்பு சரியில்லை. ராத்திரியிலிருந்து ஜுரம். ஒரே தலைவலி. அதான் லவ் லெட்டர் அனுப்பியிருந்தேனே.'



'அனுப்பியிருந்தாயா? தெரியாதே எனக்கு!'

'நான் கல்லூரிக்குப் போகும்போது ஒரு நிகழ்ச்சி நடந்தது காலையில். அதை உடனே உன்னிடம் சொல்லலாம் என்று வகுப்பில் வந்தால் உன்னைக் காணோம். வேறு யாரிடம் நான் சொல்லப் போகிறேன். அதனால்தான் இப்பொழுதே ஓடி வந்தேன், உன்னைப் பார்க்க.'

'என்ன விஷயம்?'

'நேற்று கடற்கரைச் சாலையிலே என்னிடம் கொஞ்சிப் பேசினாரடி ஒருவர்.'

'என்ன?! யார் அவர்?'

'ஒரு இளைஞர்.'

'சுருட்டைக் கிராப்பும் சுந்தரப் புன்னகையும், இருட்டைக் கிழித்துவரும் நிலவு போன்ற முகமும் நந்தினி அவருக்கு.'

'ஓஹோ. விஷயம் இதுவா... கண்ணே என்னை மணந்துகொள், இல்லாவிட்டால் இந்த உயிரை உன் முன்னால் விட்டுவிடுவேன் என்று தொட்டுக் கும்பிட்டாராடி உன் காலை.'

'இல்லை நந்தினி. சொல்வதற்குள் அவசரப்படுகிறாயே. சந்தர்ப்பம் அப்படி.'

'என்ன சந்தர்ப்பம்...மாலை சூடி மணப்பந்தலிலே அமர்ந்து தாலி கட்டிய பிறகு அருந்ததி பார்த்து அம்மி மிதிக்கும் போதல்லவா காலைப் பிடிக்க வேண்டும் அவர்!'

'என்ன நந்தினி உண்மைத் தோழியிடம் உள்ளத்தை திறந்து சொன்னால் கேலி செய்கிறாயே.'


'அம்மா. நீ அம்பிகாயில்லை இப்போ. அம்பிகாபதியைப் பார்த்து ஆசைவைத்த அமராவதி. சலமை தினைத்துத் துடிக்கும் அனார்க்கலி. ஜாக்கிரதை, லைலாவாக மாறிவிடாதே.'

'போடி...!'

## இன்பம்

'விடிந்தால் கிரிக்கெட் பந்தயம். இதுவரைக்கும் காணோம் அந்த பைனாக்குலரை. இங்கே தானே வைத்தேன். எங்கே போச்சோ தெரியலியே. இந்த வீட்டில் வைக்கும் பொருள்களுக்குக் கால்கள் முளைக்குமோ என்னவோ. ஒருவேளை அந்த நந்தினி யாருக்காவது எடுத்துப் பெரியதனம் பண்ணியிருந்தால் ...மாடி முழுதும் அலைந்து ஆர்ப்பரித்த ஆனந்தன் 'நந்தினி' என்று இரைந்துகொண்டே படிகள் அதிரும்படிக் கீழே இறங்கினான்.

PAKCO



நீடித்து உழைக்கும்
க்ரூட் ஆயில் எஞ்சின்கள்
5/6 H. P., 8/9 H. P. & 10/11
H. P. களில் கிடைக்கும்.
அதிகசக்தி உள்ள எஞ்சின்களுக்கும்
விண்ணப்பிக்கலாம்.
ஆர்ம்ஸ்டிராங் சிட்லி இங்கிலீஷ்
டீசல் எஞ்சின்களுக்கு ஸ்பேர்
பாகங்கள் எப்பொழுதும் ஸ்டாக்கி
லிருந்து கிடைக்கும்.
சென்னை, ஆந்திரா, மைசூர் & கேரள
ராஜ்யங்களுக்கு ஏஜண்டுகள்:
K. S. ஷிவ்ஜி அண்ட் கோ,
தபால் பெட்டி நெ. 5,
178/179, பிராட்வே, சென்னை-1.
போன்: 3617. தந்தி: 'லாம்ப்' Estd. 1903

‘என்ன அண்ணா?’ என்று எதிர்க்குரல் கொடுத்தாள் ஹாலில் உட்கார்ந்திருந்த நந்தினி சற்று கோபமாகவே.

எதிரே உட்கார்ந்திருந்த ஏந்திழை ஏறெடுத்துப் பார்த்தாள். கண்களின் ரப்பை படபடத்தது, அவளுக்கு.

பதைத்து வந்தவன் பாதிப் படிகளிலேயே தங்கிவிட்டான், அங்கு அமர்ந்திருந்த அழகுச் சிலையைப் பார்த்ததும்.

நேற்றைய நிகழ்ச்சி நிழலாடியது ஆனந்தனின் நெஞ்சில் அப்போது.

அவர்கள் ஏனோ, அப்படிப் பார்த்துக்கொண்டார்கள்.

‘இவள் என் காலேஜ் தோழி அண்ணா. அம்பிகா என்று பெயர்.’

‘ஓஹோ.’

‘இவர் என் அண்ணா ஆனந்தன். டாக்டருக்குப் படிக்கிறார்.’


‘அப்படியா?’

அறிமுகத்தை அழகாகச் செய்தாள் நந்தினி.

கண்கள் பேசின. கரங்கள் குவிந்தன.

‘காலையில் உன் லவ் லெட்டரை இவங்களிடத்தில்தான் கொடுத்தேன் நந்தினி.’

உடனே நந்தினி அம்பிகாவைப் பார்த்தாள். ‘நான் லவ் லெட்டர் அனுப்பியது தெரியாது என்றாயே அம்பிகா.’



‘அது உன் லவ் லெட்டர் தானா. எனக்கு எப்படித் தெரியும், அதான் உறை ஒட்டி இருந்ததே. நேரே பிரின்சுபாலிடத்தில் கொண்டு போய்க் கொடுத்து விட்டேன்.’

‘அப்பொழுது இவங்க ஒரு சின்ன சிரிப்பு சிரித்தார்கள், நந்தினி. அந்த ஜலதரங்க நாதம் இப்பொழுதும் என் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.’

‘சற்றுமுன் சொல்லிக்கொண்டிருந்தேனே நந்தினி, நேற்று கடற்கரையில்...ஒருவர் என்று. அவர் இவரேதான்.’

‘என்ன! அப்போது என் அ[ண்ணா] முகத்திற்கு அர்த்தமே இல்லை.’

‘யார் இருக்கிறது என்றார்கள்’ ஏககாலத்தில் இருவரும் சொன்னார்கள்.

ஆனந்தனின் கவர்ச்சி உரு[வ]த்தைத் தன் காந்த விழிகளால் சிறைப்படுத்திக் கொண்டிருந்தாள் அம்பிகா.

அம்பிகாவின் அழகு ஊற்றை அள்ளிப் பருகிக்கொண்டிருந்தான் ஆனந்தன்.


‘நந்தினி, நான் இனிமேல் உன் ஆருயிர்த் தோழியல்ல.’

‘பின் என்னவாம்?’

‘அண்ணி!’

‘ஓஹோ’ என்றாள் நந்தினி வியப்போடு.





**ச**ந்திரனின் மனநிலை அன்று சரியில்லை. கல்லூரியில் வகுப்பு நடந்துகொண்டிருந்தது. வகுப்பு முடிய சில நிமிடங்களே இருந்தன. அச்சமயத்தில் ரசாயனப் பேராசிரியரின் கோபத்திற்கு அவன் அநாவசியமாக ஆளாகிவிட்டான். அதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு சைக்கிளில் வந்துகொண்டிருந்த அவன் ‘கிரீச்’ என சைக்கிளை நிறுத்தினான். அப்படி சைக்கிளை நிறுத்தக் காரணமாக இருந்த குழந்தையைக் கண்டதும், அக்குழந்தைக்கு உரியவரிடம் தன் கோபத்தையெல்லாம் காட்டத் திரும்பிய சமயம் சந்திரன் அசந்தே போனான். அழகிய பெண் ஒருத்தி அக்குழந்தையின் பயத்தைத் தெளியப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டவுடன் அவனுக்குக் கோபம் கொஞ்சம் தணிந்தது. அவளுடைய அழகுதான் அதற்குக் காரணம். அழகுணர்ச்சிக்கு அடிமைப்பட்டு அலைபவர்களைக்கண்டு பரிதாபப்பட்டவன் தான் அவன். நாடி நரம்புகளை முறுக்கேற்றிக்கொண்டு வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா? விறைத்த நிலையில் அவை வெடித்து விட்டால் வாழ்வு என்னவாகும்? இப்படியெல்லாம் அவன் அவளைக் கண்ட அளவில் நினைத்தான் என்றாலும் ரசாயனப் பேராசிரியரின் சுடுசொல் நினைவுக்கு வந்து விட்டதால் அவளைச் சினத்தோடு நோக்கினான்.

‘ஏனம்மா, குழந்தையைக் கையோடு அழைத்து வரக் கூடாதா? பொறுப்பில்லாதவர்கள் எல்லாம் ஏன் குழந்தைகளை அழைத்து வருகிறார்கள்? லாரிக்கில் ஏறிவிட்டாலோ ஊரையே கூட்டி உயிரெடுத்து விடுவார்கள்’ என்றான். அவளும் சினத்தோடு ஏதாவது கூறுவாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவளுடைய பதில் அவனை வியப்பில் ஆழ்த்தியது. ‘என்ன சார்

இது? பக்கத்து வீட்டுக் குழந்தைக்குச் சிறிது தூரம் வேடிக்கை காட்ட அழைத்து வந்தேன். நீங்கள் சிறிதும் யோசிக்காமல் ஏதேதோ பேசிக்கொண்டே போகிறீர்களே. சைக்கிளில் வருபவர்கள் காரில் வருவதைவிட வேகமாக வருகிறார்களே' என 'கிளிக்' என்ற சிரிப்புடன் அவனை நோக்கினாள். சந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. 'மன்னிக்கவும்' எனக் கூறிப் புறப்பட்டான்.

தான் அவ்வளவு கோபித்த போதும் சினந்து எதுவும் கூறாமல் அமைதியாகப் பதில் கூறித் தன் செம்பவள வாய் திறந்து சிரித்துப் பேசிய அச்சிங்காரி அவனுடைய உள்ளத்தில் ஊறிக் கிடந்த எண்ணங்களைக் கிளறிவிட்டுவிட்டாள். 'சந்திரனுக்குக் காதலிக்கத் தெரியாதே, அவன் ஒரு கோமாளி' என்றெல்லாம் கேலி செய்த நண்பர்களுக்குச் சவால்விட நல்ல வாய்ப்பு தெரிந்துவிட்டது என்று எண்ணினான். அடுத்த வினாடியே அவன் மனத்தில் போராட்டம் ஒன்று நிகழ்ந்தடங்கியது.

வழியில் விபத்துக்குள்ளாகும் நிலையில் இருந்த குழந்தைக்குரிய பெண்ணொருத்தி தன்னைக் காதலிக்கும் அளவுக்கு இடம் தருவாளா? அவள் இடம் தந்தாலும் தொடர்ந்து காதலிக்கவோ மணந்து கொள்ளவோ தனக்கு மனவுறுதி உண்டோ என்றெல்லாம் எண்ணிக் கலங்கினான். இரண்டு மூன்று முறை அவளைத் திரும்பிப் பார்த்தபடியே சென்றுகொண்டிருந்தான். தன் பார்வையைப் புரிந்துகொண்டு அவளும் பதிலுக்குக் கையசைத்துச் செல்வதுபோன்ற பிரமையும் அவனுக்கு ஏற்பட்டது.

வீட்டிற்குச் சென்ற பின்பும் அவளைப்பற்றி அவன் சிந்தனை அலைபாய்ந்தது. அடுத்த நாள் சிறிது முன்னதாகவே கல்லூரிக்குப் புறப்பட்டான். அப்பெண் வயதான இருவர்களுடன் அவன் முன்னே போய்க்கொண்டிருந்தாள். சைக்கிள் மணியை 'கிளிங்' என அடித்ததைக் கேட்டு திரும்பிப்பார்த்தாள். இருவர் கண்களும் சந்தித்தன. சந்திரனுக்கு அவள் தன் விழிகளினால் அவர்கள் இருவரும் தன் பெற்றோர்கள் என்று சொல்வதுபோல் தோன்றியது. சிறிது தூரம் சென்றவுடன் சைக்கிளிலிருந்து இறங்கி வேண்டுமென்றே சைக்கிளின் முன் சக்கரத்திலிருந்து காற்றை இறக்கிவிட்டுவிட்டு அப்பெண்ணின் வருகைக்காகக் காத்திருந்தான். அவள் இவனைக் கவனித்தும் கவனியாதவள்போல் தன் பெற்றோர்களுடன் பின்னே சென்றாள். சந்திரன் அவளது முன்னழகையும் பின்னழகையும் ரசித்தவாறே அவள் பின்னே அவள் மறையுமட்டும் சென்றான். பிறகு மணியைப் பார்த்ததும் அவனுக்குப் பகீர் என்றது. அது கல்லூரி ஆரம்பித்துவிட்டது என்பதைக் காட்டியது. கடிகாரத்தைக் கண்டுபிடித்தவனைச் சபித்துக்கொண்டே சமீபத்தில் தென்பட்ட சைக்கிள் கடைக்குச் சென்று சைக்கிளைச் சரிசெய்துகொண்டு கல்லூரிக்குச் சென்றான். கல்லூரியில் அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. எப்போது கல்லூரி முடியும், மறுபடியும் அவளைச் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் எனச் சிந்தித்துக்கொண்டே கல்லூரி வகுப்புகளைக் கழித்தான்.

அதிர்ஷ்ட தேவதையின் அருள் அவனுக்குப் பூரணமாக இருந்தது. இல்லாவிடில் அன்று மாலையே அவளைத் தான் சந்திக்க முடியும் என அவன் எதிர்பார்க்கவே இல்லை. நண்பர்களுடன் மாலையில் ஊர் சுற்றிவிட்டுத் திரும்புகையில் கையிலே சில புத்தகங்களை ஏந்தியவண்ணம் அக்காரிகை ஆய்மயிலெனக் கூறும் வண்ணம் நடந்து சென்றுகொண்டிருந்தாள். அவள் நடையழகிலே சிறிது நேரம் சொக்கிய சந்திரன் தன்னுடைய துணிவையெல்லாம் ஒன்று கூட்டிக்கொண்டு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அவளை நெருங்கி, சைக்கிளில் மணியால் சங்கீதக் குரலெழுப்பினான். 'அடேடே! என்ன இது இவ்வளவு புத்தகம்? ஏதாவது பழைய கடையிலிருந்து வாங்கி வருகிறீர்களா?' என வினவினான். அவள் சிறிது நாணிக்கோணி, தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு குரலைத் தாழ்த்தி 'என் பள்ளிப் புத்தகங்களை எல்லாம் கடையில் போட்டுவிட இன்னும் என் பரீட்சை முடியவில்லை. கல்லூரியில் படிக்கும் உங்களைப் போன்ற புத்திசாலி மாணவர்கள் அநேகமாகப் புத்தகங்களை வாங்கிக் கடையில் கொடுத்து புத்தகம் இல்லாமலேயே படிப்பார்களோ,




...சிறியோர் மிட்டாய்கள் அத்தனையும் பத்திரப்படுத்தில் கொள்வதிலும் குற்றமில்லை.

...இவர்கள் தூங்கும்வரை காத்திருந்து பெரியவர்கள் ஒரு சிலவற்றை அபகரித்துக் கொள்வதும் தவறில்லை.

...தவறு யாருடையது?...நியூட்ரைன் மிட்டாய் இவ்வளவு பேர்களின் ஆவலையும் தூண்டுமளவு சிறப்புடையதாக இருப்பதே காரணம்


Nutrine

நியூடரைன் மிட்டாய்கள்

நியூடரைன் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட
சித்தூர், ஆந்திரப் பிரதேசம்

என்னவோ? பெண்களுக்கு அதிலும் எனக்கு அவ்வளவு தைரியமில்லை' எனக் குறும்புப் பார்வையுடனும் குழைவுடனும் கூறினாள்

சந்திரன் கணநேரம் திகைத்துவிட்டான். அவன் மகிழ்ச்சியால் தன்னை மறந்து தான் தனியாக ஒரு பெண்ணுடன் தெருவில் நின்று பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து 'அப்படியானால் நீங்கள் பள்ளி மாணவியா? எங்கே படிக்கிறீர்கள்?' எனக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான். அவள் தான் பத்தாவது படிப்பதாகவும் தன் பெயர் விமலா என்றும் தான் தினம் அவ்வழியாகவே போவதாகவும், சண்பகம் உயர்நிலைப் பள்ளியில் படிப்பதாகவும் கூறினாள். சந்திரனும் தன் வரலாற்றைக் கூறி மறுநாள் சந்திப்பதாகவும் கூறிவிட்டு சைக்கிளில் காற்றாய்ப் பறந்தான்.



மறுநாள் கவர்ச்சியாக உடை உடுத்திக்கொண்டு விமலாவின் விழிகளைக் காண தெருமுனையில் காத்திருந்தான். பள்ளி வரை அவளுடன் கூடச் சென்று அவளை வழி அனுப்பிய பிறகு கல்லூரிக்குச் சென்றான். அடிக்கடி சந்திரன் விமலாவைக் கண்டு பேசி, சிரித்து மகிழ்ந்து வரலானான்.

அரசாங்க அதிகாரி ஒருவரின் ஒரே பிள்ளை என்றும், தாய் தந்தை இருவரைத் தவிர தனக்கு யாருமில்லை என்றும் அவளிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

விமலாவும் தான் சிறிது முன்னோர் சொத்தையுடைய தன் பெற்றோர்களுடன் வசிப்பதாகவும் தனக்கு ஒரு அண்ணன் இருப்பதாகவும் அவன் இராணுவத்தில் வேலை செய்வதாகவும் கூறினாள்.

ஒரு ஞாயிறன்று இருவரும் தனி வகுப்பு இருக்கிறதென்று






"ஏண்டி...விறகு இல்லே அதனாலே அடுப்பு எரியல்லேன்னு சொன்னாயே. விறகு வாங்கிண்டு வந்தேனே...இப்போ எரியறதா..?"

"நீங்க வாங்கிண்டு வந்த ஈர விறகாலே...கண் எரியறது...விறகின் விலையை நினைச்சால் வயிறும் கூட எரியறது...!"

---

வீட்டில் கூறிவிட்டுக் காலைக் காட்சி பார்த்துக்கொண்டிருந்தனர். இடைவேளையில் வெளியே சென்று திரும்பிய சந்திரன் விமலாவுடன் யாரோ பேசுவதைக் கண்டு, சிறிது தாமதித்து, பிறகு அந்த நபர் யாரென விசாரித்தான். விமலாவோ அவர் தன் அண்ணனின் நண்பர் என்றும் அண்ணன் எப்போது வருவாரென்றும் யாருடன் வந்திருப்பதாக விசாரித்தாரென்றும் கூறினாள். காட்சி முடிந்ததும் இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டே சென்றனர். இதைப் பின்னால் யாரோ ஒருவர் நின்று கவனித்துக்கொண்டிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

சந்திரன் மறுநாள் வழக்கமாக சந்திக்கும் இடத்தில் காத்திருந்தும் பயனில்லாமல் போய்விட்டது. விமலாவின் பள்ளிக்குச் சென்று அவளைப்பற்றி விசாரிக்கவும் அவனுக்குத் துணிவில்லை. இப்படியாகச்சிலநாட்கள் கழிந்தன. விமலாவைப் பார்க்க இயலாத சந்திரன் மனவேதனைக்குள்ளானான். நல்ல வேளையாக திடீரென அவனது கல்லூரியில் உல்லாசப் பிரயாணத்திற்காக மைசூர் செல்லச் சில நண்பர்கள் முடிவு செய்தனர். சந்திரன் விமலாவைச் சற்றே மறக்க இது ஒரு தகுந்த வாய்ப்பு என்று எண்ணி மைசூர் சென்றான். ஒரு மாத காலம் தங்கிய பின்னர் சந்திரன் ஊர் திரும்பினான்.

ஒரு வாடகை வண்டியில் வீட்டிற்கு வந்துகொண்டிருந்த சந்திரன்தன் வீட்டிற்குச்சிறிது தூரத்தில் ஒரு கல்யாண கும்பல் வருவதையும் அதற்காக ஒரு நிமிடம் அந்த வாடகை வண்டி நிறுத்தப்பட்டதையும் அறிந்து சிறிது தலையை வெளியே நீட்டித் திருமணத் தம்பதிகளைக்கண்ட சந்திரன் அசந்தே போனான். நல்ல வேளை! அப்பெண் தன்னைக் கவனிக்கவில்லை என்பதையும் தெரிந்துகொண்டான். வீட்டை அடைந்த சந்திரன் உடல்நிலை சரியில்லையென கல்லூரிக்கு லீவு போட்டுவிட்டு இரண்டு நாட்கள் வீட்டிலேயே இருந்தான். வெளியில் போகவே இல்லை. எதைக் கண்டாலும் வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. விமலா தன்னை வஞ்சித்துவிட்டதாகவே எண்ணினான்.

மணப்பெண் கோலத்தில் தன்னோடு இணையாக அமர்ந்திருக்க வேண்டிய விமலாவா மாற்றானோடு அமர்ந்து செல்வது என்று எண்ணியபோது அவன் நெஞ்சே



வெடித்துவிடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. பெண்களை நம்பக்கூடாது என்று தொடக்கத்தில் தான் எண்ணிய எண்ணம் எவ்வளவு சிறந்தது என்பதை அவனால் அப்போதுதான் உணர முடிந்தது. விமலா புறத்தால் மட்டும் அழகியல்ல—அவள் உள்ளத்தால், உணர்வால் அழகி என்று நினைத்த நினைப்பு பயனற்றதாகிவிட்டதே, விமலாவோடு இணைந்தால் இன்பவாழ்வு வாழலாம். நாம் வாழ்வது மட்டுமல்லாமல் நம்மை வாழச் செய்யும் சமுதாயத்துக்கு—அதன் வளர்ச்சிக்குத் துணையாய் நிற்கும் நல்வாழ்வு வாழலாம், முனிவர்களும் பிறரும் காண முடியாத ஓங்கிய நல்லின்பத்தை—திருவள்ளுவனார் கூறிய பேரின்பத்தை அவளை—விமலாவை மணந்தால்தான் பெற முடியும் என்றெல்லாம் எண்ணிய அவன் விமலாவின் வஞ்சித்த செயலை எண்ணி வேதனைப்பட்டான். தன்னோடு பேசிச் சிரித்து, பூங்காவுமாக திரைப்படமும் வந்து மகிழ்வித்த அந்தப் பெண், மாற்றானோடு—உரிமை கொண்ட கணவன் அவன் என்ற பெருமிதத்தோடு செல்வது சரியில்லை என்று அவனுக்குப்பட்டது. மறுநாள் அவளைக் கண்டுபிடித்து அவளிடம் சென்று தன்னை அவள் புறக்கணித்தமைக்குரிய காரணங்களைக் கேட்டுவிடவேண்டும்—அப்படிக் கேட்கும்போது அவள் கணவன் ஏதாவது தவறாக எண்ணி, அந்த எண்ணத்தால் அவள் வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிட்டால்...தொடர்ந்து எண்ண அவனால் முடியவில்லை. துன்பத்தின் அடிச்சுவடுகளைத் தான் மட்டும் கண்டால் போதும் என்றும் தன் அன்புக்குகந்த விமலா காண வேண்டாமென்றும் எண்ணினான். அந்த எண்ணம் அவன் மனத்தில் ஓரளவு அமைதியை அளித்தது. அப்படியே உறங்கிவிட்டான்.

ஆனால் விமலாவையும் அவளுடன் சந்திரனையும் தியேட்டரில் கண்டவன் அவளுடைய அண்ணனுக்குக் கடிதம் எழுதி, அதனை நம்பிய அவள் அண்ணன் உடனே புறப்பட்டு வந்து, தன் முறைப்பிள்ளைகளில் ஒருவனையே விமலாவின் விருப்பத்திற்கு மாறாகக் காதும் காதும் வைத்தாற்போல் திருமண நாளைக் குறிப்பிட்டு, திருமணத்தையும் விமரிசையாக நடத்திவிட்டான் என்ச் சந்திரனுக்கு எப்படித் தெரியும்?

---

பண்டிட்
டி.கோபாலாச்சார்லுவின்
ஸ்ரீஹம்ருதம்
ஆரோக்யத்துக்கும் பலத்துக்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
(பிரைவேட்) லிட்.
மதராஸ்-17

# நானும் நடிக்கிறேன்!

'பட்டினத்தார்' என்னும் படத்திலே நான் நடிக்கத் தொடங்கியதிலிருந்து பலருக்கு என்னைப் பற்றி வியப்பும் சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றன. 'சௌந்தரராஜனுக்கு நடிக்கக்கூட வருமா?' என்ற கேள்வியை எழுப்பி விடை காணத் துடிக்கிறார்கள்.

எனக்கு இசையில் ஆசை பிறப்பதற்கு முன்னால் நடிப்பில்தான் ஆர்வம் உண்டாயிற்று. மதுரையில் பள்ளிக்கூடத்தில் பத்தாவது வகுப்பில் பயின்றபோதே நடித்திருக்கிறேன். அத்துடன் எம். கே. தியாகராஜ பாகவதரின் பாட்டைக் கேட்டுக் கேட்டு அவரைப் போலவே பாட ஆசை மிக அடைந்திருக்கிறேன்.

முறைப்படி காரைக்குடி ராஜாமணி ஐயங்காரிடம் 'சங்கீத சிட்சை' பெற்ற நான் அந்த நாளில் கர்நாடக சங்கீதத்தில்தான் லயித்துக் கிடந்தேன். ஆனால் என்னையும் என் குரலையும் எவரும் அந்த நாளில் அவ்வளவாக ஏற்கவில்லை! பிறகு, கர்நாடக சங்கீத ஆசையை எல்லாம் துறந்துவிட்டு, பாகவதர் பாணியில் அவரைப் போலவே பாடத் தொடங்கினேன். 'பலே, பாகவதரைப் போலவே பாடும் இந்தப் பையன் யார்?' என்று பலர் விசாரிக்கத் தொடங்கினார்கள்!

மதுரையைச் சேர்ந்த ராயல் டாக்கீஸ் உரிமையாளர்கள் என் குரலைக் கேட்டு விட்டு என்னைக் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவுக்குச் சிபார்சு செய்து அனுப்பி வைத்தார்கள். அப்போது பல சங்கீதப் புலிகள் சென்ட்ரல் ஸ்டுடியோவை ஆக்ரமித்துக் கொண்டிருந்தார்கள். ஜி. ராமநாதன், எஸ். எம். சுப்பையா நாயுடு இவர்களெல்லாம் அங்கே இசை முழக்கம் செய்து படங்களிலே பணி புரிந்து வந்தார்கள்.

சொந்தக் குரலில் பாடிப் படங்களிலே நடித்து வந்தார் பி. யூ. சின்னப்பா. அவரது கம்பீரமும் பாட்டும் என்னைக் கவர்ந்தன. அவரைப் போலவே சொந்தக் குரலில் பாடி, —படங்களிலே நடிக்கவேண்டும் என்னும் ஆசை அப்போதே பிறந்தது.

ஆனால் நடிக்கும் ஆசையை அவர்களிடம் சொல்ல எனக்கு அச்சமாக இருந்தது. ஆகவே சதா பாடிக்கொண்டே இருந்தேன். என் பாட்டை பி. யூ. சின்னப்பாவும் கேட்டார். அவர் என் குரலைக் கேட்ட பிறகு மற்றவர்களிடம் வழங்கிய விமர்சனம் என்ன தெரியுமா?

'மதுரையிலிருந்து வந்திருக்கும் அந்தப் பையன் ஏன் இப்படி இரவு பகலாகக் கத்திக்கொண்டிருக்கிறான்?'

என் இசையைப் பற்றி மேற்கண்டபடி கருத்துக் கொண்டிருந்தவரிடம் நடிப்பாசையை எப்படிச் சொல்லுவேன்?

சென்டிரல் ஸ்டுடியோவில் சில ஆண்டுகள் தங்கி எல்லாரிடமும் பழக வாய்ப்புக் கிடைத்தது. 'கிருஷ்ண விஜயம்' என்ற படத்திலே இரண்டு பாடல்கள் பாட முதல் வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன் 'சுதர்சன்' என்ற படத்திலே சிறு வேடமும் ஏற்று நடித்தேன்! அந்த வேடம் என் திறமை தெரிந்து எவரும் தந்தது இல்லை. நான் ராயல் டாக்கீஸ்காரர்களுக்கு மிகவும் வேண்டியவன் என்பதனால் பெயருக்கு ஒரு



## டி. எம். சௌந்தரராஜன்

வேடத்தைக் கொடுத்து வைத்தார்கள்! 'நானும் நடித்தேன்!' — அவ்வளவுதான்!


திருச்சி ரேடியோவில் ஒரு நாள் பாடினேன். அதைக் கேட்டுவிட்டு, திருமதி கே. எல். வி. வசந்தா, 'யார் இவர்? பாகவதரைப்போலவே பாடுகிறாரே!' என்று பாராட்டினார். பிறகு அவரே என்னை மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களிலே பின்னணி பாட ஏற்பாடு செய்தார். அவரது தனி ஈடுபாட்டை என்றும் என்னால் மறக்கவே முடியாது. அவரால் ஏற்பாடு செய்து தரப்பட்ட 'மந்திரி குமாரி' படத்திலே, 'அன்னமிட்ட வீட்டிலே' என்று தொடங்கும் பாட்டு 'ஹிட்' ஆயிற்று!

சென்னை ஏவி. எம். ஸ்டுடியோவில் உருவாக்கப்பட்ட படங்களில் சான்ஸ் பெற 'சங்கம் முழங்கி' என்று ஆரம்பமாகும் பாட்டே காரணமாகும். மதுரை மீனாட்சியைக் குறித்து மனமுருகிப் பாடிய பாட்டை திரு. ஏவி. எம். அவர்கள் கேட்டுவிட்டு, 'பிரமாதம்!' என்று என்னைத் தட்டிக் கொடுத்தார். அவரைப்போன்றவர்களை என்றும் என் இதயக் கோவிலிலே வைத்து வணங்கி வருகிறேன்.

பல ஆண்டுகளாக பிரபல இசையமைப்பாளரான ஜி. ராமநாதனை அறிந்திருந்தும் அவர் என்னிடம் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால்—

திடீரென்று ஒரு நாள் அவர் என்னிடம், 'நான் 'பட்டினத்தார்' படத்தை எடுக்கப் போகிறேன். நீதான் பட்டினத்தாராக நடிக்க வேண்டும்!' என்றார். அத்துடன், அதை ஓர் இசைச் சித்திரமாக எடுக்கப் போவதாகவும் அதற்குத் தகுதியுள்ளவன் நானே என்றும் உற்சாகமாகச் சொன்னார். அதைவிட உற்சாகமான செய்தி வேறு என்ன வேண்டும்?

# வாழும் வகை



மாரி

ஆற்றங்கரைக்குச் சென்று அங்கு மணல்மேட்டில் தம் நண்பர்களோடு சிறிது நேரம் பொழுது போக்காகப் பேசித் திரும்புவது அருளப்பருடைய அன்றாட வழக்கம். அவருடைய பெயரைச் சொன்னால் மேலூரில் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள். அவருக்குச் சொந்தமாகப் பஞ்சாலை ஒன்று ஊரிலிருந்தது. ஊரில் உள்ளவர்கள் எல்லாரும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்கவேண்டும் என்று எண்ணிய அருளப்பர் படிப்பகம், நூல் நிலையங்கள் முதலியவற்றை ஏற்படுத்தினார். எல்லோரும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் செய்தார்.

வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் அவரை மிகுதியாக விரும்பினார்கள். எப்போதாவது அவர் ஊரில் இல்லாமல் போய்விட்டால் எல்லோரும் வருந்துவர். அந்த அளவுக்கு நெருங்கிய ஈடுபாடு அவர்களிடையே இருந்தது. தன்னைச் சூழ்ந்துள்ள மக்கள் வாழ்க்கை எப்படி அமைந்துள்ளது, அவர்களுக்குத் தம்மால் ஆகக்கூடிய உதவி ஏதேனும் உண்டா என்றெல்லாம் ஆராய்வதில் அவர் மனம் ஈடுபடும்; வாரத்துக்கு ஒருமுறை எளிய மக்கள் வாழும் பகுதிக்குச் செல்வார்; அங்கு அவர்களுடைய வாழ்க்கை முறை மாறியமைய வேண்டிய கட்டாயத்தை விளக்குவார்; அவர்கள், காலத்துக்கு ஏற்ப எப்படி எப்படி வாழவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுவார்.

ஒருநாள் அவர் வேலப்பன் குப்பத்திற்குச் சென்றார். அங்கு வாழ்ந்த மக்களில் பலர் பலவகையான கைத்தொழில்களைச்

பாலருக்கு...



செய்து பிழைத்தனர். குப்பத்தில் நுழைந்த அருளப்பரின் கண்களுக்கு ரிக்ஷா இழுத்துக்கொண்டு வந்த முனியன் தென்பட்டான். தொலைவிலிருந்தே அவனை நோக்கிக்கொண்டு வந்த அவர் உள்ளத்தில் பல ' கேள்விகள் தோன்றி மறைந்தன. 'முனியா' என்ற கம்பீரக் குரலைக் கேட்டதும் முனியன் நின்றான். கைகளால் தாங்கிக்கொண்டிருந்த ரிக்ஷாவைக் கீழே விட்டுவிட்டு, 'என்னங்க ஐயா?' என்று கேட்டான். அதில் பணிவும் அன்பும் இருந்தன.

'நீ ஏனப்பா இன்னமும் இந்தத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறாய்? இப்போது இதெற்கெல்லாம் ஏது மதிப்பு? இத்தொழிலில் உனக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கும்?'

'பொழுது கழிவது தொல்லையாகத்தான் இருக்குங்க. என்ன செய்யலாம்? சைக்கிள்ரிக்ஷா விட எனக்குத் தெரியாது. இப்படியே பழகிட்டேன். இப்படியே தொடர்ந்து இருந்திடலாமுன்னு நினைக்கிறேனுங்க. நாளெல்லாம் உழைச்சா ஒரு ரூபாய் கிடைக்குதுங்க.'

'அவ்வளவுதானா முனியா? பாவம், உன் உழைப்புக்குத் தகுந்த கூலி இல்லையேப்பா அது. வெயில் மழை என்றெல்லாம் பார்க்காமல் உழைக்கும் உனக்குப் போதிய கூலி இதில் என்றைக்குமே கிடைக்காது. அது சரி. அதை வைத்துக்கொண்டு நீ எப்படியப்பா வாழ்கிறாய்?'

'எப்படியோ காலம் போய்க்கிட்டுதானுங்களே இருக்குது. என் வருவாயில் ஒரு பகுதியை உணவுக்காகக் கொள்கிறேன்; ஒரு பகுதியைக் கடன் கழிக்கப் பயன்படுத்துகிறேன்; ஒரு பகுதியைக் கடனாகக் கொடுக்கிறேன், ஒரு பகுதியைத் தொலைவில் எறிந்துவிடுகிறேனுங்க' என்று கூறிக்கொண்டே ரிக்ஷாவை எடுத்துக்கொண்டான். 'சரி, நீ போய் வாப்பா' என்று விடை கொடுத்துத் தொடர்ந்து சென்றார் அருளப்பர்.

வழியெல்லாம் அவருடைய மனம் முனியன் சொன்னதையே எண்ணியது. அவனுடைய பதில் அவருக்கு விளக்கமாகவில்லை. 'கிடைக்கின்ற வருவாயில் ஒரு பகுதியை உணவுக்காகக் கொள்கிறேன்; ஒரு பகுதியைக் கடன் கழிக்கப் பயன்படுத்துகிறேன். ஒரு பகுதியைக் கடனாக கொடுக்கிறேன்; ஒரு பகுதியைத் தொலைவில் எறிந்துவிடுகிறேன்' என்று முனியன் பதிலையே மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்துக் கொண்டார். இருந்தாலும் தெளிவேற்படவில்லை. எனவே, அவரால் தொடர்ந்து செல்ல முடியவில்லை. வீட்டிற்குத் திரும்பி விட்டார்.

வழக்கம்போல் மாலையில் ஆற்றங்கரையில் அருளப்பரும் அவருடைய நண்பர்களும் கண்டனர். தனக்கு விளங்காத ஒன்றை அவர்களிடமாவது சொல்லி விளக்கம் பெறலாம் என்று அவர் நினைத்தார். அவருடைய அமைதியான முகத்தோற்றத்தையும், ஒளியிழந்த கண்களையும், மௌனம் கொண்ட வாயையும் கண்ட நண்பர்கள் அவரை ஏதோவொன்று குழப்புகின்றது என்று எண்ணினர். எப்படி அதை அவரிடம் கேட்பது என்பதுபற்றி எல்லோருமே தயங்கினர். அவர்களுடைய தயக்

கத்தைப் புரிந்துகொண்டவர் போல அவரே பேசத் தொடங்கினார்.

'நண்பர்களே, இன்று வேலப்பன் குப்பம் போயிருந்தேன். அங்கு ரிக்ஷாக்காரன் முனியனைக் கண்டேன். அவன் தன்னுடைய அன்றாட வருவாயான ஒரு ரூபாயில் ஒரு பகுதியை உணவுக்காகவும், ஒரு பகுதியைக் கடன் கழிக்கவும், ஒரு பகுதியைக் கடன் தரவும் பயன்படுத்துவதாகவும், நான்காவது பகுதியைத் தொலைவில் எறிந்துவிடுவதாகவும் கூறினான். இதனுடைய விளக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பல மணி நேரங்களாக இதுபற்றி எண்ணிப் பார்க்கிறேன். எனக்கு ஒன்றும் தெளிவாகவில்லை. நீங்களாவது சொல்லுங்கள். நம்முடைய படிப்பெல்லாம் முனியனுடைய பதிலுக்கு விரிவுரை சொல்லிக்கொள்ளக்கூடப் பயன்படவில்லையே' என்று வருத்தத்தோடு கூறினார்.

அவருடைய நண்பர்கள் தனித்தனியாகவும் கூடிக் கலந்தும் பேசினர். பயன் இல்லை. எல்லோருக்கும் விளங்காத வகையில் முனியன் சொன்னதன் கருத்துத்தான் என்ன? முனியனையே அழைத்துக் கேட்டுவிட்டால் என்ன என்று நண்பர்கள் நினைத்தனர். உடனே குப்பம் பக்கம் செல்வதென்றாலும் இயலாது. இருட்டிவிட்டது. இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த வேளையில் ஆற்றங்கரைக்குப் பக்கத்திலிருந்த கோவிலுக்கருகில் ரிக்ஷா ஒன்று வந்து நின்றது அவர்களுடைய கவனத்தை ஈர்த்தது. அதிலிருந்து இறங்கிய அழகிய பெண் ஒருத்தி அவனுக்குக் கூலி கொடுத்துவிட்டுக் கோவிலுக்குள் சென்றுவிட்டாள்.

முனியனை அருளப்பரின் நண்பர்களில் ஒருவர் சென்று அழைத்து வந்தார். அவனுக்கு அவர் தன்னை அழைத்துச் செல்வது பற்றி வியப்பு உண்டாயிற்று. தனக்குத் தெரிந்தவர்கள்—தெரியாதவர்கள் ஆகியவர்களுக்கு இடையில் அருளப்பர் அமர்ந்திருப்பதைக் கண்டதும் கரம் குவித்து வணங்கினான். அவரும் வணங்கிவிட்டு, 'முனியா, நீ காலையில் என்னிடம் சொன்ன பதில் எனக்கு மனநிறைவையோ தெளிவையோ தரவில்லை. எனவே எண்ணிப் பார்த்துத் தெளிவாக எங்களுக்கு உன்னுடைய பதிலைச் சொல்' என்றார். முனியன் இலேசாகச் சிரித்துக்கொண்டான். வேறு வழியில்லாத காரணத்தால் அவன் பதில் சொல்லத் தொடங்கினான்:

'பெரியோர்களே! ஒவ்வொருவனுக்கும் நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்ற ஆவல் இருப்பது இயற்கையேயாகும். அந்த ஆசைக்கு நானும் விதிவிலக்கல்ல. அதற்காக நான் சாப்பிடுகிறேன். எனக்கு மகிழ்ச்சிதரும் மனைவிக்கும் சாப்பாடு போடுகிறேன். இதைத்தான் என் வருவாயில் ஒரு பகுதியை உண்ணுவதற்காகச் செலவிடுவதாகச் சொன்னேன். என்னுடைய பெற்றவர்கள் என்னை இளமை முதல் ஊட்டி வளர்த்தனர். அதனால் நான் வளர்ந்து இந்நிலையில் உள்ளேன். இப்போது என்னை வளர்த்த என் பெற்றோரை நான் காப்பாற்றுகிறேன். இப்படிச் சொல்வதற்குப் பதிலாகத்தான் ஒரு பகுதியைக் கடன் கழிப்பதாகச் சொன்






னேன். என்னுடைய பிள்ளைகள் நிறைந்த ஆயுளையும் வலுவான உடலையும் கொண்டு விளங்க வேண்டும் என்பதற்காக மிகுந்த கவனம் செலுத்துகிறேன். இதைத்தான் கடன் தருவதாகச் சொன்னேன். நான் என் பெற்றோரை அவர்களுடைய முதுமைக்காலத்தில் அன்போடு காப்பாற்றுவதுபோல அவர்களும் அவர்களுடைய பெற்றோராகிய எங்களைக் காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறேன். எனவேதான் கடன் கொடுப்பதாகச் சொன்னேன். நான்காவது பகுதி தருமம் செய்யப் பயன்படுத்துகிறேன். அறத்துக்கு என ஒதுக்கப்பட்ட பொருள் நமக்குப் பயன்படாதல்லவா? அதனால்தான், எனக்குப் பயன்படாத அந்தப் பணத்தைத் தொலைவில் எறிந்துவிட்டதாகச் சொன்னேன்' என்றான்.

இந்தப் பதிலைக் கேட்டதும் எல்லோரும் மகிழ்ந்தனர். அருளப்பரின் முகத்தில் ஒளி வீசியது. எல்லோரும் எப்படி வாழ வேண்டும் என்ற அரிய செய்தியை மிகத் தெளிவாகச் சொல்லிவிட்ட முனியனைத் தம் அருகில் வருமாறு அழைத்துப் பாராட்டினார் அவர். அவனுக்கு ஓரளவுப் பணம் கொடுத்து ஏதாவது ஒரு சிறு தொழிலைச் சொந்தமாக ஆரம்பித்து நன்றாக வாழுமாறு கூறினார். அவரைச் சூழவிருந்த எல்லோருமே முனியனுடைய பதில் கேட்டு வியப்படைந்தனர்.

## சித்திரச் சுழல் 3.





இடம் வலம்:

1. முதலின் முதலெழுத்தும், காதின் கடையெழுத்தும், பகுதியின் இடையும் சேர்ந்தால் இதுவாகும்.
5. இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வரும் அயல் நாட்டினர் உலக அதிசயங்களில் ஒன்றான இதைப் பார்க்காமல் போக மாட்டார்கள்.
6. எலிஸபெத் மகாராணியாரின் இதில் நமது நாட்டு விலை மதிக்க முடியாத கோஹினூர் வைரம் பதிக்கப்பட்டுள்ளது.
7. 'ஓடி வா! ஓடி வா! கம் ஆன்! கம் ஆன்! ஐயோ! போச்சே பணம்!'

மேலிருந்து கீழ்:

1. ஆமையைவிடத்தான் அதிகமே வேகம்; ஆனால் அற்பமாம் இம்மிருகத்திற்கு ஆத்திரம் அதிகம்.
2. மிகக் கொடிய மிருகத்தின் உடலிலுள்ள ஓர் உறுப்பு.
3. போரில் உயிர் நீத்த வீரர்களின் கைகளிலே உடைந்த இவை கிடக்கும்.
4. படுக்க உதவும் இதையும், நிற்க உதவும் நிழல் கொடுப்பதையும் சேர்த்துப் பாருங்கள். [விடை: 80-ம் பக்கம் பார்க்க]




### நாயிடமிருந்து...


இப்பொழுது ராஜா ராணிகளைத் திரைப் படங்களில்தான் பார்க்க முடிகிறது. முடியாட்சி போய் குடியாட்சி வந்துவிட்டதல்லவா? அதனால் இப்போது 'ராஜா' என்று யாரையும் கூப்பிட முடியாது. அதிகார முறையில் மட்டுமின்றி, தகுதியிலும் ஒன்றுமில்லை.

ஆனால் இன்றைக்கும் விலங்குகளில் விலங்கரசன் – காட்டரசன் – எனச் சிங்கத்தைக் கூப்பிடுகிறார்கள்...இன்னும் சில நாட்களில் அந்தப் பெயர் மறைந்துவிடும். அப்படிப் பெயர் மாற்றம் செய்யாவிட்டால், நாங்கள் அறப் போர் தொடுப்போம். எந்த விதத்தில் சிங்கம் அரசனாக முடியும் என்று கேட்கிறோம்...? நாங்கள் இப்போது சாதாரணப் விலங்கா?...'ஸ்புட்னிக்' விலங்குகளாயிற்றே?

உலக வரலாற்றில் எங்கள் 'லைகா' தான் வானவெளிக் கப்பலில், உலக யாத்திரை செய்தது! கண்ணால் காண முடியாத உயரத்திற்குச் சென்று உயிருடன் வந்துவிட்டது! மனிதனின் மூதாதையர் எனப்படும் குரங்குகூட எங்களுக்குப் பிறகுதான்!...இப்போது சொல்லுங்கள்—விலங்கரசு யாரென்று?...

என் சுய சரிதையைக் கொஞ்சமாவது சொல்லியாக வேண்டும். அப்போதுதான் உண்மை வெளிப்படும்.

நான் வக்கீல் வீட்டில் பிறந்தேன்... ஆறு மாதமான பிறகு டாக்டர் வீட்டிற்குச் சென்று வளர்ந்தேன்...இப்போது நடுவீதிதான் என் வாழ்விடம்!




முதல் வகுப்பில் படிக்கும் பிள்ளையிடம் 'நன்றியுள்ள விலங்கு எது?' என்றால் – அந்தப் பிள்ளை சிங்கத்தையோ புலியையோ அல்லது யானையையோ சொல்லாது—இரண்டெழுத்திலுள்ள எங்களை, எழுத்துணர்வுடன் படத்தைப் பார்த்துச் சொல்லிவிடும்.... சிறிய வயது, நேரிலும் கண்டு பயமிருக்கும் போலும்!...ஆனால் வளர்ந்து கொண்டிருக்கையில் இந்தச் சிறிய பிள்ளைகளின் மனமும் மாறிவிடுகிறது...பின்னர் எதற்காக ஒரு குற்றமும் செய்யாத எங்கள்மீது கல்லை எறியவேண்டும்...? இது நெடுநாள் வழக்கமோ?...பின்பு ஏன் 'கல்லைக் கண்டால்...காணோம்' என்ற பழமொழி வந்தது? காரணம் சொல்லுங்கள்...!

போதும் போதாதற்கு 'மடத்து... போலக் கட்டி வைத்து அடிக்க வேண்டுமாம்!' என்ன கருணை...!

முன்பெல்லாம் திருடர்கள் தெருவில் வராமலிருக்க காவல் காத்து நின்றோம்...காலம் மாறி, திருடர்கள் என்றே தெரியாது, காரில் வந்து கொலை, கொள்ளைகளைக் கையில் ரப்பர் உறைகளோடு செய்துவிட்டுப் போய் விடுகிறார்கள்...அப்படி வந்தவர்களைக் கூட எங்கள் 'அல்சேஷன் போலீஸ் இனம்' கண்டுபிடித்துக் கொடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள்...

தற்புகழ்ச்சி என்று எண்ணிவிட வேண்டாம்!... இருந்தாலும் எங்கள்



பணியை உங்களுக்கு நினைவுபடுத்தி, உங்களிடம் நன்றி எதிர்பார்க்கிறோம்.

அனுவசியமாக யாருக்கும் தீங்கு செய்யாத எங்களைத் தெருவில் சுதந்திரமாக நடக்க வழிவகை செய்ய வேண்டும். திடீரென முன்னெச்சரிக்கையின்றி சுருக்குக் கம்பி போட்டு மடக்கி வண்டிக்குள் அடைக்கக் கூடாது!...

வயதாகி வியாதி வந்துவிட்டால் திடுமென நடுத்தெருவில் (என் மாதிரி) மற்றவர்கள் அலையக்கூடாது ...பிறருக்கு அருவருப்பு தோன்றும்படி ஆகிவிடுவதை, நடிக்கும் முன்பே எங்களைப் போன்றவர்களைப் பிடித்து; மின்சார அடுப்பில் போடுவது கூடாது ...அதாவது நோய்க்குச் சிகிச்சை தராமல் அப்படிச் செய்யக்கூடாது என்றே கூறுகிறேன்.

'சிறுவர்கள் எங்களைக் கல்லால் அடிக்கக்கூடாது.' அப்படிச் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டமியற்றப்படவேண்டும்!

எங்களில் சிலர் மாட மாளிகைகளில் வளர்கின்றனர். சிலர் சினிமாக் கதாநாயகர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்காகக் கவலை இல்லை...எங்களில் பிற்பட்ட இனம் இருக்கிறதே, அவர்களுக்கான சலுகை காட்டப்பட வேண்டும்...அதாவது எஸ். பி. சி. ஏ. குழுவினருக்குத் தாராளமான நிதி உதவி செய்து, எங்கள் இளம் குட்டிகளுக்கு – குறிப்பாக சேரி வாசிகள் போல – உள்ளவர்களுக்கு இலவசப் பால் தர வேண்டும்!...அதற்காகப் பல பால் வார்க்குமிடங்களை வட்டாரங்களில் ஏற்படுத்தியாகவேண்டும்.

கடைசியாக முக்கியமான கோரிக்கை...அதாவது குறிப்பிட்ட வயதாகுமுன், உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யக்கூடாது என்று சட்டம் வைத்திருப்பது போல – 'குட்டி போட்டு கண் திறப்பதற்குள் எங்கள் இனம் விற்பனைக்கோ-வேறு எதற்கோ தாயிடமிருந்து பிரிக்கும் கொடிய வழக்கத்தை உடனே தடை செய்ய வேண்டும்!...பெற்ற பாசம் கொஞ்ச நாட்களுக்காவது நீடிக்கும்படி அரசினர் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறோம்.

**ஏ. சுவாமிநாதன்**

## சித்திரச் சுழலுக்கு விடை

★

இடம் வலம்:

1. முருகு.
5. தாஜ் மஹால்.
6. கிரீடம்.
7. ரேஸ்.

மேலிருந்து கீழ்:

1. முயல்.
2. சிறுத்தை வால்.
3. கத்திப் பிடி.
4. பாய்மரம்.



சாந்தகுமாரி தன் அறையில் எதையோ சிந்தித்தபடி தனியே உட்கார்ந்திருந்தாள்.

அவன் அங்கே வந்தான். 'என்ன சாந்தா! ஆபீஸுக்கு நேரம் ஆகவில்லை? இப்படி சும்மா உட்கார்ந்திருக்கிறாயே!' என்று வியப்புக் குரலில் கேட்டான்.

அந்த நேரம் சாந்தகுமாரி பரபரத்துக்கொண்டு பம்பரமாய் இயங்க வேண்டிய நேரம். சும்மா அசையாமல் சிலை மாதிரி இருந்தால், கேள்வியும் விசாரணையும் பிறக்கத்தானே செய்யும்?

அண்ணனை அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் அகன்று மலர்ந்து அவனை நோக்கின. உதடுகள் ஏனோ ஒட்டி வைத்ததுபோல் இறுகி இணைந்து நின்றன.

'சாந்தா! இன்று நீ ஆபீஸுக்குப் போகவில்லையா?'


போகவேண்டும்என்கிற ஜாடையில், தலையை ஒயிலாக அசைத்தவள் அந்த ஜாடைக்கு விளக்கம் மாதிரி வாய்திறந்து சொன்னாள்: 'ஆபீஸுக்குப் போகத்தான் வேண்டும்.'

'பின், நேரமாகிறதே.'

'இதோ, கிளம்பிவிட்டேன்'— இடத்தைவிட்டு எழுந்தாள். வழக்கமான பரபரப்பு அவளைச் சூழ்ந்துகொண்டது. பத்து நிமிடத்தில் சைகிளை எடுத்துக்கொண்டு அலுவலகத்துக்குக் கிளம்பிவிட்டாள்.

வாசலில் நின்று தங்கை ஆபீஸ் செல்வதை இரு கண்ணாலும் பார்த்தான் உமாகாந்தன். கண்ணோடு இணைந்து அவன் நெஞ்சமும் பார்த்தது. நெஞ்சத்தோடு இதயமும் இணைந்து நோக்கிற்று.

# முள்ளை முள்ளாலே



**"மயிலன்"**

லேசான பெருமூச்சுவிட்டுக்கொண்டு திரும்பினவன் 'ஏதோ மனசில் ஒரு சுமை. அது அழுத்தவும் சும்மா சிலைமாதிரி உட்கார்ந்திருக்கிறாள். வரட்டும் மாலை விசாரித்துக்கொள்ளலாம்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். சற்று நேரம் நாற்காலியில் அமர்ந்து, குருட்டு யோசனைகள் செய்துவிட்டு, அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினான். அவனும் ஆபீஸ் செல்லவேண்டுமே!

மாலை ஆறு மணிக்கு உமாகாந்தன் வீடு திரும்பினபோது, வழக்கம்போலவே டிபன், காப்பி எல்லாம் தயாராக இருந்தன. சாந்தாவும் எப்பொழுதும்போல் இன்முகம் காட்டி அவனுக்கு உபசரணை செய்தாள்.

உமாகாந்தன் மகிழ்ச்சியடைந்தான். 'சாந்தா!' என்று கலகலப்பாக அழைத்தான்.

'என்ன, அண்ணா!'

'காலையில் ஏதோ கவலையாக உட்கார்ந்திருந்தாயே. என்ன உனக்கு அப்படிக் கவலை?'

'ஒன்றும் இல்லை' என்றாள் அவள். அந்தக் குரலும் சொன்ன தோரணையும் ஏதோ இருக்கிறது என அறிவித்தன.

உமாகாந்தன் வியந்தான். ஒன்றும் இருக்காது என்பதே அவன் நினைவு. அதற்கு மாறாக, ஏதோ ஒன்று இருப்பது அவனுக்கு வியப்பை அளித்தது.

'வேலை தொந்தரவோ?'

'இல்லை.'

'உங்கள் மானேஜர் 'கடுபிடி' பண்ணாமல், ஒழுங்காக, நல்ல மனிதராக நடந்துகொள்ளுகிறார் அல்லவா?' முன்னொரு சமயம் ஏதோ புகார் சொன்னாள் அவரைப்பற்றி. அதை வைத்துக்கொண்டு இவ்வாறு கேட்டான் உமாகாந்தன்.

'ஒழுங்காய், நல்ல மனிதராய், சாதுவாய், அடக்கமாக இருக்கிறார்' என்று குறும்புச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே பதில் சொன்னாள் சாந்தா.

உமாகாந்தன் உள்ளுக்குள் மகிழ்ந்தான். 'அது சரி. பின், என்ன உனக்கு இப்பொழுது கவலை?'

'அண்ணா!' என்றாள் அவள்.

'சொல்லு' என்றான் அவன்.

'கொஞ்சம் காற்றாட வெளியே போகலாம் வா. தனியாக இருந்து சொல்ல வேண்டியது அது' என்றாள் சாந்தா.

சிறிது நேரத்தில் அண்ணனும் தங்கையும் வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினர். நல்ல காற்றைத் தேடிக்கொண்டு மெதுவாக நடந்து சென்றனர். போகிற வழியில் அதிகமான பேச்சு ஒன்றும் இல்லை. சிற்சில வார்த்தைகள், மௌனத்துக்குச் சரியான பகைப்புலம் மாதிரி அவ்வப்பொழுது இருவர் வாயினின்றும் வெளிவந்தன. இந்த அழுத்தமான மௌனத்தின் கர்ப்பத்தில் தனித்த தனிமையில் இருந்து சொல்ல வேண்டிய அந்த செய்தி உறங்கிற்று.

தங்கையின் இதயச்சுமை இறங்கியிருக்கலாம்; இல்லை, கரைந்து இருக்கலாம் என்று உமாகாந்தன் நினைத்தது சரியல்ல. உண்மையில், அது இறங்கி விடவும் இல்லை; கரைந்து போகவும் இல்லை. மறைந்து நிற்கிறது. இதோ இன்னும் சில நிமிட நேரத்தில் உதயமாகப் போகிறது!

ஃ ஃ ஃ

சத்தம், பரபரப்பு, மக்கள் நடமாட்டம் இவை அதிகம் இல்லாத பூங்கா. அதிலே ஒதுக்குப்புறமான மூலையில் தனித்துக் கிடக்கும் சிமெண்ட் ஆசனம் ஒன்று. அண்ணனும் தங்கையும் அமர்ந்துகொண்டனர்.

'சாந்தா! உன் கவலை என்ன?' என்று உமாகாந்தனே கேட்டான்.

'ஆபீஸில்...'

'ஆபீஸில் என்ன?'

'ஒருத்தன் என்னை அடிக்கடி...'

'அடிக்கடி?'

'அடிக்கடி ஒரு தினுசாகப் பார்க்கிறான்.' இதைச் சொல்ல அவள் பட்ட பாடு!

'ஒரு தினுசாக என்றால்?'—உமாகாந்தனுக்கு விளக்கம் தேவையாக இருந்தது.

குனிந்த தலையை நிமிர்த்தி, அண்ணனை ஒருதரம் பார்த்துவிட்டு, வாய் பேசாமல் மறுபடியும் தலைகுனிந்துகொண்டாள் சாந்தகுமாரி.

'ஒரு தினுசாக என்றால் என்ன சாந்தா?' என்றுவிடாமல் கேட்டான் அவன்.

சாந்தா தலையை லேசாகப் பக்கவாட்டில் திருப்பிச் சகோதரனைக் கூச்சத்தோடு நோக்கினாள். சிறிது தயக்கத்துக்குப் பின்னர் 'அண்ணா! நான் சொல்லுகிறது புரியவில்லை உனக்கு?' என்று கேட்டாள்.


அவன் தங்கையை உற்றுப் பார்த்தான். 'புரிகிறது சாந்தா, புரிகிறது' என்றவன் 'அடிக்கடி அப்படி பார்க்கிறானே?' என்று வினவினான்.

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாக அவள் தலையாட்டினாள்.

உமாகாந்தன் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்து போனான். இதற்கு என்ன செய்வது? ஒரு தடியன் அவன் தங்கையை முரட்டுத்தனமாகப் பார்க்கிறதாவது?

திடீரென்று அவன் குரல் கேட்டது: 'சாந்தா! அந்த ஆளை எனக்குக் காண்பி. நான் ஒரு காரியம் பண்ணுகிறேன். உன் கவலை விட்டுப் போகும்.'

இந்த வார்த்தைகளை உமாகாந்தன் சொன்ன தோரணை சாந்தகுமாரிக்கு அச்சத்தை விளைவித்



தது. முரட்டுத்தனமாக எதையாவது இவன் செய்துவிட்டால்–?

'அண்ணா! நான் உன் சொல்படி அவனைக் காண்பிக்கிறேன். ஆனால், நீ முரட்டுக் காரியம் ஏதாவது பண்ணி...'

'சாந்தா! அப்படி நீ ஒன்றும் பயப்பட வேண்டாம். நான் என்ன அத்தனை முரடனா? உனக்கு இது விஷயத்தில் எத்தகைய அச்சமும் வேண்டாம்.'

'ஆமாம்; நீ என்ன பண்ணப் போகிறாய்?'

'அதை இப்பொழுது சொல்லுவானேன்? போகப் போகத் தெரிகிறது.'

'எனக்குச் சொல்லக்கூடாதா?'

'வேண்டாம். ரகசியமான திட்டம்.'

உமாகாந்தன் ரகசியம் என்று சொல்லிவிட்டால், அப்புறம் மேலே பேச்சுக்கு இடம் கிடையாது. இதைச் சாந்தா அறிவாள். எனவே, 'சரி அண்ணா, உன் இஷ்டம்' என்று அவனை அவன் போக்கிலேயே விட்டுவிட்டாள்.


ஃ ஃ ஃ

உமாகாந்தன் போட்ட திட்டம் அவன் எதிர்பார்த்ததைவிடச் சுலபமாக நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இதை நினைத்து மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டான்.




சாந்தாவை அலுவலகத்தில் தொந்தரவு செய்தவனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள். இந்தப் பெண் சாந்தாவைப் போல் அரசாங்க அலுவலகம் ஒன்றில் உத்தியோகம் பார்க்கிறாள். இந்த அலுவலகம் உமாகாந்தன் அலுவலகத்துக்குச் சமீபத்தில் தான் இருக்கிறது. இத்தனை அருகில் அந்தப் பெண் இருக்கும்போது, அவன் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறத் தான் போகிறது.

விமலா — அவள் தான். சாந்தாவைப் பார்வையால் அச்சுறுத்தியவனின் தங்கை–அலுவலகம்விட்டு வெளியே வந்தாள். அவளுக்காகக் காத்திருந்த உமாகாந்தன் அவளைச் சற்று தூரம் அமைதியாகப் போகவிட்டான். பிறகு, சைகிள் பெடலை வேகமாக மிதித்து அவள் சைகிளுக்கு அருகில் வந்தான்.



'யாரோ தன்னைப் பின்தொடர்வதுபோல் விமலா உணர்ந்தாள். அவளுடைய இளநெஞ்சுக்குள் அச்சமும் அதிர்ச்சியும் புகுந்தன. அவற்றின் துடிதுடிப்பில் சைகிளை வேகமாக விட்டாள்.

உமாகாந்தன் சளைக்கவில்லை. அவளை நெருக்கமாகப் பின்தொடர்ந்து சென்றான்.

விமலா உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மூச்சுத் திணற சைகிளை வேகமாக விட்டாள். உமாகாந்தனும் அவளுடன் போட்டி போட்டான். இப்படி பதினைந்து நிமிடங்களுக்கு அவளை விரட்டிவிட்டு, இன்றைக்கு இது போதும் என்கிற திருப்தியில் வீடு திரும்பினான்.

வீட்டுக்கு நேரம் கழித்து வந்தவனைப் பார்த்து 'அண்ணா! உன் திட்டம் எந்த மட்டில் நிற்கிறது? ஏதாவது செய்தாயா?' என்று கேட்டாள் சாந்தா.

'இன்றுதான் ஆரம்பமாகியிருக்கிறது' என்றான் உமாகாந்தன்.

ஃ ஃ ஃ

அதற்கு அடுத்த நாளும் விமலாவை விரட்டிக்கொண்டு போனான் உமாகாந்தன். மூன்றாவது நாள், நான்காவது நாள், ஐந்தாவது நாள் இப்படித்தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு விடாமல் அவள் பின்னால் சென்றான். விமலா தனக்குள்ள சங்கடத்

தைத் தன் தமையனிடம் சொல்லுவாள்; அவனுக்குப் புத்திவரும் என்று எதிர்பார்த்தான் உமாகாந்தன்.

ஆறுவது நாள் காலை. அன்று விடுமுறை தினம். சாந்தா காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு விட்டு, ஏதோ புத்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு படித்துக்கொண்டிருந்தாள். வெளியே சென்றிருந்த உமாகாந்தன் அவள் அறைக்குள் வந்தான்.

'சாந்தா! அந்த 'ஆசாமி இப்பொழுது எப்படி நடந்து கொள்ளுகிறான் உன்னிடம்?' என்று கேட்டான்.

'என்ன கேட்கிறாய்?' என்றாள்.

'இல்லை; அந்த ஆசாமி உன்னிடம் எப்படி நடந்துகொள்ளுகிறான் என்று கேட்டேன்.'

'எப்படியா?' என்று தயங்கினவள் சற்று யோசித்துவிட்டு 'முன்மாதிரி அத்தனை தொல்லை இல்லை' என்று தயக்கத்தோடு சொன்னாள்.

'முன்மாதிரி இல்லை. ஆனாலும் உபத்திரவம் இருக்கிறது. அது தானே? இந்த உபத்திரவமும் இன்னும் 'சில தினங்களுக்குத் தான்' என்று பெருமையோடு தெரிவித்தான்.

'என்ன அப்படி சொல்லுகிறாய்?' என்று கேட்டவள் 'அண்ணா! உன் திட்டம் நல்ல திட்டம் போலத் தான் இருக்கிறது' என்று கேலிக் குரலில் கூறிவிட்டுச் சிரித்தாள்.

தங்கையின் சிரிப்பை நின்று நிதானிக்க உமாகாந்தனுக்கு நேரம் இல்லை. அவ்விடத்தை விட்டு நீங்கி இதர அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிட்டான்.

வருத்த திட்டம் செயலாக உருவெடுத்த ஏழாவது நாள். மாலை ஆபீஸ் விட்டதும் விமலாவுக்காகக் காத்திருந்தான் உமாகாந்தன். அவள் காம்பவுண்டை விட்டு வெளியே வரவில்லை. காத்துக் காத்து, நெஞ்சு வலித்தது அவனுக்கு. திட்டம் இன்று செயல்படவில்லையே என்கிற வருத்தத்தோடு, ஏதோ ஒரு ஏமாற்றமும் அதில் கலந்திருந்தது. விமலாவைக் காணாதது அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

அன்று வீடு வந்தவன் சாந்தாவோடு அதிகமாக ஒன்றும் பேசவில்லை. அவள் அவனைப் பேச்சுக்கு இழுத்தாள். ஆனாலும் வெற்றி அவனுக்குத்தான்; அவளுக்கு இல்லை. உடம்பு கொஞ்சம் சரி இல்லை என்று ஒரு பச்சைப் பொய்யைச் சொல்லித் தப்பித்துக்கொண்டுவிட்டான்!

❀ ❀ ❀

அதற்கு அடுத்த நாள் விமலாவைக் கண்டான். அவளைக் கண்டதும், மனசில் ஒரு குளிர்ச்சி. இது மாதிரி குளிர்ச்சியை உமாகாந்தன் இதற்கு முன்னர் அனுபவித்தது கிடையாது.

விமலாவும் அவனைப் பார்த்துவிட்டாள். அச்சம் தூண்ட, வேகமாக சைகிளை விட்டாள். உமாகாந்தன் பரபரப்போடு பின் தொடர்ந்தான்.

அன்றைக்கு அவள் சைகிள் திசை மாறி ஓடிற்று. அவன் யோசித்தான். ஏதாவது திட்டம் அவளுக்கு இருக்குமோ என்கிற சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று. மனசில் ஒருவிதக் குறுகுறுப்போடு பின்தொடர்ந்தான்.



அவள் 'டக்'கென்று சைக்கிளை நிறுத்தினாள்.

உமாகாந்தன் அருகில் சென்றான்.

'என்னை ஒரு வாரமாக இப்படி துரத்திக்கொண்டு வருகிறீர்களே. உங்கள் செயல் முறையான செயலா?' என்று கேட்டாள் அவள்.

இக்கேள்வி உமாகாந்தனைத் திகைக்க வைத்தது. எனினும் நொடிக்குள் ச மா ளி த் து க் கொண்டு 'உங்களுக்கு என்ன ஆக வேணும்?' என்று கேட்டான்.

'அதோ சினிமா தியேட்டர் தெரிகிறதே; அங்கே போய் இரண்டு டிக்கெட் எனக்காக வாங்கி வர முடியுமா?' என்றாள் அவள்.

'இதென்ன பெரிய செயல்?' என்றவன் 'எந்த வகுப்பு? எந்த ஆட்டம்? சொல்லுங்கள்; வாங்கி வருகிறேன்' என்றான்.

அவள் 'மாலைக் காட்சி இரண்டாம் வகுப்பு' என்றாள்.

'மாலைக் காட்சியா? அதற்கு அதிக நேரம் இல்லையே!' என்றவனை மேலே பேசவிடாமல் தடுத்து 'நீங்கள் இப்படியே பேசிக்கொண்டு நின்றால், இரவு ஆட்டம்கூட 'முடிந்து போய் விடும்' என்று கேலி செய்தவள் தேவமங்கைபோல் தெய்வச் சிரிப்புச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பை ரசித்துக் கொண்டு அதிக நேரம் நிற்க மாட்டாமல் உமாகாந்தன் சைகிளில் தாவி ஏறித் தியேட்டரை நோக்கி விரைந்தான். 'சில்லறை?' என்று விமலா குரல் எடுத்துக் கூவியது உமாகாந்தன் காதில் அரையும் குறையுமாக விழுந்தது!

கையில் டிக்கெட்டோடும் நெஞ்சில் சந்தேகத்தோடும் திரும்பி வந்தவன் அந்த இடத்தில் விமலா நிற்பதைக் கண்டு சந்



தேகத்தைத் தன் நெஞ்சினின்றும் நழுவ விட்டான். டிக்கெட்டை அவளிடம் நீட்டினான்.

'உங்களிடமே இருக்கட்டும். வாருங்கள் போகலாம்' என்றாள் அவள்.

'எங்கே போவது? டிக்கெட் என்னிடம் இருப்பானேன்?' என்று திகைப்போடு அவன் வினவினான்.

'அதோ அந்த ஹோட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு, இருவருமாகப் படம் பார்க்கலாம். இது என் திட்டம். உங்களுக்குச் சம்மதம் தானே?' என்றாள் விமலா.

சரி என்று தலை ஆட்டினான் உமாகாந்தன்.

ஃ ஃ ஃ

மூன்று மாதங்களுக்குப்பின். ஒரு ஞாயிற்றுக்கிழமை. அலுவலகம் இல்லாத விடுமுறை தினம். கால் இரண்டையும் மேஜையின் மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு, தலையை நாற்காலியின் பின் சட்டத்தில் சாய்த்தவண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்தான் உமாகாந்தன். சாந்தகுமாரி அங்கே தற்செயலாக வந்தாள்.

'அண்ணா! எந்தக் கோட்டைக்கு இப்பொழுது சனியன் பிடித்திருக்கிறது?' என்று உத்சாகத்துடன் கேட்டாள்.

உமாகாந்தன் முகம் திருப்பித் தங்கையைப் பார்த்தான். 'ஒரு கோட்டையும் இல்லை.'

'பின், ஏன் இந்த யோசனை?'

'சாந்தா!' என்று அழைத்தவன் மௌனமாக அவளை உற்று நோக்கினான்.

சாந்தா தமையனுக்கு அருகில் வந்தாள். 'என்ன அண்ணா?'

'அந்த ஆசாமி இன்னமும் உனக்குத் தொந்தரவாக இருக்கிறானா?' என்று அடங்கிய குரலில் மெதுவாகக் கேட்டான்.

சாந்தா தயங்கினாள்.

'ஏன் தயங்குகிறாய் சாந்தா? சும்மா சொல். அவன் இன்னமும் தொல்லை தருகிறானா உனக்கு?'

'அது கிடக்கட்டும் அண்ணா. உன் ரகசியத் திட்டம் என்ன ஆயிற்று?'

'வெற்றிதான். ஆனாலும்...'

'ஆனாலும் தோல்வியாக்கும்!'

'தோல்வி இல்லை. நான் நினைத்தது ஒன்று. முடிந்திருப்பது வேறொன்று.'

'நினைத்தபடி முடியாவிட்டாலும் வெற்றிகரமாக முடிந்திருக்கிறது அல்லவா?'

'அப்படித்தான் சொல்ல வேணும்.'

'அப்போ, விமலாவும் நீயும் திருமண நாளை நிச்சயித்து விட்டீர்களா?'

உமாகாந்தன் திடுக்கிட்டான். 'சாந்தா, உனக்கு இதெல்லாம் தெரியுமா?'

'தெரியும்.'

'எப்படி தெரியும்?'

'அது ஒரு ரகசியம். உனக்குச் சொல்லக்கூடாது.'

'போகட்டும். உன் விஷயம்...'

'என் விஷயம் என்ன? விமலா இந்த வீட்டுக்கு வந்தால், நான் அவள் வீட்டுக்குப் போகிறேன்.'

'அப்படியா சங்கதி?' என்று தங்கையை உற்று நோக்கினவனை அளப்பரிய வியப்பில் அப்படியே விட்டுவிட்டு ஏகினாள் சகோதரி சாந்தகுமாரி!



# வாத்தியாரம்மா



ஸ்ரீவத்ஸன்

'ஸ்ரீ சரஸ்வதி நமோஸ்துதே'

ஆரபி ராகத்தில் நல்ல குளுமையான சாரீரத்துடன் யாரோ கணீரென்று பாடிக் கொண்டிருந்தது கேட்டு நிலையாக நின்றுவிட்டான் சேகர்.

அந்தக் குரல்...

அவன் எங்கேயோ கேட்டுப் பழகிய குரல். இதே ஆரபி ராகப் பாட்டை அவள் பாடி அவன் தினமும் பத்து முறையாவது கேட்டிருக்கிறான்.

நிமிர்ந்து பார்த்தான்.

பாலாம்பாள் ஆரம்பப் பாடசாலை என்ற பலகை தொங்கிக் கொண்டிருந்தது.

அந்தப் பள்ளிக்கூடத்தின் உட்புறமிருந்துதான் அந்தக் குரல் கம்பீரமாக வெளிவந்து கொண்டிருந்தது.

அவள்தானா...தான் இவ்வளவு காலமாக தேடிக் கொண்டிருப்பவள் இங்குதான் இருக்கிறாளா... தான் மூன்றுமாத காலமாக இதே ஊரில் இருந்தும் கூட அவளை ஏன் சந்திக்க முடியவில்லை. அவன் மனம் இப்படியெல்லாம் எண்ணியது.

அவளைப் பார்த்துவிடத் துடித்தான்.

எவ்வளவு நேரமானாலும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துதானே ஆகவேண்டும்.

எதிர்ப்புறத்திலிருந்த மரத்தடியில் நின்று கொண்டான்.

அரை மணி சென்றது.

சிறுமிகள் கூட்டம் கூட்டமாக வெளியே வரலானார்கள். கடைசியில் சில வாத்தியாரம்மாக்கள்.

அவர்களின் நடுவே வந்து கொண்டிருந்தாள் சுசீலா.

ஆ...சுசீலாதான்.

பரபரக்க அவனைநோக்கி நடந்தான். அதே சமயம் மற்ற வாத்தியாரம்மாக்கள் முன்னிலையில் அவளைச் சந்திக்க விரும்பவில்லை.

அவள் போய்க் கொண்டிருந்தாள். அவள் ஒரு சந்து திரும்பினாள். ஒரு வீட்டு வாசலுக்குப் போய் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

அவள் வீட்டுக்குள் போன பிறகு அவன் கேட்டைத் திறந்து கொண்டு போனான்.

வீட்டுக்குள் அடி எடுத்துவைத்தான்.

'சுசீ' குரல் கரகரத்தது.

'யாரது' என்று கேட்டபடி திரும்பிய அவள் அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். ஆனால் மறு நிமிடம் சாந்தப்படுத்திக் கொண்டாள்.

'என்ன பார்க்கிறாய் சுசி. என்னைத் தெரியவில்லையா'

'தெரியாமல் என்ன'

'பின்பு தெரிந்தவளாகக் காட்டிக்கொள்ளவில்லையே'

'ஒரு தடவை தெரிந்தவளாக காட்டிக் கொண்ட அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீள முடியவில்லையே'

'நடந்ததை மறக்கவில்லையே இன்னும் நீ'

'எப்படி மறக்க முடியும்? உடலில் ஏற்பட்ட வடுவை மறக்கலாம். உள்ளத்தில் உண்டாக்கப்பட்ட வடுவை எப்படி மறக்க முடியும்'

'அப்படியானால் நான் போய் வரட்டுமா'

'உங்கள் இஷ்டம்'

'நான் இங்கு வந்தது உனக்கு பிடிக்கவில்லையா'

'பிடிக்கிறதோ இல்லையோ. மூன்று வாசல் நுழைந்து வந்தவர்களை வா என்று சொல்லாமல் இருக்க முடியுமா.'

'நான் எங்கிருக்கிறேன் என்று கூட நீ கேட்கவில்லையே. என்னைப் பற்றி அக்கறை இல்லையா உனக்கு'

'பதில் சொல்ல முடியாத கேள்வியை ஏன் கேட்கிறீர்கள்.'

'நீ வாத்தியாரம்மாவாச்சே, உனக்கா கேள்விக்குப் பதில் தெரியாது. உன்னைத் திடீர் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டேன். பிறகு ஓய்வாக வருகிறேன்'

அவள் பதில் பேசவில்லை. போங்கள் என்றும் சொல்லவில்லை. இருங்கள் என்றும் சொல்லவில்லை.

அவள் எப்படிச் சொல்ல முடியும்?

அவள் அவனைப் பத்து ஆண்டுகள் கழித்துப் பார்க்கிறாள்.

ஃ ஃ ஃ

பத்து வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அவளைப் பெண் பார்க்க சேகரும் அவன் தாயும் வந்தார்கள். அவள் பத்தாவது படித்துக் கொண்டிருந்தாள். முடித்திருந்தாள். நல்ல அழகி. சாதாரண குடும்பத்துப் பெண். தகப்பனார் மளிகைக் கடையில் கணக்கெழுதி வந்தார். சேகருக்கு அவளை அதிகம் பிடித்திருந்தது. வெள்ளை மனம் படைத்தவள்.

அவர்களுக்கு திருமணம் ஆயிற்று. மணமானவுடன் அவன் அவளைத் தான் வேலை பார்க்கும் இடத்துக்கு அழைத்துப் போனான்.

ஒரு மாதம் சென்றது. அவன் தாய் இறந்து விட்டாள். அதன் பிறகு அவர்கள் இருவரும் மிக



வும் ஆனந்த வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவளுக்கு நல்ல சாரீரம் அவளைப் பாடச் சொல்லி அவன் மகிழ்வான்.

ஒரு நாள் அவனுக்குக் கடுமையான ஜுரம் கண்டது. நண்பர்கள் ஆலோசனைப்படி அரசாங்க மருத்துவ மனையில் சேர்த்தான்.

சுசீலா அவனை மருத்துவ மனையில் சேர்த்த நாளிலிருந்து அரை உடம்பானாள். டாக்டரைக் கெஞ்சினாள்; நர்சுகளைக் கெஞ்சினாள்; அவர்கள் கருத்துடன் தன் கணவனை கவனித்துக் கொண்டால் தன் கணவனுக்கு விரைவில் குணமாகும் என்று எண்ணினாள்.

சேர்ந்த மூன்றாவது நாள். அந்த வார்டு 'ஸ்டாப் நர்ஸ்' மாற்றலாகி புது ஸ்டாப் நர்ஸ் ஒருவர் வந்தார். 'வரப் போகிற ஸ்டாப் நர்ஸ் மிகவும் கெட்டிக்காரர் கவலையில்லை' என்று மாற்றிப் போகும் ஸ்டாப் நர்ஸ் சேகரிடம் சொன்னார்.

அன்று புது நர்ஸ் வந்தார். சேகருக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் கையில் கஞ்சியுடன் வந்தாள் சுசீலா.

புது நர்ஸைப் பார்த்தாள். எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது.

'நீ கமலபதி இல்லை' அவள் அவனைக் கேட்டாள்.

அவன் உடனே 'ஆமாம். ஆனால் நீங்கள் யார்? எனக்கு நினைவு இல்லையே'

'என்னைத் தெரியவில்லையா கமலபதி. பட்டுக்கோட்டை உயர்தர பாடசாலையில் ஐந்தாவது படிவம் படிக்கும்போது தினமும் காலை ரயிலில் நான் முத்துப்




எழுத்தாளர்:—நான் அனுப்பிய "பறக்கும் மனிதன்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஆசிரியர்:—முதல்லே நம்ப முடியல்லே. இப்போ உங்களைப் பார்த்தவுடனே நிச்சயம் மனிதன் பறக்கலாம்னு முடிவுக்கு வந்துட்டேன்.


பேட்டையிலிருந்து வருவேன். நீ அதிராம்பட்டணம் ஸ்டேஷனில் வந்து ஏறுவாய். மறந்து விட்டாயா'

'ஆமாம் ஆமாம். இப்போ நினைவு வருகிறது'

ஒரு தடவை சின்னையா தெருவிலிருந்து வந்து கொண்டிருந்த ஜேம்ஸ் கூட உன்னையும் என்னையும் சேர்த்துக் கேலி செய்த போது நான் அவனை என்ன செய்தேன், என்பது நினைவு இருக்கா உனக்கு'

'எப்படி மறக்கும்? பட்டுக்கோட்டை ஸ்டேஷனிலே ஒரு நாள் 'ஸ்பெஷல் கிளாஸ்' முடிஞ்சு நான் வந்து மோஷன்லே ஏறின

போது நீ மட்டும் உள்ளே இருந்து கையைப் பிடித்து தூக்கி விடாமல் இருந்திருந்தால் என்




கால் இரண்டும் துண்டித்துப் போயிராதா'

'ஆமாம். நீ எங்கு இருக்கிறாய்?'

'இவர்தான் என் கணவர். உடம்பு ஜுரம். நல்ல வேலை தெரிந்த நர்ஸாக நீ வந்தாய் இனிக் கவலை இல்லை'

'சார், நீங்க பாக்கியசாலி' என்றார் நர்ஸ்.

'பிறகு பார்க்கிறேன் சுசி.மற்ற நோயாளிகளைப் பார்க்க வேண்டும்' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவள் கஞ்சியைக் கணவனுக்குக் கொடுத்து விட்டு அவனிடம் தான் ஐந்தாவது ஆறாவது படிவம் படித்தபோது கமலபதியிடம் காட்டிய அன்பு, அவன் செய்த உதவிகளைச் சொன்னாள்.

'கமலபதி வந்துவிட்டான். இனி எனக்கு கவலை இல்லை' என்றாள் கணவனிடம்.

ஆனால் சேகரின் மனம் என்ன நிலையில் இருந்தது என்பதை அவள் அறியவில்லை.

பள்ளியில் படிக்கும்போது நட்பு, ஜேம்ஸ் என்பவன் அவர்கள் இருவர் பெயரையும் சேர்த்துக் கேலி செய்தது, 'மோஷனில்' ஏறியவளை அவன் கையைப் பிடித்து உள்ளே இழுத்தது, சாதாரணமாகவே சந்தேக உள்ளம் கொண்டவனுக்கு இவைகள் போதாதா?





தவிரவும் நாள் தவறாது கமலபதி வருவதும் சுசி அவனிடம் அன்பாகப் பேசிப் பழகுவதும் அவனுக்கு பெட்ரோல் ஊற்றி உடலை எரிய விட்ட மாதிரி இருந்தது.

ஆனால் அவன் கண்டானா தன் உடல் நலம் அடைவதற்கான வழிகளைத்தான் அவள் கமலபதியிடம் விவாதித்தாள் என்பதை.

மறு நாள்.

டாக்டர் வந்தார். 'சார் என்னை டிஸ்சார்ஜ் செய்து விடுங்கள்' என்று கேட்டான்.

'இப்போதுதான் இரண்டு நாட்களாக உடம்பு தெளிவாக இருக்கிறது. இன்னும் ஒரு வாரம் போனால் நல்லது'

'இல்லை டாக்டர் எனக்கு 'ஹோம் ஸிக்' வந்துவிட்டது போக வேண்டும்' என்றான்.

அவர் அவனை டிஸ்சார்ஜ் செய்து விட்டார். அன்று கமலபதிக்கு இரவில் வேலை, எனவே நடந்தது அவனுக்குத் தெரியாது.

வீட்டில் கணவனுக்கு கஞ்சி தயாரித்துக் கொண்டிருந்த சுசி தன் வீட்டு வாசலில் வண்டி வந்து நிற்பதைக் கண்டாள்.

கணவன் இறங்கி உள்ளே வந்தான்.

'ஏன் வந்துவிட்டீர்கள்' பரபரப்புடன் கேட்டாள்.

'ஏன்? வரக் கூடாது என்று வேண்டிக் கொண்டாயா?'

'ஏன் கோபிக்கிறீர்கள். உடம்பு முற்றிலும் குணமான பிறகு வந்தால் நல்லதல்லவா? தவிரவும் கமலபதியும் உங்களுக்கு வேண்டியதைச் செய்வார்.'

'உன்னை கவனிக்கிற மாதிரி அக்கறையாக கமலபதி என்னை கவனிப்பதில்லை' சொல்லிவிட்டு சிரித்தான் அவன்.

'நீங்கள் என்ன பேசுகிறீர்கள்'

'நான் பேசவில்லை. அங்கு எல்லோரும் பேசுகிறார்கள்.'

'எனக்கு ஒன்றும் புரியவில்லை'

'சரியான பேச்சு. உன் பழைய காதலன் கமலபதியை மறுபடி கண்டதும் உனக்குத் தலைகால் புரியவில்லை.'

'ஏன் வீணாகக் குழப்பிக்கொள்ளுகிறீர்கள்? அவரை நான் அப்படி நினைக்கவே இல்லை. அவரும் என்னைத் தவறாக எண்ணியதில்லை.'

'நீயாகத்தானே அவனைத் தெரிந்ததாகக் காட்டிக் கொண்டாய். உண்மை உன்னையறியாமல் உன் வாயால் வந்துவிட்டது.'

'உண்மை. நான் செய்த பெருந்தவறு எனக்கு இப்போதுதான் புரிகிறது. அவனே என்னை அடையாளம் கண்டு கொள்ளாதபோது நானாகப் போய் அவனை அடையாளம் கண்டிருக்கக் கூடாது! உங்கள் உடம்புக் கவலையால் நமக்குத் தெரிந்த நர்ஸ் இருந்ததால் உடம்பை நன்றாக பார்த்துக் கொள்ள முடியுமே என்ற அளவு மீறிய ஆவலால் அறிமுகப்படுத்திக் கொண்டேன். அந்தத் தவற்றை உணர்கிறேன். மன்னியுங்கள்'

'மன்னிப்பா? உனக்கா? என் வேலையை ராஜீநாமா செய்துவிட்டு கண் காணாத இடத்துக்குப் போய் விடுகிறேன். போவதற்கு முன் உனக்கும் கமலபதிக்கும் பதிவு மணம் செய்துவைத்துவிட்டுப் போகிறேன்'

அவள் கதறினாள். அவன் அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான். அவள் பிறந்த ஊர் வந்தாள்.

ஃ ஃ ஃ

அப்புறம் அவனைப் பற்றிய தகவல் இல்லை. அவள் ஆசிரியர் பயிற்சி படித்தாள். தன் வாழ்க்கையை நடத்த வாத்தியாரம்மா வானாள்.

பத்தாண்டுகள் கடந்தன. பாலாம்பாள் ஆரம்ப பாடசாலையில் ஆசிரியையாகி வந்து இரண்டு ஆண்டாகி விட்டது. அவள் இசை ஆசிரியையாக இருந்து வந்தாள்.

சேகர்–அவனைப் பற்றிய தகவலே இல்லை. தன்னை அவன் வீட்டை விட்டு விரட்டிய பிறகு கூடப் பல தடவை அவள் அவன் வீட்டுக்குப் போய் மன்றாடியதுண்டு. ஆனால் அவன் சூட்டோடு சூடாக மறுமணம் செய்து கொண்டு விட்டான்.

அவனும் எங்கெங்கேயோ வேலை பார்த்துவிட்டு அந்த ஊருக்கு வந்து மூன்று மாதமாகிறது.

மறு நாள். அவன் வந்தான்.

அன்று அவளுக்கும் விடுமுறை.

'வந்திருக்கிறேன் சுசி' அவள் பதில் பேசவில்லை.

'ஏன் பதில் பேசவில்லை. உன்னைப் பற்றி நான் கொண்ட சந்தேகம் கொடூரமானது என்று எனக்கும் புரிந்து மூன்று வருடமாகிறது சுசி. நான் மிகவும் வருந்துகிறேன். மூன்று வருட காலமாக உன்னைத் தேடி அலைகிறேன். செய்த தவற்றுக்கு மன்னிப்புக் கேட்க நேற்றுத்தான் உன்னைப் பார்த்தேன்.

'நிரபராதியைத் தூக்கிலிட்ட பிறகு உண்மைக் குற்றவாளி சரணடைந்து யாருக்கு என்ன பயன்?'

'நான் யாரைக் கொன்றேன்'

'என்னையே கொன்றிருந்தாலும் பரவாயில்லை. பெண்ணைக் கொல்லாமல் விட்டுப் பெண்மையைக் கொன்று விட்டீர்கள்.'

'என்னை மன்னித்து என்னை ஏற்றுக் கொள் சுசி. இரண்டாவது மனைவி இறந்து மூன்று வருடமாகிவிட்டது. இனி நீ தான் எனக்கு எல்லாம்.'

'பால் தயிராக மாறிவிட்ட பிறகு அந்த தயிரில் மீண்டும் பாலைப் பார்க்க முடியுமா'

'மனைவிக்குக் கணவன்தானே எல்லாம்'

'உண்மைதான். ஆனால் நம் குடும்பத் தகராறு காரணமாக ஒருவர் அநாவசியமாக மரணத்தை தழுவிக் கொண்ட பிறகு என் மனம் மறத்துவிட்டது'

'என்ன சொல்கிறாய் சுசி'

'கமலபதியின் காரணமாகத்தான் நீங்கள் என் வாழ்க்கையை சுட்டுப் பொசுக்கி விட்டீர்கள் என்று அறிந்த கமலபதி என்ன செய்தான் தெரியுமா. 'அன்புச் சகோதரி உன் வாழ்வு பாலையாகி விட நான் காரணமாக இருந்தேன் என்றால் பொறுக்க முடியவில்லையே! இனி நான் எதற்காக உயிருடன் இருப்பது. இக்கடிதம் உன் கையில் சேர்வதற்கு சில மணி நேரங்கட்கு முன்பே நான் இவ்வுலகை விட்டுப் போயிருப்பேன்' என்று எழுதியிருந்தான். பாவம்! அவன் விஷத்தை சாப்பிட்டு மடிந்தான். அன்றே முடிவு செய்தேன். இனி இந்த உலகில் சிறுவர் சிறுமிகளின் நலத்திற்காக மட்டுமே உடலை உழைத்து வாழ வேண்டும் வேறு எந்தவிதமான விருப்பு வெறுப்புக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று. என் உறுதியைக் குலைத்து விடாதீர்கள். இங்கிருந்து போவதுடன் இனி என்னைப் பார்க்கும் முயற்சியில் இறங்காதீர்கள். நீங்கள் வருவதானது என் வாழ்க்கையை மட்டும் பாதிக்காது. இங்குள்ள ஏராளமான பள்ளிச் சிறுமிகளின் வாழ்க்கையையும் பாதித்துவிடும்.'

அவன் ஒன்றும் பேசவே இல்லை.

எழுந்தான்.


தள்ளாடித் தள்ளாடி நடந்து கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்தான்.

அவன் போவதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

'பாவம்'

அவள் வாய் முணுமுணுத்தது.

விழி ஓரத்தில் துளிர்த்த கண்ணீரைச் சுண்டு விரலால் துடைத்து விட்டுக் கொண்டாள்.




"என்ன, ஓய் கணக்குப்பிள்ளை? அந்த குத்துச்சண்டை குப்புசாமிக்கிட்டே போய் பழைய பாக்கி கேட்டுட்டு வந்தீரா?"

"என்னைப் பார்த்தாலே தெரியல்லியா?"

# உண்டியல் கலய நாயனர்

## கோமதி ஸ்வாமிநாதன்

குழந்தைப் பருவத்தில் தடித்தனமாகத் திரிந்ததால் பெற்றோரின் ஏச்சுப் பேச்சுக்கு இலக்காகிக் குடும்பத்தைத் துறந்து [illegible] படையில் சேர்ந்தார். அங்கு ஊர்வலம் நடந்தபோது கொடி பிடிக்கும் வேலை அவருக்குக் கொடுக்கப்படும். பெரிய தலைவர்கள் விஜயம் செய்யும்போது குடை பிடிக்கும் பணியையும் அவர் மேற்கொள்வார். கருமமே கண்ணாகி, ஊர்வலம் நடந்து முடிந்த வெகு நேரத்திற்குப் பின்னும் கொடியைக் கீழே வைக்காமல் அங்கு நின்றிருப்பதைக் கவனித்த தொண்டர் [illegible] தலைவர்கள் அவர் பொறுப்புணர்ச்சியைப் பாராட்டும் வகையில் அவர் கையில் உண்டியல் கலயத்தைக் கொடுத்தார்கள். வந்தது ஆபத்து! ஒரு நாள் கலயம் கனமாகக் கனத்தபோது, மெதுவாகக் கூட்டத்திலிருந்து விலகி ஒற்றையடிப் பாதையில் ஓடினார். படுபாவித் தொண்டன் ஒருவன் அதைக் கவனித்து அவரைத் துரத்திக் கொண்டு ஓடினான். வழியிலே ஒரு பாழடைந்த சிவன் கோவில் இருந்தது. கலயம் தாங்கியார் விருட்டென்று உள்ளே போய் அந்த லிங்கத்தின் முன் உண்டியல் கலயத்தை வைத்து விட்டு சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து விட்டார். அப்போது குறுக்கே ஓடிய எலி ஒன்று கலயத்தைக் கீழே கவிழ்க்க கலகலவென்று நாணயங்கள் சிதறின. உடனே லிங்கத்தின் பின்னிருந்து சிவ பெருமான் பிரத்தியட்சமானார். 'பக்தா! உன் பக்திக்கு மெச்சினோம்! நீ இனி மேல் உண்டியல் கலய நாயனர் என்று பூலோகத்தாரால் அழைக்கப்படுவாய்' என்று சொல்லி உண்டியல் கலயத்துடன் அந்தர்த்தியானமானார். வெகு நேரம் கழித்துத்தான் அந்தப் பரமசிவம் உள்ளூர் வஸ்தாத் பரம்பரை சார்பட்டா சுடலையாண்டியின் மகன் பரமசிவ பயில்வான் என்பது தெரிய வந்தது.

உண்டியல் கலய நாயனர் உதறியகை நாயனராக வெளியே வந்தார். ஆனாலும் அவருக்கு அந்தப் பெயர் என்னவோ தங்கிவிட்டது.

(இவை சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் ஆதிச்சநல்லூர்ப் பகுதியில் நடந்த கல்வெட்டு ஆராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட காகிதத் துண்டிலிருந்த சில பகுதிகள். இந்த நாயனரின் பூர்வாசிரமப் பெயர் தெரியவில்லை. இவரை என் அறுபத்திநாலாவது நாயனாராக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அஸ்ஸாமியப் பிரதிநிதி லோக் சபாவில் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டு வர நினைத்து அக் கடைசியில் மறந்தே போய் விட்டார்.)






# சுதேசமித்திரன் புத்தகசாலை

தலைமை ஆபீஸ்:

விக்டரி ஹவுஸ்,

மவுண்ட் ரோடு, சென்னை-2.

அடியிற்கண்ட ரயில்வே ஸ்டேஷன்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன

ரயில்வே ஸ்டால்கள் :

| | |
|---|---|
| 1. பெங்களூர் க. மெண்ட் | 13. பொள்ளாச்சி ஜங் |
| 2. செங்கற்பட்டு ஜங் | 14. ரெய்ச்சூர் |
| 3 கோயமுத்தூர் ஜங். | 15. தாம்பரம் |
| 4. திண்டுக்கல் ஜங். | 16. தென்காசி ஜங். |
| 5. ஈரோடு ஜங் | 17. திருநெல்வேலி ஜங். |
| 6 காரைக்குடி ஜங் | 18. திருப்பதி (கிழக்கு) |
| 7 கும்பகோணம் | 19 திருவாரூர் ஜங் |
| 8. மதராஸ் பீச் | 20 திருச்சி ஜங் |
| 9 மதுரை ஜங் | 21. தூத்துக்குடி |
| 10 மானாமதுரை ஜங். | 22. விழுப்புரம் ஜங். |
| 11 மாயவரம் ஜங். | 23 விருதுநகர் ஜங் |
| 12 ஒலவக்கோடு ஜங் | 24 விருத்தாசலம் ஜங். |

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும், தினசரி, வாரப்பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப்பத்திரிகைகளும் மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்:

சுதேசமித்திரன் புத்தகசாலை.

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோடு, சென்னை-2.

Regd No 2514.
Registerd as a Newspaper in CEYLON. The Swadesa mitran Weekly




Printed and Published By N. Rajagopalan for and on behalf of the 'Swadesamitran' Ltd., at The 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road Madras.
Editor: C. R. SRINIVASAN, B. A.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |